janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 ஏப்ரல் 03 - ஏப்ரல் 09 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 52




## உங்களை மீறி



'காஷ்மீர் ஃபைல்ஸ்' திரைப்படத்தைக் கொண்டாடி மக்கள் கடந்த காலத்திலிருந்து விட்டு விடுதலையாவதில் ஒன்றிய அரசு கண்ணாக இருக்கிறது. 'நாம் உண்மைகளை அழுத்தி மூடி மறைக்கக் கூடாது' >>>

ப 03

## திசைதிருப்பும் பாஜக



ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் வரும் வரையில் காத்திருந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு. தேர்தல் முடிந் ததற்கு பிறகு ஒவ்வொரு நாளும் பெட்ரோல், டீசல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 0.80 பைசா வீதம் >>>

ப 02

## மேலைய மார்க்சியம்



மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், பிரன்ஸ்டீன், காட்ஸ்கி, புக்காரின், பிளக்கனவ் போன்றவர்கள் மார்க்சியத்தை சமூக விஞ்ஞானமாக விளக்கினர். சமூகமானது அதற்குரிய இயக்க விதிகளைக் கொண்டு உள்ளது. இந்த விதிகளின் அடிப்படையில் சமூகம் >>>

ப 05

# பொது வேலைநிறுத்தம் மாபெரும் வெற்றி



## டி.எம்.மூர்த்தி அறிக்கை

**தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:**

இந்தியத் தொழிலாளி வர்க்கம் ஒரு மாபெரும் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறது. தொழிலாளர்களது சொந்த நலனை முன் நிறுத்துவதை விட அதிகமாக, நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கான 12 அம்சக் கோரிக்கைகளை இந்த வேலை நிறுத்தம் முன்வைத்தது.

இந்தியா முழுமையிலும் 25 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றார்கள்.

தமிழ்நாட்டில் கடந்த நான்கு மாதங்களாக, மாவட்ட மாநாடுகள், மண்டல மாநாடுகள், தெருமுனை கூட்டங்கள், ஆலை வாயிற் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. லட்சக்கணக்கான துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 44 சட்டங்களை நான்கு சட்டங்களாக சட்ட தொகுப்புகளாக சுருக்குவதால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் ஆபத்து தொடங்கி, நூறு நாள் வேலைத்திட்டத்தின் நாட்களை அதிகரித்து நகரங்களுக்கும் விரிவாக்கம் செய்வது வரை தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள், தொழிலாளர்களிடமும் பொது மக்களிடமும் விரிவாக எடுத்துச் செல்லப்பட்டன.

மத்திய மாநில பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை தொழிற்சாலைகள் அனைத்திலும் வேலைநிறுத்தம் நடந்தாலும், மக்களுக்கு அது பரவலாக தெரிவதற்கான வாய்ப்பு இல்லை. போக்குவரத்து நிறுத்தப்பட்டால் தான் மக்களுக்கு தெரியும் என்ற சூழல் உருவாகிவிட்டது. சாமானிய மக்களை பொருட்டாகவே கருதாத, தேசத்தின் சொத்துக்கள் அனைத்தையும் தனியாருக்கு தர்மம் செய்கிற, இனி நிரந்தர தொழிலாளர் என்ற முறைமையே கிடையாது என எதிர்காலச் சந்ததியை அற்றைக் கூலி ஆக்குகிற கொடுமைகளை எதிர்த்த வேலை நிறுத்தத்தை மக்கள் அறிய நடத்த வேண்டும் என்ற அழுத்தம் போக்குவரத்து கழக தொழிலாளர்கள் மீது விழுந்தது. சம்பளப் பிடித்தம், தண்டனை வரும் என்றெல்லாம் நிர்வாகங்கள் அச்சுறுத்தினாலும், அவற்றை அச்சமற்று எதிர்கொண்டு போக்குவரத்து தொழிலாளர்கள் வெற்றிகரமாக வேலை நிறுத்தம் செய்தனர். இயல்பாகவே மக்கள் மத்தியில் இது பேசுபொருள் ஆனது.

வேலைநிறுத்தம் என்ற செய்தி தமக்குத் தெரியாது என பல பயணிகளிடம் பேட்டி எடுத்து தொலைக் காட்சிகள் வெளியிட்டன. ஆனால் கடந்த நான்கு மாதத்துக்கும் அதிகமாக, வேலைநிறுத்தம் குறித்த செய்திகளை அறிக்கைகள் வாயிலாகவும் இயக்கங்கள் நடத்தியும் தொழிற்சங்கங்கள் தெரிவித்து தான் வந்தன. குறிப்பாக மாநில தலைநகரான சென்னையில் உள்ள ஊடகங்கள் இவற்றை கண்டு கொள்ளவே இல்லை. பெரு முதலாளிகளின் கையில் அச்சு மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள் இருப்பதால், 'தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன அவை போராடுகின்றன தொழிலா ளர் நலனுக்கு ஆபத்து' என்ற விஷயங்களை வெளியே செல்லவிடாமல் ஆகக் கூடிய அளவுக்கு தடுப்பதில் முனைப்பாக இருக்கிறார்கள்.

இவ்வளவு பெரிய வேலை நிறுத்தம் நடந்தும் ஒரு தொலைக்காட்சியில் கூட யாராவது ஒரு தொழிற் சங்கத் தலைவரை அழைத்து, இந்த கோரிக்கைகளை பற்றி எந்த விவாதமும் நடத்தவில்லை. ஒரு விஷயத்தை கண்டு கொள்ளாமலேயே புறக்கணித்து ஒழிக்கும் தந்திரத்தை இவை கையாண்டன.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு சம்பளம் பிடித்தம் செய்யப்படும் என்று வெளியிட்ட அறிவிப்பை பரபரப்புச் செய்தியாக வெளியிட்டு, பேட்டிகள் வேறு வாங்கி ஒளிபரப்பினார்கள். வேலை நிறுத்தம் செய்தால் அன்று சம்பளம் இல்லை என்பது உலகறிந்த உண்மை. சம்பளத்தையும் அந்த நாட்களுக்கான எதிர்கால பணப் பலன்களையும் இழந்துதான் தொழிலாளர்கள் போராடுகிறார்கள். ஆனால் வேலை நிறுத்தம் செய்யும் நாளில் இதுவரை சம்பளம் வழங்கப்பட்டது போலவும், திமுக அரசாங்கம் அதைத் தரமாட்டோம் என்று சொல்லி தொழிலாளர்களை ஏமாற்றி விட்டது போலவும் சில ஊடகங்கள் புலம்பித் தீர்த்தன.

இந்து தமிழ் திசை இதழ், தொழிலாளர்களின் வேலைநிறுத்தக் கோரிக்கைகள் நீண்டகாலமாக பேசப்படும் விஷயம் தான் எனவும், அதை பேசி தீர்க்க வேண்டும் என்றும், ஒரே நாளில் தீர்ந்து விடும் என்று எண்ணி வேலைநிறுத்தம் செய்வது சரியல்ல என்றும் தனது தலையங்கத்தில் கருத்துத் தெரிவித்திருக்கிறது.

பேசித் தீர்ப்பதற்கு தொழிற்சங்கங்கள் ஒருபோதும் மறுத்தது இல்லை. ஆனால் பேச முடியாது என்று பாஜக அரசாங்கம் தான் தொடர்ந்து மறுத்து வருகிறது. தொழிலாளர்களுடைய பிரச்சனைகளை, இந்தியாவில் தொழிலாளர் நிலை சம்பந்தமாக பேசுவதற்காக இந்திய தொழிலாளர் மாநாடு என்ற முத்தரப்பு அமைப்பு உள்ளது. ஆண்டுக்கு இரண்டு முறையாவது இதைக் கூட்டி பேச வேண்டும். கடந்த 7 ஆண்டுகளில் அந்த அமைப்பு கூட்டப்படவில்லை. பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், வைக்கும் கோரிக்கைகளை பொறுப்போடு பேசி தீர்வு ஏற்படுத்துவதற்கும் அரசு முனையவில்லை. மாறாக கார்ப்பரேட்டுகளின் நலன்களை காப்பதற்கும், அவர்களை இன்னும் பெரிய முதலாளிகள் ஆக்குவதற்குமான கொள்கைகளை நாட்டின் மீதும், தொழிலாளர்கள் மீதும் வலிந்து திணித்து வருகிறது.

இவற்றையெல்லாம் எதிர்த்து, தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து, 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகளை இயக்காமல் நிறுத்தி வைத்தனர். மாநிலமெங்கும் மிகப் பெரும்பாலான ஆட்டோ ஓட்டுனர்கள், தமது வருமானத்தை முற்றிலும் இழந்து ஆட்டோக்களை நிறுத்தி வைத்தார்கள்.

மின்சார தொழிலாளர்கள், திருச்சி பிஎச்இஎல், தூத்துக்குடி துறைமுகத் தொழிலாளர்கள் பெருமளவுக்கு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். சென்னையை சுற்றியுள்ள அசோக் லேலண்ட், சிம்சன்ஸ், ரானே, முருகப்பா குரூப், ஜெனரல் எலக்ட்ரிக் குழும நிறுவனங்களில் இரண்டு நாட்களும் முழு வேலைநிறுத்தம் நடைபெற்றது

லட்சக்கணக்கான கட்டுமான, சுமை தூக்கும், உடலுழைப்புத் தொழிலாளர்கள் முழு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

300க்கு மேற்பட்ட மையங்களில் 60,000க்கும் அதிக மான தொழிலாளர்

தொடர்ச்சி 4ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்

பெட்ரோல் விலை பதற வைக்கிறது; டீசல் விலை திடுக்கிட வைக்கிறது; கேஸ் விலையோ கிடுகிடுக்க வைக்கிறது!




இத கம்முன்னுகெட.... அப்ப திறந்த வாய... இப்ப திறக்காத... இனிமே இப்படித்தான் விலை ஏறும்!


## மேகதாது அணை கட்டுவதை எதிர்த்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னை மாவட்ட குழுக்களின் சார்பில் கர்நாடக அரசு மேகதாது அணை கட்டக் கூடாது என்பதை வலியுறுத்தியும், மக்களுக்கு பெரும்பாதிப்பு உருவாக்கும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு உயர்வை கண்டித்தும் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வடசென்னை மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார். கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர்கள் கே.சுப்பராயன் எம்.பி., மு.வீரபாண்டியன், தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.ஏழுமலை, மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் ப.கருணாநிதி உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகளும், தோழர்களும் பங்கேற்றனர்.




**பேரன்புமிக்க தோழர்களே வணக்கம்.**

**ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் வரும் வரையில் காத்திருந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு. தேர்தல் முடிந்ததற்கு பிறகு ஒவ்வொரு நாளும் பெட்ரோல், டீசல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 0.80 பைசா வீதம் உயர்த்திக் கொண்டே வருகிறது.**

ஐந்து மாநில மக்களை வஞ்சகமான முறையில் ஏமாற்றி இத்தகைய கொடுஞ்செயலை மோடி அரசு மேற்கொண்டு வருகிறது. சமையல் எரிவாயு விலையை திடீரென ரூ.50 உயர்த்தியுள்ளது. எரிபொருள் விலை உயர்வின் காரணமாக காய்கறிகள், உணவுப் பொருட்கள் அத்தியாவசியப் பண்டங்கள் மட்டுமன்றி அனைத்துப் பொருட்களின் விலையும் பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

கொடிய கொரோனாவின் காரணமாக ஏழை எளிய நடுத்தர மக்கள் மட்டுமின்றி அனைத்துப் பகுதி மக்களும் மிக கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். சிறு, குறு, நடுத்தர தொழில்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து இன்றுவரை மீள முடியவில்லை. பல தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டது இன்றுவரை திறக்கப்படவே இல்லை.

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் தங்களுக்கு ஏற்பட்ட மிகப்பெரும் இழப்பை இன்றுவரை ஈடு செய்ய முடியவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனக் கோரி நடைபெற்ற எழுச்சிமிக்க போராட்டங்களை மோடி அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

இந்நிலையில் எரிபொருள்களின் விலை உயர்வால் மேலும் மிகக் கடுமையான சுமைகளை மக்கள் சுமந்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் எரிபொருட்களின் விலையை உயர்த்துவது மக்கள் விரோதமானது மட்டுமல்ல, கடும் கண்டனத்திற்குரியது.

கடந்த 28, 29 தேதிகளில் நாடு தழுவிய 48 மணி நேர பொது வேலை நிறுத்தத்தில் தமிழகம் உள்பட நாடு முழுவதும் 25 கோடிக்கும் மேலான தொழிலார்கள், உழைப்பாளர்கள் பங்கேற்றனர்.

இவைகள் குறித்தெல்லாம், கவலைப்படாத ஒன்றிய மோடி அரசு எதேச்சதிகாரமாக செயல்பட்டு வருகிறது.

பீகார் மாநிலத்தில் பத்து வயது சிறுவன் நோய்வாய்பட்டு சிகிச்சை பலனின்றி மரணத்தை தழுவிய நிலையில், மருத்துவமனையிலிருந்து சிறுவனின் உடலை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்ல ஆம்புலன்ஸ் வசதிகூட அரசு நிர்வாகம் செய்து தரவில்லை.

இந்நிலையில் சிறுவனின் தந்தை பத்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள தனது வீட்டிற்கு இறந்து போன சிறுவனின் உடலை தோளில் சுமந்தபடி சென்ற மிகப்பெரிய கொடூரம் நடந்துள்ளது.

நாடு முழுவதும் சிறுமிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படும் அவலங்கள் தொடர்கின்றன.

உக்ரைன் நாட்டில் படித்து வந்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. படித்த பட்டதாரி இளைஞர்கள் உள்பட இளைஞர்கள் வேலையின்மையின் காரணமாக தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

வேலையின்மை என்கிற பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒன்றிய மோடி அரசு எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இதுமட்டுமல்ல, வேலையில் இருப்பவர்களுக்கும் பாதுகாப்பு அற்ற நிலையும் உள்ளது.

**அனைத்து நிறுவனங்களிலும் ஒப்பந்த ஊழியர்களாகவும், தற்காலிக ஊழியர்களாகவும், தொகுப்பூதியம், மதிப்பூதிய ஊழியர்களாகவும், அவுட்சோர்சிங் தொழிலார்களாகவும் அமர்த் தப்பட்டு அவர்களின் எதிர்காலம் நம்பிக்கை அற்ற இருள் சூழந்த வாழ்க்கையாக உள்ளது.**

ஏற்கனவே, பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து பணியாளர்கள் போராடிக் கொண்டிருக்கிற நிலையில், அவர்களது நியாயமான கோரிக்கையை ஏற்பதற்கு மாறாக பழைய ஓய்வூதியத்திட்டம் அமல்படுத்தப்பட மாட்டாது என்று ஒன்றிய அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்திருப்பது பெரும் அதிர்ச்சியையும், அதிர்வலைகளையும் ஏற்படுத்தி இருக்கிறது.

நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்காக செயல்படுத்தப்படும் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கான நிதியை சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 25% குறைத்திருப்பது கிராமப்புற பாட்டாளி களுக்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகமாகும்.

இவை போன்று மக்களின் பிரச்சினைகள் மலை போல் குவிந்து கிடக்கிறது. இவைகளைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளாத ஒன்றிய பா.ஜ.க அரசு, மக்களின் கவனத்தை திசை திருப்பக் கூடிய முறையில் சாதி, மத கலவரங்களை திட்டமிட்டு உருவாக்கி வருகிறது. ஆங்காங்கே கலவரங்களை உருவாக்கி தங்களின் அரசியல் ஆதாயங்களை பெற்று வந்த பா.ஜ.க. தற்போது கல்வி நிலையங்களிலும் கலவரங்களை உருவாக்கி வருகிறது.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் சாதி, மத வேறுபாடின்றி சகோதரர்களாக கல்வி பயின்று வந்தனர். தற்போது அவர்களிடம் சாதி, மதம் என்கிற கொடிய விஷத்தை ஊட்டி பிளவுபடுத்தி மோதலை உருவாக்கி தனது அற்பத்தனமான அரசியல் ஆதாயத்தை மேற்கொள்கிறது.

நாட்டின் பிரதமர் மோடி உலகம் சுற்றும் வாலிபனாக உலகம் முழுவதும் அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார். அவருடைய சுற்றுப் பயணத்திற்காக பல ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இதனை யாரும் கொச்சைப்படுத்தியதில்லை.

ஆனால், அண்மையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அதிகாரப்பூர்வமாக துபாய்க்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக புதிய தொழில்கள் தொடங்குவதற்காக ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதற்காக சென்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளன.

இதனை வரவேற்று பாராட்டுவதற்கு மாறாக தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, முதல்வரின் அரசு முறைப் பயணத்தை இழிவுபடுத்தி கொச்சைப்படுத்துவது கண்டிக்கத்தக்கது. இது மக்களை திசை திருப்பும் நடவடிக்கையாகும்.

பாசிச சக்தியான, வகுப்புவாத கும்பலின் மக்களை திசை திருப்பும் இத்தகைய இழி செயல்களை முறியடிக்க அரசியல் ரீதியாக மக்களை அணி திரட்டி எதிர்ப்பை பன்மடங்கு அதிகரிக்க ஆயத்தமாவோம்!

நாம் நடத்தவிருக்கிற கட்சி அமைப்பின் மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்போம்!

மீண்டும் சந்திப்போம், வணக்கம்.

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



# பெட்ரோல், டீசல் விலை உயர்வை ஒன்றிய அரசு திரும்ப பெற வேண்டும்

## இரா.முத்தரசன் பேட்டி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட நிர்வாகக்குழு மற்றும் மாவட்டக்குழு கூட்டம் தருமபுரியில் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டு பேசினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது ஐந்து மாநில தேர்தல் முடிந்த உடன் பெட்ரோல், டீசல் விலையை ஒன்றிய அரசு ஏற்றியுள்ளது.இது வன்மையான கண்டனத்திற்குரியது.

இந்த விலை ஏற்றத்தால் அத்திய வாசிய பொருட்களின் விலை உயரும். பெட்ரோல்,டீசல் விலை ஏற்றத்திற்கும், ஒன்றிய அரசுக்கும் சம்மதம் இலலை என சொல்லி மக்களை பைத்தியகாரன் ஆக்க முடியாது.. சமையல் வாயு விலையும் ஒரேயடியாக ரூ 50 விலை ஏற்றியுள்ளனர்.

திரும்ப,திரும்ப விலையை உயர்த்தி கொண்டே செல்வது கடுமையான கண்டனத்திற்கு உரியது.ஒன்றிய அரசு பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையை திரும்ப பெற வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் விரைவில் ஆர்பாட்டம் நடத்தப்படும்.

இலங்கையில் பொருளாதாரம் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இலங்கையிலிருந்து மக்கள் தமிழகத்திற்கு அகதிகளாக வருவது தொடங்கி விட்டது. அப்படி வந்த ஆறு பேரை தமிழ்நாடு போலீஸ் கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர். இனிமேல் அங்கு இருக்க முடியாது. இது மிகவும் முக்கியமான பிரச்னை. எனவே ஒன்றிய அரசும், மாநில அரசும் ஆழ்ந்து யோசித்து இலங்கை மக்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை கடற்படை தாக்குதலால் தமிழக மீனவர்களுக்கு கடும் நெருக்கடி கொடுக்கின்றனர்.இதனால் தமிழக மீனவர்களின் உயிருக்கு,உடமைக்கு, தொழிலுக்கு பாதுகாப்பு கிடையாது. மீனவர்களை கைது செய்து படகுகளை பறிமுதல் செய்கின்றனர்.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கர்நாடக அரசு மேக்கேதாட்டு அணை கட்ட முயலுவது இரு மாநில நல்லுறவை சீர்குலைக்கும் நடவடிக்கை. இப்படிப்பட்ட சூழலில் ஒன்றிய அரசு நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். ஒன்றிய அரசு கர்நாடக அரசுக்கு ஆதரவாக இருப்பது நாட்டு ஒற்றுமையை சீர்குலைக்கும் செயல் ஆகும்.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் இதற்கான நிதியை ஒன்றிய அரசு படிப்படியாக குறைத்து வருகிறது. இது தவறான செயல் ஆகும். இதை கைவிட்டு 100 நாள் வேலை என்பதை 200 நாட்களாக உயர்த்த வேண்டும் தின ஊதியம் ரூ600 உயர்த்தி வழங்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு 100 நாள் வேலை என்பதை 150 நாட்களாக உயர்த்தியுள்ளது. அதை 200 நாட்களாக உயர்த்த வேண்டும்.தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல முன் முயற்சிகள் எடுத்து வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

நிதிநிலை அறிக்கையிலும் நல்ல திட்டங்களை அறிவித்துள்ளனர். இருந்தாலும் அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதிய திட்டம் குறித்து எந்த அறிவிப்பும் இல்லை. தற்போது கடும் நிதி நெருக்கடி இருப்பதை நன்கு அறிவோம். இருந்தாலும் பழைய ஓய்வூதிய திட்டத்தை தமிழ்நாடு அரசு நிறைவேற்ற வேண்டும். தேர்தல் அறிக்கையில் அறிவித்த மகளிர் உரிமைத் தொகை ரூ 1000 தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசில் குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டைக்கு நிதி ஒதுக்கீடு செய்து உடனடியாக தொழில் தொடங்க வேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் 2வது திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து குடிநீர் பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தருமபுரி நகரம் அருகே ஏ.ரெட்டி அள்ளி கிராமத்தில் சுமார் 1000க்கும் மேற்பட்ட பட்டியலின மக்களுக்கு தமிழ்நாடு அரசு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வீட்டுமனை பட்டா வழங்கியதை மாவட்ட நிர்வாகம் ரத்து செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு இந்த மக்களுக்கு உடனடியாக நில அளவீடு செய்து பட்டா வழங்க வேண்டும். இவ்வாறு செய்தியாளர்களிடம் பேசினார்.

மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் ஜி. பழனிசாமி, ந.நஞ்சப்பன், எஸ்.தேவராசன், கா.சி. தமிழ்க்குமரன், எம்.மாதேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# உங்களை மீறி, எதிர்காலம் மக்களுக்கு உரியதாகும்



- அமர்ஜித் கவுர்






**‘காஷ்மீர் ஃபைல்ஸ்’ திரைப்படத்தைக் கொண்டாடி மக்கள் கடந்த காலத்திலிருந்து விட்டு விடுதலையாவதில் ஒன்றிய அரசு கண்ணாக இருக்கிறது. ‘நாம் உண்மைகளை அழுத்தி மூடி மறைக்கக் கூடாது’ என்கிறார் பிரதமர். இதற்கு முன்பும் இவ்வாறு அவர் கூறியுள்ளார்; 1947 ஆகஸ்ட் 14ஐ கொடுமைகள் தினமாக அனுசரிக்க வேண்டுமென அவர் முன்மொழிந்தபோது, மக்கள் அவரை எதிர்த்தனர். இக்கொடும் நிகழ்வுகளின் கொடுமைகளை ஞாகபகப்படுத்தி அவற்றிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.**

முழுவதுமாக உங்களோடு உடன்படுகிறேன் சார். இந்த முறையும் அவ்வாறே. இந்தியாவில் நிகழ்ந்த அத்தனைக் கொடுமைகளையும் நாம் நினைவு கொள்ள வேண்டும்.

இதில் என்னுடைய பிரச்சனை, கொடுமைகளை நினைவு கொள்வதில் சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டும் **(be selective)** என நீங்கள் விரும்புவதுதான்.

சபர்மதி எக்ஸ்பிரஸ் இரயில் 56வது கோச்சின் கொடுமைகளை ஞாபகப்படுத்துகிறீர்கள்; ஆனால் உங்கள் நேரடி பார்வையின் கீழ் 72 மணி நேரம் நடத்தப்பட்ட முஸ்லீம் இன ஒழிப்பு படுகொலை வேட்டை கொடுமைகளை நீங்கள் வசதியாக மறந்து விடுகிறீர்கள்.

தங்கள் சொந்த மாநிலத்தின் இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்ட லட்சக் கணக்கான முஸ்லீம்கள் குஜராத் மாநிலத்தில் தங்கிய ஒரு நிவாரண முகாமிற்குக் கூட ஒருபோதும் நீங்கள் விஜயம் செய்யவில்லை என்பதை மறந்து விட்டீர்கள். அப்போது, ‘முஸ்லீம்களைக் குழந்தைகள் உற்பத்திச் செய்யும் தொழிற் சாலைகள்’ என விமர்சனம் செய்து ‘ஹமாரே பாஞ்ச், உன்கே பச்சீஸ்’ என கேலி பேசினீர்கள்.

தங்கள் இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்ட லட்சக்கணக்கான முஸ்லீம்கள், இருபது ஆண்டுகளுக்குப் பிறகும், தங்கள் வீடுகளுக்குத் திரும்பச் செல்ல முடியவில்லை என்ற உண்மையை நீங்கள் மூடி மறைத்து மழுப்புகிறீர்கள். தங்கள் சொந்த மாநிலத்திற்குள்ளேயே அவர்கள் அச்சத்தில் வாழ்கிறார்கள்.

குறைந்த பட்சம் காஷ்மீரி பண்டிட்டுகள் ஜம்முவுக்குத் தப்பிச் செல்ல முடிந்தது, உயிரோடு இருந்து தங்கள் கதையைச் சொல்ல முடிந்தது. குஜராத்தி முஸ்லீம்களுக்கு அந்த அதிருஷ்டம்கூட வாய்க்கவில்லை.

2002 குஜராத் கலவரத்தில் 2000 முஸ்லீம்கள் பலியானார்கள் என்ற அதிகாரபூர்வ உண்மையையும் நீங்கள் மூடி மறைத்து மழுப்புகிறீர்கள்; அதே நேரம் 1990லிருந்து இறந்த காஷ்மீரி பண்டிட்டுகள் எண்ணிக்கை அதிகாரபூர்வமாக 89 மட்டுமே.

உங்கள் ஞாபகம் சிலவற்றை மட்டுமே ஞாபகப்படுத்துகிறது.

காஷ்மீர் ஃபைல்ஸ் ஏதோ நற்செய்தி உண்மை போல அந்தச் சினிமாவை நீங்கள் விளம்பரப்படுத்துகிறீர்கள்; ஆனால் நீங்கள் தான், 2002 குஜராத் கலவரங்கள் அடிப்படையில் எடுக்கப்பட்ட ‘பர்ஸானியா’ என்ற சினிமாவைத் தீவிரமாகத் தடை செய்தீர்கள்.

அத்திரைப்படம் உங்களுக்கும் உங்களது கதையாடலுக்கும் அசௌகரியமாக இருந்தது போலும். உங்கள் கைகளும்கூட அப்பாவி மக்களின் குருதியில் தோய்ந்தது என்பதை மக்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என நீங்கள் விரும்புகிறீர்கள்.

தேர்ந்தெடுத்த சில மட்டுமே உங்களுக்குக் கொடுமைகள். அதுவும் அந்நிகழ்வில் இந்துகளுக்கும் முஸ்லீம்களுமான மோதல் என்ற கதையாடல் இருக்கும்போதுதான் உங்களுக்குக் கொடுமை குறித்த விழிப்பு ஏற்படுகிறது.

மாலேகானில் தொடர்ச்சியான குண்டு வெடிப்புத் தாக்குதல்களின் 38 இஸ்லாமியர்கள் கொல்லப்பட்ட கொடுமைகள் உங்களை நெகிழச் செய்யவில்லை.

இந்திய இராணுவத்தால் சீக்கியர்கள் கொல்லப்பட்ட சித்திசிங்போரா கொடுமை உங்களை நெகிழச் செய்யவில்லை.

1984ல் சீக்கியர்களுக்கு எதிரான கலவரங்களில் நடத்தப்பட்ட சீக்கிய இனப் படுகொலை கொடுமைகள்கூட உங்களை நெகிழச் செய்யவில்லை. முதல் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆறு ஆண்டுகள் மற்றும் என்டிஏ2ன் எட்டு ஆண்டு காலத்தில் சீக்கியர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முடிவு கட்ட நீங்கள் எதுவும் செய்யவில்லை.

**இனப்படுகொலை குற்றம் சாட்டப்பட்ட காங்கிரஸைவிட நீங்கள் எந்தவகையிலும் மேம்பட்டவர் இல்லை. உண்மையில் ஒரு வகையில் நீங்கள் இன்னும் மோசமானவர்கள்.**

குறைந்தபட்சம் அவர்கள், நடந்த இனப்படுகொலைகளுக்கு வெளிப்படையாக மன்னிப்பு கோரியதுடன், அத்தகைய ஒரு நிகழ்வு நடந்திருக்கக் கூடாது என்றும் மீண்டும் இனியொரு முறை இம்மண்ணில் நடக்கக் கூடாது என்பதையும் உறுதிப்படுத்தினர்.

2002ல் உங்கள் கட்டுப்பாடு மற்றும் தலைமையின் கீழ் குஜராத்தில் நடத்தப்பட்ட முஸ்லீம்கள் இனப்படுகொலைக்கு நீங்கள் இதுவரை ஒரு வார்த்தை, குறைந்தபட்சம் வருத்தம் தொனித்ததுபோலக்கூட, சொல்லியதில்லை.

உ.பி. மாநிலத்தின் அஸம்கார்ஹ் மாவட்டக் கலவரங்களில் முஸ்லீம்கள் கொல்லபட்ட கொடுமை உங்களை நெகிழச் செய்யவில்லை.

நீங்கள் உங்கள் கதையாடலுக்குப் பொருந்துகிற மாதிரியான கொடுமைகளை மட்டுமே ஞாபகம் கொள்கிறீர்கள்.

இதுவரை பட்டியலிட்டது போதும், அடல் பிகாரி வாஜ்பேயி அவர்களே, ‘ராஜ தர்மம்’ கோட்பாட்டைப் பின்பற்றுமாறு உங்களுக்கு ஞாபகப்படுத்தினார்.

ஆனால் நீங்கள் ஒரு சந்தர்ப்பவாதி, வெறுப்பைத் தூண்டுபவர் மற்றும் வெறுப்பைப் பயன்படுத்தி தனது புகழ் கோபுரத்தைக் கட்டும் சமத்தன்மை இல்லாத ஆட்சியாளர் என்பதைத் தவிர வேறில்லை.

மேலும், ஆமாம் சார், வெறுப்பு விலைபோகிறது. அதைவிடக் கூடுதலாக மதப் பிளவுபடுத்தல் கூடுதலாக விற்பனையாகிறது. சமீபத்தில் உங்கள் கட்சி நான்கு மாநிலங்களில் அடைந்த வெற்றி அதைத்தான் நிரூபிக்கிறது. 80:20 விகிதப் பிளவுபடுத்தும் கதையாடல் இன்னும்கூட மிகவும் சக்திமிக்கதாக உள்ளது.

மிகவும் வருந்தத்தக்க வகையில், மற்ற தலைவர்களுக்கும் கூட, அதாவது தேர்தல்களில் எப்படியாவது வெற்றிபெற எண்ணும் போலி மதசார்பற்ற தலைவர்களுக்கும், நீங்கள் ஊக்கமளிக்கும் முன்னுதாரணமாக மாறிவருகிறீர்கள்; அவர்களும், பெரும்பான்மை மக்களைச் சமாதானப்படுத்தி ஈர்க்க கோயில்களுக்கு விஜயம் செய்கிறார்கள், இந்து மத அடையாளச் சின்னங்களை அணிகிறார்கள், தொலைக்காட்சி நிலைய மேடைகளிலிருந்து இந்து மத பிராத்தனை கீதம் பாடுகிறார்கள், தேர்தலில் வென்ற பிறகு வாக்குகளைத் தங்களுக்கு வளைத்துத் தந்ததற்காக கோயிலுக்கு விரைகிறார்கள். காரணம், அதுதான் வாக்களாளர்களின் இதயங்களைக் கவரவும் வெல்வதற்குமான ஒரே வழி என அவர்களும் உணர்ந்து விட்டார்கள்.

மேலும், பட்டினியால் மக்கள் மடிந்தாலும், மதத்தின் செல்வாக்கிற்கு ஆட்பட்டு அவர்கள் ‘பிறரை’ வெறுப்பார்கள் என்பதையும் புரிந்து கொண்டு விட்டார்கள்.

இவை அனைத்தையும் நிகழ்த்துவதில் நீங்கள் தேசத்தின் புனித நூலான, ‘அரசியல் அமைப்புச் சட்டத்தை’ பலிகொடுத்துவிட்டீர்கள்.

உங்களைப் போன்ற ஒருவரையும் உச்சத்தில் ஏற அனுமதித்த அந்த நூல், எந்தெந்த முறைகளிலெல்லாம் முடியுமோ அவ்வாறெல்லாம் இந்திய மக்களை சமமாக்கியது. அந்தப் புனித நூல் இந்தியர்களை இந்தியர்களாகப் பார்த்தது இந்தியர்களிடமிருந்து அவர்களது சாதி, வகுப்பு, இனம், வண்ணம் அல்லது மதத்தைக் கழித்துவிட்டு, அவர்களை இந்தியர்களாகப் பார்த்தது.

நீங்கள் அபாயகரமான வழியில் செல்வது மட்டுமல்ல, உங்களைப் பின்பற்றுபவர்களும் அபாயகரமான பாதையையே பின்பற்றுகிறார்கள். எதிர்காலம் குறித்துப் பேசுவதற்கு மாறாக நீங்கள் ஒவ்வொருவரையும் புகழ்மிக்கக் கடந்த காலத்திற்கு இழுக்கிறீர்கள் எந்தவகையிலும் அது, பயனளிக்கப் போவதில்லை.

மக்கள் இப்போது அல்லது பிறகு மூழ்குவார்கள். குழல் போன்ற இசைக் கருவியில் வெறுப்பை இசைத்து விற்கும் ‘பைடு பைப்பர்’ போன்றவர் நீங்கள். உங்களைத் தொடரும் மக்கள் வெறுப்பு நதியில் மூழ்குவார்கள். அது நிச்சயம் நடக்கும், எப்போது என்ற காலம்தான் கேள்வி, அவ்வளவே. ஆனால் அதுதான் என்னை மிகவும் கவலையுறச் செய்கிறது. அது என் இரவுகளைத் தூக்கமில்லாது செய்கிறது.

இருப்பினும், ஒவ்வொரு நாளும் நாங்கள் போராடுகிறோம், தேசத்தைச் சரியான பாதையில் நடத்த முயற்சி செய்கிறோம். அந்தப் பாதை முற்போக்கான எதிர்காலத்தைப் பார்க்கிறது, அந்தப் பாதை வளமானது, பிரகாசமானது. ஆனால் அந்த எதிர்காலம் உங்கள் சிந்தனைத் திறனுக்கு அப்பாற்பட்டது ஞ் மேலும் உங்களை மீறியும் அந்த எதிர்காலம் மக்கள் திரள் கூட்டதிற்கு உரிமையானது.

அந்த நம்பிக்கையில்தான் நாங்கள் பகத்சிங்கின் முழக்கத்தை முழங்குகிறோம், இன்குலாப் ஜிந்தாபாத் !

நன்றி : நியூ ஏஜ் (மார்ச் 27 ஏப்ரல் 2)

தமிழில் : **நீலகண்டன்**

# தோழர் ப.பா.மோகனுக்கு கோவையில் பாராட்டு விழா

நாமக்கல் கோகுல்ராஜ் சாதி ஆணவப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், அரசு வழக்கறிஞராக வழக்கை ஏற்று, வாதாடி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுத்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மூத்த வழக்கறிஞருமான பா.ப.மோகன் அவர்களுக்கு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து பாராட்டு விழா நடத்தியது.

இதில் கலந்துகொண்டு தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநில துணை பொதுச் செயலாளர் ஆதவன் தீட்சண்யா பேசும்போது, தோழர் ப.பா. மோகன் அவர்களுக்கு ஊர் ஊராக பாராட்டு விழாக்கள் நடத்தப்படுகிறது அதைப் பெருமையோடு ஏற்கிறோம்.

யுவராஜ் மீதான தீர்ப்பு சமூகத்தில் என்ன விதமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவனை ஆதரிப்பவர்கள் எவ்விதமான நகர்வுகளை முன்னெடுக்கிறார்கள் என்பதை நாம் கவனப்படுத்த வேண்டும். யுவராஜ் வஞ்சிக்கப்பட்டு விட்டதாகவும், அவனை மீட்க சாதி ரீதியாக அணி திரள வேண்டும் என்று சிலர் அணி திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். பகிரங்கமாக நிதி உதவிக்கு அழைப்பும் விடுத்திருக்கிறார்கள்.

யுவராஜ் முகநூல் பக்கத்தில் அவனுக்கு யாரெல்லாம் நிதி உதவி செய்தார்கள் என்ற விவரத்தையும் பட்டியலிட்டு இருந்தான்.

சாதி ஆணவக் கொலை மிகக் கொடூரமானது. கொலைகாரன் யுவராஜ் மிகக் கொடூரமானவன். ஆனால், அவனை விடவும் மிகக் கொடூரமானவர்கள், சாதி ஆணவத்தை நிலைநிறுத்த நிதி அளிப்புவர்களும், இயக்கம் துவக்கி அணிதிரட்டி கொண்டிருப்பவர்கள் தான் என்று பேசினார்.

முன்னதாகப் பேசிய வழக்கறிஞர் கே.சுப்ரமணியன், இந்த வழக்கை நடத்துவதற்கு தோழர் ப.பா.மோகன் அவர்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் இருந்துள்ளது. கடந்த கால அனுபவத்தில் இருந்து தனது முழுத் திறமையையும் பயன்படுத்தி வாதாடி பெறப்பட்டது தான் இந்த வழக்கின் நீதி என்று குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சிக்கு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநில துணைப் பொதுச் செயலாளர் யூ.கே. சிவஞானம் தலைமை தாங் கினார். தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட தலைவர் பி. முருகன் முன்னிலை வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.எஸ் சுந்தரம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில குழு உறுப்பினர் சி. பத்மநாபன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் கோவை மாவட்ட செயலாளர் அ.அஸ்ரப் அலி, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாவட்ட செயலாளர் இரா.ஆறுச்சாமி, ஆர். கோபால்சங்கர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

**மலர்** 84 **இதழ்** 52

# நொடித்துப் போன இலங்கை, வெடித்தெழும் போராட்டங்கள்!

இலங்கையில் இனப்படுகொலை நடந்தபோது இந்திய கடலோரங்களில் வந்து இறங்கிய தமிழர்களைப் போல இன்று மீண்டும் குடும்பம், குடும்பமாக தமிழக கடலோரங்களான இராமேஸ்வரம், மண்டபம் உள்ளிட்ட இடங்களில் வந்து இறங்குகின்றனர்.

சாதாரண ஏழை எளிய இலங்கை வாழ் தமிழர்கள் தங்களிடம் இருந்த உடைமைகளை விற்றுவிட்டு தலைக்கு ரூ.10,000 கட்டி சட்டவிரோத படகு களின் மூலம் இந்திய கடலோர பகுதிகளில் வந்து இறங்குகின்றனர்.

இது சட்டவிரோதமாக இருந்தாலும் அவர்களை அகதிகளாகத்தான் கருத வேண்டும் என்று சர்வதேச சட்டங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

கடந்த 2009ஆம் ஆண்டு ஒரு பாரிய இனப்படுகொலையை நடத்திய சிங்கள பெரும்பான்மைவாத அரசு இன்று நொடித்து போன பொருளா தாரத்தையும் வெடித்து எழும் மக்கள் போராட்டங்களையும் எதிர்கொண்டு வருகிறது.

சிங்கள பவுத்த பேரினவாத கொள்கைகளை முன்னிறுத்தி அரசியல் அறுவடைகளை நிகழ்த்தினாலும், அது கடைபிடித்த தவறான உலகமய பொருளாதார கொள்கையால் இன்று சாயம் வெளுத்து சொந்த மக்கள் முன்னால் அம்மணப்பட்டு நிற்கிறது அரசு.

பெரும்பான்மைவாத வலதுசாரி அரசியலுக்கு இது ஒரு எச்சரிக்கை. அத்தியாவசியப் பொருட்களின் கடும் விலை உயர்வால் இன்று மக்கள் விழிபிதுங்கி நிற்கிறார்கள். பெட்ரோல் விலை இலங்கை ரூபாயில் 270ஐ தாண்டி விட்டது. சமையல் எரிவாயு விலையின் விலையோ ரூ.4170ஐ தாண்டி விட்டது. பால் பவுடர் பாக்கெட் ஒரு கிலோ ரூ.2000. ஒரு டீ யின் விலை ரூ.100 என்றாகியுள்ளது. அத்துடன் நாடுமுழுவதும் மின் தட்டுப் பாடு எங்கும் தலைவிரித்தாடுகிறது. அதனால் குடிநீர் வினியோகம், மருந்து மற்றும் உணவுப் பொருட்களுக்கு நாள் கணக்கில் மக்கள் காத்துக் கிடக் கும் அவலம் நடந்து வருகிறது. பெட்ரோல் கிடைக்காமல் பெட்ரோல் பங்கு களின் முன்பு மக்கள் வரிசையில் நிற்கும்போது கலவரம் ஏற்படுகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விற்கப்படும் இடங்களில் பெரும் மக்கள் கூட்டத்தை சந்தித்த வண்ணம் உள்ளது.

இந்த நிலையில் இலங்கை அரசு இந்தியாவின் உதவியை நாடி உள்ளது. 2.4 பில்லியன் அமெரிக்க டாலரை தங்களுக்கு அளித்து இந்தியா உதவ வேண்டும் என்றும், அதில் ஒரு பில்லியன் டாலர் அளவிற்கு அத்தி யாவசியப் பொருட்களை கடனாக அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளது. அதுபோலவே சீனாவிடமும், சர்வதேசிய நிதியத்திடமும் கடன்கள் கேட்டு கதவை தட்டி வருகிறது.

அதுவும் ஏப்ரல் மாத மத்தியில் வர இருக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் இந்த நெருக்கடி மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இலங்கைக்கு ஏன் இந்த நெருக்கடி?

இலங்கை கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு ஒரு பெரும் பொருளாதார சீரழிவை சந்தித்து வருகிறது. அதிகப்படியான கடன் மூல மாகத்தான் இலங்கை தற்போது திவால் நிலையை அடைந்துள்ளது என்று சர்வதேச நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் ரூபாய் மதிப்பு குறைந்து கொண்டே போனது. ஆனால் அதை சரி செய்ய அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பண வீக்கம் அதிகரித்து உணவுப் பொருட்களின் விலையும் அதிகரிக்க தொடங்கி உள்ளது. சிறிய நாடான இலங்கை தனது பெரிய இராணுவத்திற்கு நிதியை அளவுக்கு அதிகமாக ஒதுக்கி செலவு செய்வதால் இந்தப் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது.

அதுவும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆறு தமிழருக்கு ஒரு ராணுவத்தினர் இறுதிப் போர் முடிந் தும் இன்றும் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். தமிழர் பிரச்சினையை தீர்த்து அதிகார பகிர்வின் மூலம் இராணுவச் செலவை குறைக்க வேண்டும்.

2021 முதல் விவசாயம் அனைத்தும் நூறு சதம் இயற்கை விவசாயம் என்று அறிவித்தனர். இதனால் தேயிலை உற்பத்தி மிகவும் பாதிப்படைந்தது. 2021 செப்டம்பரில் பொருளாதார அவசர நிலையை அறிவித்தது அரசு.

கொரோனா காலம் இலங்கைக்கு வருமானம் ஈட்டும் சுற்றுலாவை முடக்கி போட்டது. தேயிலை, சுற்றுலா, ஆடை உற்பத்தி ஆகிய மூன்றும்தான் அவர்களுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்த மிக முக்கியமான ஏற்றுமதி சரக்குகளாகும். அவை முற்றாக அடைபட்டது.

ஏற்கனவே இதோடு இலங்கை வாங்கிய கடன்களும் சேர்ந்து இன்று மூச்சுத் திணற வைத்துவிட்டது. இன அழிப்பு குற்றத்திற்கு உள்ளான இலங்கை அதிபர் கோத்தபய ராஜபக்ஷேவும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷேவும் இனவெறியையும் பெரும்பான்மை மதவெறியையும் இணைத்து ஆட்சிக்கு வந்திருந்தாலும் இன்று சிங்கள மக்களை திருப்திபடுத்த முடியாத சூழலுக்கு நாட்டை விட்டுச் சென்று விட்டனர்.

ஏற்கனவே தமிழர்கள் பொருளாதாரத் தடையால் போர்க்காலங்களில் என்ன துன்பங்களை அனுபவித்தார்களோ அவற்றை இன்று சிங்கள மக்களும் அனுபவிக்கின்றனர்.

தமிழர்களின் வலி இப்போதுதான் சிங்கள நடுநிலையாளர்களுக்குத் தெரியவருகிறது.

இலங்கை கடன் கேட்டு இந்தியாவை நெருங்க வரும் இந்த நேரத்தில் ஏற்கனவே உள்ள இலங்கை இந்திய ஒப்பந்தமான 1987ன் அடிப்ப டையில் 13வது சட்டத்திருத்தம் கொண்டுவந்து தமிழர்களின் தாயகப் பகுதி களை ஒன்றிணைத்து மாநில அந்தஸ்து பெறுவதற்கு இந்திய அரசு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து நிறைவேற்ற வேண்டும். தமிழர்களிடம் களவாடப்பட்ட நிலங்களை திரும்பப் பெறுவதற்கும், தமிழர் பகுதியில் நிலைபெற்றிருக்கிற ராணுவத்தை அகற்றி தமிழ் மக்கள் சுதந்திரமாக சுவாசிக்கவும், தமிழர்களை மீள்குடியேற்றம் செய்யவும் வழி ஏற்படுத்த மோடி தலைமையிலான ஒன்றிய அரசு ராஜ தந்திர நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும்.

# இந்திய இரயில்வேயின் மோசமான சரிவு

## பினாய் விஸ்வம் நாடாளுமன்றத்தில் உரை



**“ஒன்றிய அரசின் கொள்கை நாட்டின் நன்மைக்கானதாகவும் இல்லை, மக்களுக்குப் பயனளிப்பதாகவும் இல்லை. இந்திய இரயில்வே முன்பு தேச வாழ்வின் ஜீவ ஓட்டமாக விளங்கியதை அனைவரும் அறிவார்கள்” என இரயில்வே அமைச்சகச் செயல்பாடு குறித்து நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியச் செயலாளர் பினாய் விஸ்வம் எம்பி ஆற்றிய உரை வருமாறு:**

“மாமேதை காரல் மார்க்ஸின் புகழ்பெற்ற மேற்கோள் என் நினைவுக்கு வருகிறது, நீங்களும் அதை அறிந்திருக்கலாம். நூற்று எழுபது ஆண்டுகளுக்குப் முன்பு இந்தியாவில் இர யில்வே தொடங்கப்பட்டபோது மார்க்ஸ் அதை எழுதினார்: ‘இர யில்வே மற்றும் ஆங்கிலக் கல்வியைத் தொடங்கியதன் மூலம் பிரிட்டிஷ் காலனிய மாஸ்டர்கள் தங்களை அறியாமலேயே வரலாற்றின் கைகளில் ஒரு கருவியைத் தந்து விட்டார்கள்’. மார்க்ஸ் சரியாகத்தான் கூறினார். இந்தியாவுக்குச் சாதகமாக அவர்கள் இரயில்வேயைத் தொடங்கவில்லை; பிரிட்டிஷ்காரர்களின் நோக்கம், இந்தியக் காடுகளில் வெட்டப்பட்ட அரிய பெரும் மரங்களையும், அறுவடை செய்த பருத்தியையும் இந்தியத் துறைமுகங்களுக்குக் கொண்டு சென்று அவற்றை இங்கிலாந்தின் மான்செஸ்டர் மற்றும் ஆலைகள் உள்ள பிற இடங்களுக்கும் ஏற்றுமதி செய்வதே.

ஆனால் இரயில்வே இந்தியாவின் முகத்தை மாற்றியது, விடுதலைப் போராட்டத்திற்குப் புதிய உத்வேகம் அளித்தது. இர யில்வே இந்திய மக்களை ஒருவரை ஒருவர் அறியச் செய்தது; விடுதலை இயக்கத்தில் பெரும் உற்சாகத்தைத் தூண்டியது. அந்த வகையில் இரயில்வேயை நாம் இந்தியாவின் அக்கறை என்கிறோம். பாஜக அதை நினைவில் கொள்ள வேண்டும். அந்த இரயில்வேத் துறைதான் பாஜக ஆட்சியின் கீழ் பெரும் இடர்பாடுகளைச் சந்திக்கிறது; அரசின் கொள்கைகள் தேச முன்னேற்றத்திற்கு எவ்வகையிலும் உதவுவதாக இல்லை. மாறாக அவை, உண்மையில் இந்திய இரயில்வேயின் உண்மையான வளர்ச்சியைச் சீர்குலைக்கின்றன.

நம் நாட்டில் மிகப் பெரும் வேலைவாய்ப்புகளை அளிப்பது இரயில்வே. அதில் 30 லட்சம் தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர். ஆனால் இன்று, அந்தத் துறையிலேயே வேலை யில்லா திண்டாட்டம். இன்றைய நாளில் இரயில்வே காலிப் பணியிடங்கள் எண்ணிக்கையை நினைக்கவே துன்பமாக உள்ளது. எப்போது காலியிடங்கள் நிரப்பப்படும் என்ற அறி விப்பை இந்த மாமன்றத்தில் அறிவிக்க வேண்டும் என இரயில்வே அமைச்சரை நான் வேண்டுகிறேன்.

பாட்னாவில் என்ன நடந்தது என்பதை நாம் அறிவோம். அங்கே ஒரு லட்சத்து 25ஆயிரம் பேர் வேலைக்கான மனு செய்ய முயன்றார்கள். அறிவிக்கப்பட்ட காலிப் பணி யிடங்கள் எவ்வளவு தெரியுமா? வெறும் 35 ஆயிரம். அதற்கு ஒன்னே கால் இலட்சம் இளைஞர்கள் மனு செய்கின்றனர். பெரும்பான்மையோர் நல்ல தகுதி பெற்றவர்கள், அவர்களில் பொறியாளர்கள், தொழில் தகுதி பெற்றவர்கள் உண்டு. பாட்னா தெருக்களிலும் உபியின் சில பகுதிகளிலும் மனு செய்வதில் குழப்பம் ஏற்பட்டது. நீங்கள் அறிந்த இவை, காலிப்பணியிடங்களை நிரப்பாது இரயில்வே அடம் பிடிப்பதைக் காட்டுகிறது. நாட்டில் நிலவும் கடுமையான வேலை யில்லா நிலைமையைக் கருதி, இப்பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும் என இம்மாமன்றம் அரசை வற்புறுத்திக் கோருகிறது. அமைச்சர் தம் பதிலுரையின்போது குறிப்பிட்ட கால வரையறைக்குள் பணியிடங்களை நிரப்புவது குறித்து அறிக்கை வெளியிட வேண்டும்.

இரயில்வேத் துறையில் ஊழியர்கள் தற்போது ஓய்வு பெற்று வருகிறார்கள். அப்படி ஓய்வு பெறும்போது புதிய ஆளெடுப்பு நடப்பதில்லை. அதற்கு மாறாக, பணியிடங்களுக்கு ஒப்பந்த ஊழியர்கள் அமர்த்தப்படுகிறார்கள். ஓய்வு பெற்ற ஊழியர்களும் மீண்டும் ஒப்பந்த ஊழியர்களாக, குறைந்த கூலிக்கு வந்து, அவர்களும் சுரண்டலுக்கு ஆளாகின்றனர். இரயில்வே துறை பொதுத்துறை நிறுவனம் என்ற வகையில் சமூக அக்கறைகளையும் கடப்பாடுகளையும் உயர்த்திப் பிடிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது உங்கள் ஆட்சியின் கீழ் அரசு மற்றும் இரல்வேயின் சமூகப் பொறுப்புகள் முழுமையாக மறக்கப்பட்டு விட்டன.

நீங்கள் இரயில்வே வளர்ச்சி பற்றிப் பேசுகிறீர்கள், ஆனால் அந்த வளர்ச்சிப் பாதை உண்மை அல்ல. எனவே நாங்கள் அதைக் கடுமையாக எதிர்க்கிறோம். நாட்டின் ஒவ்வொரு துறையிலும் நாங்கள் காண்பது போலவே இரயில்வேயிலும் தனியார்மயத் தாக்குதலின் சீற்றத்தை நாங்கள் உணர்கிறோம். தற்போது இரயில்வே விற்பனைக்கு வந்து விட்டது, உங்கள் அரசும் அதில் மிகவும் ஆர்வமாக உள்ளது. இரயில்வே, அதன் இருப்புப் பாதை, இரயில் நிலையங்கள் என அனைத்தையும் தனியாருக்கு விற்பதில் ஆர்வமாக உள்ளீர்கள் என்பதை அறிவோம். அதற்குத்தான் நீங்கள் முயற்சி செய்கிறீர்கள் என்பதும் தெரியும் இது அநீதி.

நாம் சந்திக்கும் சில பிரச்சனைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். கேரளா இந்தியாவின் ஒரு பகுதி என நாம் மிக வலிமையாக, உறுதியாக நம்புகிறோம், ஆனால் இந்த அரசு அடிக்கடி அதை மறந்து விடுகிறது. கேரளாவின் இரயில்வே வட்டத்தின் சில இரயில்வே திட்டங்களைப் பட்டியலிட்டு அது குறித்த இந்த அரசின் அணுகுறையைச் சொல்ல முடியுமா? கேரளாவுக்கு நீங்கள் உறுதி அளித்த கோச் பேக்டரி எங்கே? அதற்கு என்ன ஆயிற்று சொல்லுங்கள்? இர யில்வே இருப்புப் பாதை வழித்தடங்களை இரட்டிப்பாக்குவது, அகல இரயில்பாதை மேம்பாடு என்னவாயிற்று? கேரளாவுக்கு அங்கே நீங்கள் அறிவித்த சலுகைகள் என்னவானது? முன்பு இயக்கப்பட்டு வந்த பயணிகள் இரயில் வண்டிகள் நிறுத்தப்பட்டது என்னவானது? இந்தக் கேள்விகளுக்கு அரசிடமிருந்து நாங்கள் பதிலை எதிர்பார்க்கிறோம்.

அடுத்த ஆண்டிலிருந்து தொழிலாளர்களுக்கு நீங்கள் வழங்க உள்ள புதிய பென்ஷன் திட்டம் தொழிலாளர் விரோதமானது என்பதை உங்களுக்கு மிகத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறோம். அது தொழிலாளர்களின் நலனுக்கானது அல்ல, எனவே அதை அமல்படுத்த வேண்டாம். இரயில்வே ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் தேவை என நாங்கள் எதிர்பார்க்கிறோம். இலட்சோப லட்சம் ஊழியர்கள் அதற்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய ஊதியம், அதன் மேம்பாடு மற்றும் ஊதிய மாற்றம் என்னவா யிற்று?

**தனியார்மயம் குறித்த உங்கள் கொள்கை என்ன? வந்தே பாரத் ரயில்களின் பின்னுள்ள உண்மை யாது? 400 வந்தே பாரத் ரயில்களுக்கு உறுதியளித்தீர்களே, உண்மையில் எவ்வளவு தொடங்கப்பட்டது? உறுதியளித்த 400ல் வெறும் இரண்டே உண்மையில் தொடங்கப்பட்டது. இது அரசு திவால் ஆனதையே காட்டுகிறது.**

அதேபோல, ரயில்கள் மற்றும் ரயில் வழித் தடங்களைத் தனியார்மயப்படுத்த நீங்கள் வழங்கிய டெண்டர் முன்மொழிவுகளைப் பார்க்கிறோம். 12 தொகுதிகளாக (க்ளஸ்டர்கள்) மொத்தம் 151 ரயில்களை நீங்கள் வழங்கினீர்கள் என்பதை அறிவீர்கள். அதில் எவ்வளவு டெண்டர்கள் கோரப்பட்டன? ஒன்பது க்ளஸ்டர்களில் எந்த ஒன்றையும் கோரி தனியார் டெண்டர்கள் வரவில்லை நீங்கள் வழங்கியதை ஏற்க யாரும் முன்வரவில்லை. ஐந்து டெண்டர்கள் மட்டுமே கோரப்பட்டுள்ளன. இதன் பொருள் யாதெனில், தனியார்களும்கூட உங்களை நம்பவில்லை என்பதுதான். யார் அவர்கள்? உங்கள் நண்பர்கள், சகாக்கள், ஒன்றுவிட்ட உறவுகள் அப்படிப்பட்டவர்கள்கூட உங்களை நம்பவில்லை.

எனவே, தயவு செய்து இரயில்வேக்கு ஒரு சமூகக் கடப்பாடு இருப்பதைப் புரிந்து கொள்ளுங்கள். கேரளா குறித்து ஒரு வார்த்தை சொல்வேன். கேரள அரசு ஓர் இடதுசாரி அரசு, மக்களின் உரிமைகளை மறக்காதது. அந்த அரசு சுற்றுப்புறச் சூழலியல் குறித்த அக்கறைகளை மறவாதது. மக்களின் வாழ்க்கை, அவர்களின் தேவை, அக்கறை மற்றும் சூழலியல் இவற்றைக் கருத்தில் கொண்டு, கேஇரயில் ப்ராஜெக்ட் மட்டுமே அமல்படுத்தப்படும் என அந்த அரசு உறுதியளித்துள்ளது. அதுதான் கேரள அரசின் நிலைபாடு, அதைத்தான் கேரள முதலமைச்சர் கூறினார், நாங்கள் அதில் உறுதியாக நிற்கிறோம்.”

நன்றி : நியூ ஏஜ், தமிழில்: **நீலகண்டன்**

>> 1ம் பக்கத் தொடர்ச்சி

கள், வேலை நிறுத் தத்தின் முதல் நாளன்று மறியல் செய்து கைதாகினர். சென்னையில் கைதானவர்களை அழைத்துச்செல்ல போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இல்லாமலும், வைக்க இடம் கிடைக் காமலும் காவல்துறை திணறியது. அதேபோலவே மார்ச் 29ஆம் தேதி அனைத்து மாவட்டங்களிலும் ஏராளமான மையங்களில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப் பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஆட்சியதிகாரத்தில் இருந்தாலே போராட்டங்களை எதிர்க்க வேண்டும் என்ற அணுகு முறையை மாற்றி, தொழிற்சங்கங்களுக்கு நேரம் ஒதுக்கி, வேலைநிறுத்தக் கோரிக்கைகளை பரிவோடு கேட்டறிந்த தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சருக்கு ஏஐடியூசி நன்றி தெரி விக்கிறது.

தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்ற கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தந்தமைக்காக அவற்றுக்கு ஏஐடியூசி நன்றியைத் தெரிவிக்கிறது. வேலை நிறுத்தம் குறித்த செய்தியையும் கோரிக்கைகளையும் தொழிலாளர்களிடமும் பொதுமக்களி டமும் எடுத்துச் செல்ல தொடர்ந்து பணியாற்றி, வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை தமிழ்நாடு ஏஐடியூசி நெஞ்சாரப் பாராட்டுகிறது. மறியல் செய்து கைதாகியும், ஆர்ப்பாட்டங்களை நடத்தியும் பொதுமக்கள் அறியும் வண்ணம் வேலை நிறுத்தத்தைச் செய்தியாக்கிய தொழி லாளர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது.

வேலை நிறுத்த கோரிக்கைகள் வெற்றி பெறும்வரை தொடர்ந்து போராடுவோம். போராட்டங்கள் தோற்றதே இல்லை.

தத்துவார்த்தம் 22



எஸ். தோதாத்ரி

# மேலைய மார்க்சியம்



**மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், பிரன்ஸ்டீன், காட்ஸ்கி, புக்காரின், பிளக்கனவ் போன்றவர்கள் மார்க்சியத்தை சமூக விஞ்ஞானமாக விளக்கினர். சமூகமானது அதற்குரிய இயக்க விதிகளைக் கொண்டு உள்ளது. இந்த விதிகளின் அடிப்படையில் சமூகம் இயங்குகிறது என்று அவர்கள் கூறினர். சமூக இயக்கங்களுக்குக் காரணங்களை அவர்கள் சுட்டிக் காட்டினர். ஒவ்வொரு சமூக மாற்றத்திற்கும் பின்னால் அடிப்படைக் காரணி உண்டு என்று கூறினர். அதைப் பொருள் உற்பத்தி முறையிலும் உற்பத்தி உறவுகளிலும் கண்டனர். இந்த முறையில் மார்க்சியமானது ஒரு விஞ்ஞானமாக மாறியது. இதற்கு நேர் எதிரானது மேலைய மார்க்சியம். அவர்கள் மார்க்சியத்தை ஒரு விஞ்ஞானமாகக் கருதவில்லை. அதனை ஒரு விமர்சன ஆயுதமாகக் கருதினர்.**

முதலாளித்துவ சமூகத்தை விமர்சனம் செய்வதுதான் மார்க்சியம் என்று அவர்கள் கூறினர்.

அதுமட்டுமல்ல காரணகாரியத் தொடர்பினை அவர்கள் மறுக்கின்றனர். மார்க்சியம் என்பது காரண காரியத் தொடர்புடைய எந்தவொரு அமைப்பையும் விமர்சனம் செய்வதற்கான ஒரு ஆயுதம் என்றே அவர்கள் கருதுகின்றனர்.

மார்க்சியத் தத்துவத்திற்கான அடிப்படை இயங்கியல் பொருள் முதல்வாதம். இந்த அடிப் படையில்தான் மார்க்சியம் உலக நிகழ்ச்சிகள் அனைத்தையும் காண்கிறது. இதன் காரணமாகக் கருத்து முதல்வாதிகளுக்கு எதிராக மார்க்சியர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். கருத்து முதல்வாதிகள் மனமே பிரதானம் என்கின்றனர். மனிதன் அறிவுபெறும் வழியில் உணர்வின் பங்கினை அதிகமாக வலியுறுத்துகின்றனர். எதார்த்தம் என்பது மனம் அல்லது உணர்வுதான் என்கின்றனர். இதன் வெளிப்பாடுதான் ஹெகலின் முழுமுதற்கருத்து (கிதீஃஷீறீஷீ-ீ மீபீமீணீ) ஆதிசங்கரரின் பரமாத்மா; இராமானுஜரின் பரபிரம்மம் ஆகியவை ஆகும். மேலைய மார்க்சியவாதிகள் மார்க்சியத்தில் இருந்து விலகி மனதிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

மேலைய மார்க்சியவாதிகள் ஹெகலின் கருத்துக்களில் அனுதாபம் உள்ளவர்கள். மார்க்சியத்தின் இயங்கியல் பொருள் முதல்வாதத்தைக் கடுமையாக விமர்சிப்பவர்கள் அது விஞ்ஞானத்தன்மை உள்ளது என்று கூறுகிறார்கள். காரண காரியத் தொடர்பில் அறிவு தோன்றுகிறது என்பதை விட, அது மனித உள்ளுணர்வினால் தோன்றுகிறது என்ற கருத்தை மேலைய மார்க்சியவாதிகள் முன்வைக்கின்றனர். இதன் காரணமாக மார்க்சிய அறிவுத் தோற்றக் கொள்கை மேலைய மார்க்சியர்களின் கொள்கையுடன் முரண்படுகிறது. அவர்களால் இயங்கியல் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்துடன் இணைந்துபோக முடியவில்லை. இந்தப் போக்கினை ஞானி, தமிழவன், எஸ்.என்.நாகராஜன் ஆகியோரிடம் காணலாம். ஞானி எக்சிஸ் டென்சியலிச வழியில் மார்க்சியத்தை விளக்க முற்படுகிறார்.

எஸ். என். நாகராஜன் இந்து மதத்தில் (தென்கலை வைணவத்தின்) கருத்துக்களை மார்க்சியத்துடன் இணைத்துக் காண முயலுகிறார். தமிழவன் அமைப்பியல் ரீதியில் மார்க்சியத்தை அணுகுகிறார். (அமைப்பியல் உருவவாதத்தில் ஒருவகை என்பதை மறந்துவிடக் கூடாது) இதன் விளைவாக இவர்களிடம் பல நிவர்த்திக்க முடியாத முரண்பாடுகள் காணப்படுகின்றன.

மேலைய மார்க்சியர்கள் ஹெகலின் கருத்துக்களை மார்க்சின் பெயரால் புத்துயிர் ஊட்ட விரும்பினார்கள். லூகாக்ஸ் ஹெகலியச் சாயல் உள்ளவராகவே இருந்தார். கிராம்சியிடம் இந்தப் போக்கு உண்டு. அது மட்டுமல்ல இந்தக் கருத்து முதல்வாதப் போக்கினை அவர்கள் அதிகம் பேசுவதற்கு மார்க்சின் ஆரம்ப காலப்படைப்பான "1844 பொருளாதார, தத்துவக் கையேடுகள்" என்ற நூலை இறுகப் பற்றிக்கொண்டனர். இந்த நூலில் மார்க்ஸ் அந்நியமயமாதல் பற்றிப் பேசுகிறார். ஹெகல் பற்றிய விமர்சனமும் இதில் இடம் பெறுகிறது. இயங்கியல் பொருள் முதல் வாதம் உருவாவதற்கான அடித்தளங்கள் மட்டுமே இந்நூலில் இடம் பெறுகின்றன. பொருளாதாரம் பற்றிய விமர்சனம்தான் இதன் முக்கிய அம்சம். இதில் அந்நியமயமாதல், ஹெகலியக் கருத்துக்கள் ஆகியவற்றை வலியுறுத்துவதன் மூலம் மேலைய மார்க்சியவாதிகள் கருத்து முதல்வாத அம்சங்களை தன் வயப்படுத்துவதற்கு வசதியாக இது அமைந்துவிடுகிறது.

உதாரணமாக கிராம்சியின் எழுத்துக்களில் மிகப் பெரிய ஹெகலியவாதியான குரோசின் (Croce) தாக்கம் உண்டு,

அதுமட்டுமல்ல நீட்ஷே, சிம்மல், டில்தி ஆகியோரின் கருத்துக்களையும் இணைத்துக் கொள்கின்றனர்.

**மார்க்ஸ் வெபர் என்பவரின் சமூகவியல் கொள்கை, பிராய்டின் உளப் பகுப்பாய்வு, பின் நவீனத்துவக் கொள்கை, அமைப்பியல் ஆகியவற்றை மார்க்சியத்துடன் கலக்கின்றனர். செவ்வியல் மார்க்சியம் முதலாளித்துவ கருத்துருவங்களை (வர்க்க சமூக) விமர்சிக்கிறது. அதன் உடன்பாடான அம்சங்களைத் தன் வயப்படுத்திக் கொள்கிறது. மேலைய மார்க்சியர்கள் அவ்வாறு அல்ல. புற சித்தாந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் பொழுது மார்க்சியத்தின் அடிப்படையையே மாற்றி விடுகின்றனர்.**

ரேமான்ட் வில்லியம்ஸ் போன்றவர்கள் இந்த வகையைச் சார்ந்தவர்கள். தமிழகத்தில் அ.மார்க்ஸ் மார்க்சியத்தை பெருங்கதையாடல் என்று மறுக்கிறார். அதற் கும் ஒருபடி மேலே சென்று மார்க்சியம், அம்பேத்கரியம், பெரியாரியம் ஆகியவற்றை ஒன்றிணைத்துக் காணவேண்டும் என்று கூறுகிறார்.

மேலைய மார்க்சியத்தை மேற்கட்டுமான மார்க்சியம் என்று அழைக்கலாம் என்று குறிப்பிட்டோம். அது வெறும் மேற் கட்டுமான மார்க்சியம் அல்ல. தற்கால கலாசாரத்தினை, முன்னேறிய தொழில் மயமான சமூகத்தின் கலாசாரத்தினை எதிர்மறையாகக் கடுமையாக விமர்சனம் செய்யும் மார்க்சிய மாக அது விளங்குகிறது. மார்க்ஸ், ஏங் கல்ஸ் ஆகியோர் முதலாளித்துவச் சமூக விமர்சனத்தில் ஈடுபட்டனர். ஆனால் அதன் முற்போக்கு அம்சங்களை ஏற்றுக்கொண்டனர். மேலைய மார்க்சியம் இதைச் செய்யவில்லை.

மேலைய மார்க்சியவாதிகளிடம் பல குரல்கள் உண்டு. அவர்களில் பலர் அரசியல் சார்ந்தவர்கள்; நிறுவனங்களில் தங்களை இணைத்துக்கொண்டவர்கள்;நிறுவனம் சாராதவர்கள் கட்சியோடு முரண்பட்டு வெளி யேற்றப்பட்டவர்கள்; எதிலும் ஈடுபடாமல் சுத்த அறிவாளிகளாகவே இருப்பவர்கள். இருவர்களின் குரல்களுக்கு ஊடாக ஒரு ஒற்றுமையைக் காண்பது கடினம். இருப்பினும் மேலே கூறப்பட்டவற்றிலிருந்து மூன்று கருத் துக்களை முன்வைக்கலாம்.

ஒன்றாவதாக மேலைய மார்க்சியம் என்பது மேற்கட்டுமானம் பற்றியது;

இரண்டாவதாக அது மனிதநேய அடிப்படையில் மட்டுமே (மார்க்சிய மனித நேயம் அல்ல) அறிவை அணுகுவது;

மூன்றாவதாக முரண்பட்ட பல கருத்துக்களை ஒன்று கலப்பது. இத்தகைய போக்குகளை மேலைய நாடுகளிலும் காணலாம்; அவர்களைப் பின்பற்றி இங்கு மார்க்சியம் பேசும் புதிய இடது சாரிகளிடமும் காணலாம்.

*மார்க்சியம்–சிலபோக்குகள்: நன்றி: என்சிபிஎச்*

தொடர்புக்கு: 98947 83657

---

## அரசு உதவி பெறும் பள்ளி மாணவிகளுக்கும்

# ரூ.1000 உதவித் தொகை வழங்க வேண்டும்

## இரா.முத்தரசன் கோரிக்கை




அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படித்த மாணவிகளுக்கு அவர்களின் உயர்கல்விக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் தமிழக அரசின் திட்டத்தை வரவேற்கிறோம். அதே போல், அரசு உதவி பெறும் பள்ளிகளின் மாணவிகளுக்கும் இந்த உதவித் தொகை வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தமிழக அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் இரா. முத்தரசன் ஈரோட்டில் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் சட்டமன்றப் பொதுத் தேர்தலை தொடர்ந்து உள்ளாட்சி தேர்தலிலும் திமுக தலைமையிலான மகத்தான முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெற்றுள்ளது. இவ்வெற்றிகள், இக்கூட்டணி மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது.

எனவே வகுப்புவாத, சர்வாதிகார சக்திகளை முறியடிக்க தமிழகத்தைப் போலவே, நாடு தழுவிய அளவில் மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகள் ஒன்று திரண்டு அணி அமைக்கவேண்டும்.

தமிழகத்தில் திமுக அரசு சிறப்பாக செயல்பட்டுவருகிறது. கடும் நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்தை தமிழக அரசு விரைவில் கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முனைப்புடன் செயல்படுகிறார். அவர் தோழமைக் கட்சிகளை அரவணைத்து செல்கிறார். எதிர்க்கட்சிகளையும் தோழமையுடன் அணுகுகிறார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் இத்தகைய அணுகுமுறை பாராட்டுக்குரியது.

காவிரியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்ட நிதி ஒதுக்கியுள்ள கர்நாடக அரசின் செயல் கண்டிக்கத்தக்கது. இந்த அணை கட்டும் விவகாரத்தில் மத்திய அரசு, நடுநிலையோடு நடந்துக் கொள்ள வேண்டும்.

நாடு தழுவிய அளவில் மத்திய அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளை கண்டித்து இம்மாதம் 28 மற்றும் 29 ஆகிய இரு நாட்கள் பொது வேலை நிறுத்தத்திற்கு தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன. இப்போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்கும்

பா.ஜ.க., தலைமையிலான மத்திய அரசு, உ.பி. உள்ளிட்ட 5 மாநிலத் தேர்தல் முடியும் வரை காத்திருந்து, அத்தேர்தல் முடிந்ததும் தற்போது டீசல், பெட்ரோல் மற்றும் சமையல் காஸ் விலைகளை உயர்த்தியுள்ளது. இதனால் நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும் அபாயம் உள்ளது.

தமிழகத்தில், சாதியின் பெயரால் ஆணவப் படுகொலைகள் மோசமாக நடந்து வருகின்றது. இத்தகைய ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்ற தமிழக அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

தமிழகத்தில் பூரண மதுவிலக்கு என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு. எனினும் சில நடைமுறை சிக்கல்களும் இருப்பதை அறிந்துள்ளதால் தமிழகத்தில் படிப்படியாகவாவது மதுவிலக்கை கொண்டு வர வேண்டும் என தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.

அரசுப் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படித்து உயர் கல்விக்கு செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கப்படும் என்று தமிழக அரசின் 2022–2023ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்தி அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கும் இந்த உதவித் தொகை வழங்க வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.


திம்பம் மலைப் பகுதியில் இரவில் குறிப்பிட்ட நேரம்முதல் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் அச்சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

அதேபோல் வனப்பகுதிக்குள் கால்நடைகளை மேய்க்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.


இப் பிரச்சினைகள் சம்பந்தமாக மேற்குத் தொடர்ச்சி பகுதிகளைச் சேர்ந்த மக் கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் அடுத்த மாதம் 4ம் தேதி சத்தியமங் கலத்தில் நடைபெறவுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு வரும் ஆகஸ்ட் 4ம் தேதி தொடங்கி 7ம் தேதி வரை திருப்பூரில் நடைபெறவுள்ளது. இவ்வாறு இரா. முத்தரசன் பேட்டியில் தெரிவித்தார்.

பேட்டியின் போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற் குழு உறுப்பினரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான நா.பெரியசாமி, கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் கே.ஆர்.திருநாவுக்கரசு ஆகியோர் உடனிருந்தனர்.




# கல்வியை கடைச் சரக்காக்கும் தன்னாட்சி கல்லூரிகள்



**பேரா.கதிரவன்**

**ஒரே நாடு, ஒரே மொழி என இந்திய நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்வி முறையை உருவாக்க ஆளும் ஒன்றிய அரசு துடிப்பாய் இருக்கின்றது. கல்வி அறிவு என்பது கற்று அதன் பின் நன்கு அறிதல். நன்கு கற்று அறிந்த எவரும் தன்னுடைய உரிமையை, உடமையை, யாருக்கும் விட்டுக்கொடுக்காமல், ஏன் அரசிடம் கூட துளியும் பயம் இன்றி கேள்வி கேட்டு அவர் தன் உரிமையைப் பெறுவார்கள் என்பதை அரசு அறியும்.**

தொடக்கத்திலிருந்தே மக்களை பகுத்தறிவு அற்றவர்களாக, கல்வியறிவு இல்லாதவர்களாக, அடிமைகளாய் உருவாக்கிவிட்டால் நாம் நினைத்ததை அடையாளம் என்பது ஆர்.எஸ்.எஸ்.காரர்களின் கனவு. அதனால்தான் அவர்கள் நான்கு வயது மழலைக்கல்வி தொடங்கி 14 வயது உயர்கல்வியிலிருந்து முனைவர் படிப்பு வரை அதின் தற்போதைய நிலையினை தரம் மேம்படுத்துதல் எனக் கூறிக் கொண்டு தரமற்ற கல்வியை கொடுக்க முனைகின்றனர் இணைய வழி கல்வி வழியாய்.

தேசிய கல்வி கொள்கை 2021 மூலம் நாடு முழுவதும் உள்ள உயர் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 50 சதவிகிதமாக உயர்த்துவதற்கு தற்போது பிப்ரவரி மாதத்தில் இணைய வழிக் கல்வியை நாட்டிலுள்ள 900 தன்னாட்சிக் கல்லூரிகள் வழங்கும் என்று பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்துள்ளது. இதன்மூலம் தேசிய தர அங்கீகாரத்தில் 3.25 மேல் பெற்ற தன்னாட்சிக் கல்லூரிகள் இணைய வழிக் கல்வியை அளிக்கலாம்.

இணைய வழிக் கல்வி மூலம் வழங்கும் பட்டபடிப்பு வழக்கமான படிப்புகளுக்கு இணையாக கருதப்படும். ஒன்றிய அரசு உயர்கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வகையிலாவது 50 சதவீதம் உயர்த்த வேண்டும் என்று எண்ணுகின்றது. ஆனால் அவர்களின் கல்வி தரத்தைப் பற்றி சிறிதும் சிந்திக்கவில்லை. ஏற்கனவே படித்த நபர்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பு இல்லாத நாடாக இந்தியா திகழ்கின்றது. இதில் படித்தவர்களின் எண்ணிக்கை மட்டும் உயர்த்தி என்ன பயன்?

தற்போது தமிழகத்தில் வழக்கமான பட்ட படிப்புகள், பட்ட மேற்படிப்பு வரை கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூர கல்வி நிலையங்கள் மூலம் பல்கலைகழகங்கள் வழங்கி வருகின்றன. தற்போது வழக்கமான பட்டப்படிப்புகள் 10, +2, 3 முறையில் வழங்கப்பட்டு வருகின்றது, அதுபோல் தொலைதூரக் கல்வியில் பத்தாம் வகுப்பிற்கு மேல் மாணவர்கள் தாங்கள் விருப்பப்பட்ட பட்டப்படிப்புகளை நேரடியாகவோ பிளஸ் டூ முடிக்காமல் படித்து பட்டம் பெறலாம், ஆனால் வேலைவாய்ப்பில் 10, +2, 3 முடித்தவர்களுக்கு மட்டும் அரசு வேலை வாய்ப்பு கிடைக்கும். தொலைதூர கல்வியில், பத்தாம் வகுப்பிற்கு பிறகு, பிளஸ் டூ முறையாக படிக்காமல் நேரடியாக பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடையாது என்பதை உயர்கல்வித் துறையும், நீதி மன்றங்களும் உறுதி செய்துள்ளன என்பது வரலாறு ஆகும், தற்பொழுது பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிவிப்பின்படி இனி தன்னாட்சிக் கல்லூரிகள் வழக்கமான படிப்புகளையும் இணைய வழி கல்வி மூலம் பயிலும் மாணவர்களுக்கு வழங்கலாம். ஆனால் இதில் கவனிக்கப்பட வேண்டியது இணைய வழிக் கல்வியை செயல்படுத்துவதற்கு தன்னாட்சிக் கல்லூரிகள் மாநில அரசின் அனுமதியோ அல்லது பல்கலைக்கழகத்தின் அனுமதியோ பெற தேவையில்லை. மாணவர் எண்ணிக்கைக்கு எந்தவித தடையுமில்லை. எவ்வளவு மாணவர்களை தங்களால் முடியுமோ அனைத்து மாணவர்களையும் அனுமதிக்கலாம்.

நடப்பு கல்வி முறையானது எங்கும் தவறு நடந்துவிடக் கூடாது என்று கல்வி நிலையங்கள் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக மானியக்குழு இதற்கிடையில் அரசின் கட்டுப்பாடு என ஒன்றின் பின் ஒன்றாக ஒவ்வொருவரின் மேற்பார்வையின் கீழ் செயல்பட்டு வருகின்றது. ஆனால் யாருடைய கட்டுப்பாடு இல்லாமல் முழு சுதந்திரமாக இணைய வழி கல்வி நிறுவனங்கள் செயல்படும் நிலையை இந்த புதிய கல்விக் கொள்கை 2020 உருவாக்குகின்றது. இதனால் என்னவாகும் என்றால் தொழிற்சாலை போன்று வருடத்திற்கு இத்தனை இவ்வளவு என பட்டதாரிகளை இணையவழிக் கல்வி நிறுவனங்கள் உருவாக்கும் என்ற அச்சம் எழுகின்றது.


பல்கலைக்கழக மானியக் குழு பாடத்திட்டத்தையும் பாடங்களையும் இணையவெளியில் அளித்துவிடும். மாணவர்கள் பாடங்களை கற்றறிந்து தேர்வில் வெற்றி பெறலாம். பல்கலைக்கழக மானியக்குழு தேர்வினை ஒரு குறிப்பிட்ட நாளில் நடத்தும் மாணவர்கள் பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டுதலின்படி தேர்வு அறைக்கு சென்று இணையவழி தேர்வினை எழுதலாம். ஆக கல்லூரிகள் செயல்பாடு என்பது மாணவர் சேர்க்கை நிதியை கையாளுவது மட்டுமே. இதன் தாக்கமானது தற்போது சில தன்னாட்சிக் கல்லூரிகள் இளங்கலை பட்டப் படிப்புகளுக்கு சேர்க்கை படிவம் அப்ளிகேஷன் சராசரியாக 25 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் வரை படிவங்கள் அச்சிட்டு இணையம் வழியாக விற்கப்படுகின்றன. ஆனால் அந்த கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை பெறாத மாணவர்கள் அருகில் உள்ள அடுத்த நிலையில் உள்ள கல்லூரியை அணுகுவார். ஆனால் இந்த தேசிய கல்விகொள்கையினால் வழக்கமான நேரடி படிப்பில் சேரும் மாணவர்கள் கூட இணையவழி படிப்பைத் தேர்ந்தெடுக்க அதிக வாய்ப்பு உண்டு. ஏனென்றால், மாணவர்களுக்கு இணைய வழி கல்வி அல்லது நேரடி கல்வி என்ற வேறுபாடுகளை பற்றி கவலை இல்லை. அவர்களுக்கு தான் விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும் என்பது தான் குறிக்கோளாக இருப்பார்கள். இடம் கிடைக்காத அதே மாணவர்கள் இணைய வழிக் கல்வி வழியாக அந்த கல்லூரியில் சேர்ந்து பட்டப்படிப்பை எளிதாக பெறுவார். ஆக இதன் மூலம் கிராமப்புற மாணவர்கள் தங்கள் அருகாமையில் உள்ள கல்லூரியை புறம்தள்ளிவிட்டு நகரத்தில் உள்ள பெயர்போன கல்லூரியை தேர்ந்தெடுக்கின்றனர். இதனால் கிராமப்புறங்களில் அல்லது நகரத்திற்கு அப்பால் உள்ள கல்லூரிகள் பெருமளவில் பாதிக்கப்படும். கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் அனைவரும் பாதிக்கப்படுவர். இதனால் மாபெரும் வேலை இழப்பு ஒருபுறம் ஏற்பட்டாலும், வரும்காலத்தில் கல்வி நிலையங்கள் அனைத்தும் தன்னாட்சி இழந்து தனிநபரின் கீழ் அடிமையாக மாற வாய்ப்புண்டு.

புதிய கல்வி கொள்கை 2020 திட்டத்தின் நோக்கத்தில் ஒன்று கல்வி நிலையங்களின் எண்ணிக்கையைக் குறைத்து கல்விக்கூடம் அற்றநிலை உருவாக்குவதே. ஒன்றிய அரசின் நோக்கமே திண்ணை வழிக்கல்வி போன்று இணைய வழி கல்வியை கொண்டு வருவது. அதாவது மொபைல், லேப்டாப், இணையம் போன்ற அதனை வாங்க பணம் படைத்தவர்கள் மட்டுமே இணைய வழிக் கல்வியை தடையின்றி பெறமுடியும். பணம் இல்லாதவர்களுக்கு படிப்பு என்றுமே கேள்விக்குறியே? இதன் விளைவு திண்ணை கல்வி போல் வருங்காலத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகம் மட்டுமே உயர் கல்வியை பெறும் தவறான சூழல் உருவாகும்.

கடந்த வருடங்களில் ஜியோ கல்வி நிறுவனம் மற்றும் எல்என்டி கல்வி நிறுவனங்கள் மத்திய அரசின் அனுமதி பெற்று இணையவழி கல்வியை அளித்து வருகின்றனர். தற்பொழுது பல்கலைக்கழக மானியக் குழு அளித்த இணைய வழி கல்வியை இந்த பெரும் நிறுவனங்கள் வழங்கப் போகின்றன. இந்த பெரும் நிறுவனங்கள் குறிப்பாக ஜியோ தன்னுடைய பொருளை மக்களிடம் சென்று அடைவதற்காக கவர்ச்சிகரமான திட்டங்களை அளித்தது. அதாவது ஜியோ கைபேசி பெற்றால் வருடம் முழுவதும் அழைப்பு இணையசேவை இலவசம் போன்ற திட்டங்களை மக்களிடம் அளித்தது போல், தற்போது இணைய வழி கல்வியிலும் கவர்ச்சிகர திட்டங்களை உருவாக்கலாம். அதாவது மாணவர் சேர்க்கை இலவசம், தேர்வு கட்டணம் இலவசம், கட்டணமில்லா கல்வி, ஒரு பட்டப் படிப்பு படித்தால் மற்றொரு பட்டப் படிப்பு இலவசம், தேர்வில் இத்தனை சதவிகிதம் பெற்றால் இத்தனை சதவிகிதம் மதிப்பெண் இலவசம் என்று கூட மாணவர்களை கவர்ந்து ஈர்க்க கூடிய திட்டங்களை இது போன்ற பெரும் நிறுவனங்கள் வழங்கலாம். இதன்மூலம் 2035 க்குள் அனைத்து மாணவர்களுக்கும் நாம் கல்வி அளித்து நாட்டில் கல்வியறிவு இல்லாதவர்கள் யாருமில்லை என்ற நற்பெயரை உலக நாடுகளிடம் பெறலாம். இந்தியா ஏர்லைன்ஸ்ஸை டாட்டாவிற்கு கொடுத்த அரசு இந்திய கல்வி நிறுவனங்களை ஜியோவுக்கு கொடுப்பதில் மும்முரமாய் செயல்படுகின்றது ஜியோ வாழ் இந்திய உயர்கல்விக்கு படித்தவர்களின் தரத்தின் எண்ணிக்கை ஜீரோவாக ஆகாமல் இருந்தால் சரி.

இணைய வழிக் கல்வியால் நாம் சமையல் செய்வது எப்படி? என்று கூட நாம் அறிந்து கொள்ள இயலாது. ஏனென்றால் உணவின் சுவையை அறிய செய்முறை தேவைப்படும். ஆனால் ஒட்டுமொத்த உயர்கல்வியும் இணையவழியில் செயல்படுத்துவது என்பது மிகப்பெரிய தவறான முடிவாகும். குறிப்பாக ஒவ்வொரு பாடம் 5 பகுதிகளாக பிரிக்கப்பட்டு இருக்கும். ஒவ்வொரு பகுதியும் பல்வேறுபட்ட படிப்புகளாக பகுப்பாய்வு செய்யப்படும். இந்த பகுப்பாய்வினை ஆசிரியர்கள் ஒரு வாரத்திற்கு எத்தனை மணிநேரங்கள் நடத்த வேண்டும்? ஒரு பருவத்திற்கு எத்தனை மணிநேரம் இந்த பாடங்களை நடத்த வேண்டும்? என்று பேராசிரியர்கள் அடங்கிய குழு முடிவு செய்து மாணவர்களுக்கு பாடத்திட்டத்தினை வகுக்கின்றனர். அதுபோல் ஒவ்வொரு பருவ காலத்திற்கும் மாணவர்கள் வருகை பதிவேடு மிகவும் முக்கியமாகும். அதாவது வருகைப்பதிவேடு 75 சதவிகிதத்திற்கு மேல் இருக்க வேண்டும். அதற்கு குறைவாக உள்ள மாணவர்களை தேர்விற்கு அனுமதிப்பது இல்லை. ஏனென்றால் குறைந்தது 75 சதவிகித வருகைப்பதிவேடு இல்லாத மாணவர்கள் அந்த பாடத்தை சரியாக புரிந்து கொள்ள முடியாது, அதற்கான பாடப் புத்தகங்களில் இருந்தாலும் நேரடியான வகுப்பில் மாணவர்கள் கவனிப்பது மற்றும் புரிந்து கொள்வது என்பது வேறு. ஆகையால் இது போல் வழக்கமான பட்டப் படிப்பினை நேரடி கல்வி வழியாக அளித்துக் கொண்டிருக்கும் போது முழுவதுமாக பட்டப்படிப்பு இணையவழியில் கல்வியை கற்று பட்டம் பெறலாம் என்பது மிகவும் கேள்விக்குறியாகும். அதுபோல் வழக்கமான பட்டப்படிப்பில் பயின்று வரும் மாணவர்கள் அனைவரும் தேர்வில் வென்று பட்டம் பெறுவது இல்லை. ஏனென்றால் அவர்கள் நேரடியாக கல்லூரிக்கு வருகை புரிந்து பாடத்திட்டத்தை சரிவர கவனிக்க இயலாத காரணத்தால் அவர்களால் தேர்வில் வெற்றி அடைவதில்லை. ஆனால் இணையவழிக் கல்வி முழுவதுமாக வீட்டிலிருந்தபடியே நேரடி ஆசிரியருக்கும் மாணவருக்கும் எந்தவித தொடர்பு இல்லாமலும் பயிலும் நிலையில் இருக்கும். இந்தியாவில் பெரும்பாலான மாணவர்கள் தங்களின் குடும்ப சூழ்நிலை மற்றும் நிதி நிலையை கவனத்தில் கொண்டு படிக்கும்போதே அல்லது படிப்பை பாதியில் விட்டோ வேலைக்கு செல்லக்கூடிய சூழ்நிலையில் உள்ளனர். அவர்கள் இந்த இணைய வழி பட்டப்படிப்பை பகுதி நேர பட்டப் படிப்பாக ஏற்று படிக்க அதிக அளவில் வாய்ப்புண்டு, வழக்கமாக நேரடியாகவே கல்லூரிக்கு சென்ற கல்வி பயின்ற மாணவர்களே தேர்வு அடைய முடியாத சூழ்நிலை இருக்கும் பொழுது, இந்த ஒட்டுமொத்த இளைய தலைமுறையினரை கல்வியிலிருந்து மடைமாற்றம் செய்து தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர்களை உற்பத்தி செய்யும் கல்வி முறை போல் இந்த கல்வி முறை தெரிகின்றது.

தொடர்புக்கு : **8667338638**




**சென்னை பல்கலைக்கழக கருத்தரங்கில்**

## மேனாள் ரிசர்வ் வங்கி கவர்னர் சி.ரங்கராஜன் உரை

சென்னை பல்கலைக்கழக பொருளாதாரத் துறை சார்பில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் புகழ் பெற்ற தலைவர் தாரக்கேஸ்வர சக்ரவர்த்தி பெயரில் அமைக்கப்பட்ட இருக்கையின் சார்பில், நடைபெற்ற கருத்தரங்கில் முன்னாள் மத்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர் சி.ரங்கராஜன் வங்கி மற்றும் நிதி கொள்கையின் பரிணாமம் வளர்ச்சி என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அருகில் ஏஐபிஇஏ பொது செயலாளர் சி.எச்.வெங்கடாச்சலம், மாநிலச் செயலாளர் இ.அருணாச்சலம் ஆகியோர் பங்கேற்றனர்.

# சங்கே முழங்கு!



# பொது நுழைவுத் தேர்வைக் கைவிடுக!

## மாணவர் பெருமன்றம் வலியுறுத்தல்

மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் மௌ.குணசேகர், மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நாடுமுழுவதும்உள்ள45மத்தியப்பல்கலைக்கழகங்களிலும் இளநிலைப் படிப்பில் சேர்வதற்கு பொது நுழைவுத் தேர்வை **(Common University Entrance Test CUET)** பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்திருக்கிறது.

மருத்துவப் படிப்பிற்கு நீட் தேர்வு கொண்டு வரப்பட்டதானது பணம் படைத்தவர்களும், உயர்சாதியினரும் மட்டுமே மருத்துவம் பயில முடியும் என்ற நிலையை உருவாக்கிவிட்டது; கல்வியில் மாநில உரிமையை அபகரித்துவிட்டது. மருத்துவப் படிப்பில் சேரும் மாணவர்களில் 97.5% பேர் தனியார் பயிற்சி மையங்களில் லட்சங்களில் செலவு செய்து பயிற்சி பெற்றவர்களே என ஏ.கே.ராஜன் குழு தெரிவித்துள்ளது.

இத்தகைய சூழலில், அனைத்து மத்திய பல்கலைக்கழகங்களிலும் இனி பொது நுழைவுத் தேர்வு அடிப்படையில் தான் மாணவர் சேர்க்கை நடத்தப்படும் என்றும், மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூ ரிகள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களும் பொது நுழைவுத் தேர்வு நடத்த வேண்டும் என்றும் யு.ஜி.சி. அறுவுறுத்தி உள்ளது உயர்கல்வித் துறையின் கட்டமைப்பையும், உள்ளடக்கத்தையும் முற்றிலும் சிதைத்துவிடும். நீட் என்ற ஒரு தேர்வால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட உயிர்பலிகள் இனி இந்தியா முழுவதும் ஏற்படுமோ எந்த அச்சம் எழுந்துள்ளது.

கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளை உள்ளடக்கிய கல்வி முறையை, தனியார் பயிற்சி நிறுவனங்கள் ஒருபோதும் கொண்டிருப்பதில்லை. அவைகள் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கு பயிற்சி கொடுப்பார்களே தவிர அடிப்படைக் கல்வியை தர மாட்டார்கள்.

தேர்வுகள் அனைத்தும் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின் அடிப்படையிலேயே நடைபெறும் என்பது 12 ஆண்டு காலம் மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு அநீதியையே ஏற்படுத்தும். மேலும், உயர்கல்வியில் மாநிலங்களின் உரிமைகள் முற்றிலுமாக பறிக்கப்படும் அபாயம் ஏற்படும்.

பழைய நடைமுறைப்படி, ஒரு மாணவர் பல பல்கலைக் கழகங்களுக்கு தனித்தனியாக தேர்வெழுத் முடியும். ஒன்றில் தேர்ச்சி பெறாவிட்டால், இன்னொரு பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற வாய்ப்பிருக்கிறது. ஆனால், பொது நுழைவு தேர்வு பல வாய்ப்பு முறையை அழிக்கிறது.

கல்வி வழங்க வேண்டிய பொறுப்பை பல்கலைக்கழகத்திற்கு கொடுத்துவிட்டு, தேர்வு நடத்தும் பொறுப்பை ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைப்பதானது பல்கலைக்கழகங்களின் உள்ளடக்கத்தையும், தனித்தன்மையையும் சிதைத்துவிடும்.

“பல்கலைக்கழகங்கள் தான் அறிவின் பாசறைகள்” என்பார் ஆல்பர்ட் ஐன்ஸ்டின். இத்தகைய அறிவின் பாசறைகளை சிதைக்கும் இம்முடிவை பல்கலைக்கழக மானியக் குழுவும், ஒன்றிய பாஜக அரசும் கைவிட வேண்டுமென்றும், தமிழ்நாடு அரசு இவ்வறிவிப்பை உறுதியோடு எதிர்க்க வேண்டும் என்றும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழு சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

விருதுநகர் இளம்பெண் பாலியல் பலாத்காரம் –

# மாதர்சங்கம், த.ஒ.வா.இ. கண்டன ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இந்திய தேசிய மாதர் சம்மேளனம், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில், விருதுநகர் இளம்பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்படட சம்பவத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது. மாதர் சங்க தலைவர் மாரீஸ்வரி, மாவட்ட செயலாளர் பாண்டிசெல்வி ஆகியோர் தலைமை வகித்தார்கள்.

சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ பேசுகையில், விருதுநகரில் இளம்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தவர்களை தனி நீதிமன்றம் அமைத்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். இதுவரை 8 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் முக்கிய நபர்கள உள்ளனரா என விசாரணை செய்து கைது செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு நிவாரண உதவியும், அரசு வேலையும் வழங்க வேண்டும்.காவல்துறை மெத்தன போக்கை கைவிட வேண்டும். இம்மாவட்டத்தில் திருட்டு, கொலைகள் அதிகரித்துள்ளது. தற்போது பாலியல் பலாத்காரமும் நடந்துள்ளது.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது பணியை வேகப்படுத்த வேண்டும் எனப் பேசினார் . வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், வத்திராயிருப்பு பேரூராட்சி தலைவர் தவமணி, மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், மாவட்ட பொருளாளர் சமுத்திரம், நகர செயலாளர் முத்துக்குமார், தவிதொச வரதராஜன், இளைஞர்மன்ற பகத்சிங் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மாவீரர் தினமான மார்ச் 23 –ஐ தேசிய தினமாக அறிவிக்க வேண்டும்

## டி.ராஜா வலியுறுத்தல்






நமது நாட்டின் விடுதலைக்காக வீரப்போர் புரிந்து தமது இன்னுயிரைத் தியாகம் செய்த தோழர்கள் பகத்சிங், ராஜகுரு மற்றும் சுகதேவ் ஆகியோரைப் போற்றும் வண்ணம் மாவீரர் தினமான மார்ச் 23 ஐ தேசிய தினமாக அறிவிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் மார்ச் 23 அன்று மாலை 3:30 மணி அளவில் நடைபெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் அவர் கட்சியினரிடையே உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கட்சியின் தேசியக் குழு செயலாளர்களான பல்லப் சென் குப்தா, டாக்டர் பி.கே. காங்கோ, தேசிய நிர்வாகக் உறுப்பினரும், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான ஆனி ராஜா, தேசிய குழு உறுப்பினர்களான அணில் ராஜிம்வாலே, டாக்டர் ஏ.ஏ.கான், கிருஷ்ண ஜா, என் சிதம்பரம், சுகுமார் தாம்லே ஆகியோருடன் அஜாய் பவனில் பணியாற்றும் கட்சியின் முழுநேர ஊழியர்கள் மற்றும் ஏஐடியுசி டெல்லி மாநில தலைவர் தீரேந்திர சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுரண்டலற்ற ஒரு நாடாக இந்தியாவை மாற்ற விரும்பும் ஒவ்வொரு இந்தியரின் இல்லத்திலும் தோழர் பகத்சிங் மற்றும் அவருடன் தோளோடு தோள் நின்ற இரு தோழர்களின் பெயர்கள் ஒலித்துக்கொண்டே இருக்கும் என்று டி. ராஜா குறிப்பிட்டார். தேர்ந்த வாசிப்பு திறன் கொண்டவராகத் திகழ்ந்த தோழர் பகத்சிங், தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லவிருந்த அந்தத் தருணத்திலும் லெனினுடைய நூலை (லெனின் நினைவுகள்) வாசித்துக் கொண்டிருந்தார். அவரே எழுதிய ‘நான் ஏன் நாத்திகன்’ என்னும் சிறு நூல் அனைத்து மொழிகளிலும் பல பதிப்புகளாக வெளியானது. ஒவ்வொரு புரட்சிகர இளைஞரும் அந்நூலை ஒரு கையேடாகக் கருதுகிறார்.

தூக்குமேடையில் உயிர்த்தியாகம் செய்யவிருந்த அந்தக் கட்டத்தில், உனது இறுதி விருப்பம் என்னவென்று தோழர் பகத்சிங்கிடம் கேட்கப்பட்ட போது, “எனது தாய்நாட்டைப் பார்த்துக்கொண்டே நான் இறக்க விரும்புகிறேன். எனவே, எனது முகத்தைத் துணியால் மூடி விடாதீர்கள்” என்று அவர் கூறினார்.

நமது வரலாற்று நூல்களில் விடுதலைக்காகப் போராடிய மாவீரர்களைத் ‘தீவிரவாதிகள்’ என்று இழிவுபடுத்திக் கூறாமல் புரட்சியாளர்கள் என்று குறிப்பிடும் வகையில் திருத்தம் செய்ய வேண்டும் என இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. கூட்டம் நிறைவடைவதற்கு முன்னதாக, இயற்கை எய்திய முதுபெரும் தோழர்கள் சந்திர கேத் ஷர்மா (பீகார்) மற்றும் நாம்தேவ் கவாதே (மகாராஷ்டிரம்) ஆகியோரின் நினைவாக ஒரு நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

‘பகத்சிங் ஜிந்தாபாத்’, ‘மாவீரர்கள் ஜிந்தாபாத்’, ‘இன்குலாப் ஜிந்தாபாத்’ ஆகிய முழக்கங்களுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

**தருமபுரி:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்டக்குழு சார்பில் பகத்சிங்கின் 91வது நினைவு தினம் தருமபுரி பெரியார் மன்றத்தில் அனுசரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டு பகத்சிங்கின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் ஜி.பழனிசாமி, ந.நஞ்சப்பன், மாவட்ட செயலாளர் எஸ்.தேவராசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.கோபால், கா.சி.தமிழ்க்குமரன், மாவட்ட பொருளாளர் எம். மாதேஸ்வரன் மற்றும் கட்சி நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செய்தனர்.

**சேலம்:** சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரகுழு சார்பில் ஆத்தூர் அம்பேத்கர் நகரில் அமைந்துள்ள செஞ்சதுக்கத் திடலில் பகத்சிங் நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டது. நகர செயலாளர் ஈ.ஆர்.கே. தலைமை தாங்கினார். நகர துணை செயலாளர் மோ சி, அழகு, ராகுல், சுரேஷ், தி.வி.க. மகேந்திரன், நித்தியானந்தன், திமுக இளவரசன், கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு வீர வணக்கம் செலுத்தினர்.

**பர்கூர்:** பர்கூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பகத்சிங் நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டது. வட்டக்குழு உறுப்பினர் வி.மோகன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.கண்ணு பகத்சிங் வரலாறு பற்றி விளக்கி பேசினார். நிகழ்ச்சியில் வட்ட துணை செயலாளர் பவுன்ராஜ், வட்ட குழு உறுப்பினர்கள் முருகன், ராஜாமணி, சுந்தரேசன், ராயப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். பரிதா நன்றி கூறினார்.

**அரியலூர்:** அரியலூரில் நகராட்சி முந்தைய அலுவலகம் முன்பு தோழர் பகத்சிங் திரு உருவப்படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வைத்து துப்புரவு ஏஐடியுசி தொழிலாளர் சங்க செயலாளர் எஸ்.மாரியப்பன் தலைமையில் புகழஞ்சலிகூட்டம் நடைபெற்றது. சங்க தலைவரும் சம்மேளன மாநில செயலாளருமான த.தண்டபாணி கலந்து கொண்டு பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் தியாகங்கள் பற்றி நினைவு கூர்ந்தார். அரியலூர் நகராட்சி தொழிலாளர்கள் கோபி, அண்ணாதுரை ராமதாஸ், செல்லாயி, கலா, அருந்ததி, வாலாம்பாள், உட்பட திரளாக கலந்து கொண்டனர்.

**திருப்பூர்:** திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய தியாகிகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. திருப்பூர் மாவட்ட குழு உறுப்பினர் வி.சௌந்தரராஜன், அலுவலகப் பொறுப்பாளர் தங்கவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வியாசர்பாடி 46வது வட்ட, கல்யா ணபுரம் கிளை செயலாளர் எஸ்.நாகராஜன் தலைமையில் மாவீரன் பகத்சிங் நினைவு தினத்தை முன்னிட்டு கட்சி கொடியை வட்ட நிர்வாக குழ உறுப்பினர் பி.கோவிந்தசாமி ஏற்றினார். பகுதி செயலாளர் ஏ.சுப்ரமணி பகத்சிங் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். ஆர்.பார்த்திபன் 46வது வட்ட மெகசின்புரம் கிளை செயலாளர், எம்.ஜெகதீஸ், எம்.குமார், டி.செண்பகம், பி.அரிகிருஷ்ணன், எம்.துரைசாமி, ஜெ.கோபி, டி.சரவனண், லட்சுமி, எஸ்.தேசிகா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முல்லை பெரியாறு அணையில்

# 152 அடி நீர் தேக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானது என உச்சநீதி மன்றம் உத்தரவிட்ட பின்னும் கேரள அரசு எதிர்ப்பு தெரிவித்து வருவதை கைவிட கோரியும் 152 அடியாக அணையின் நீர்மட்டத்தை உயர்த்திட கோரியும், பேபி அணை கட்டுமானத்திற்கு ஒத்துழைப்பு கொடுத்திட கோரியும் மூன்று நாட்கள் பிரச்சார பயணமும், ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

மதுரை: மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, தமிழ்நாடு விவசாய சங்கம் மதுரை மாவட்டக்குழு சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஜி.சந்தனம் தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாநிலத் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி விளக்க உரையாற்றினார். விவசாய சங்கம் ஜே.ரவிவர்மா முன்னிலை வகித்தார். புறநகர் மாவட்ட செயலாளர் பா.காளிதாஸ் துவக்கி வைத்தார். கடைசி விவசாயி படத்தில் நடித்த ஆத்தாடி குமரன், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மதுரை மாவட்ட பொறுப்புச்செயலாளர் கே.நாகஜோதி, விவசாய சங்கம் மாநிலக் குழு எஸ்.செல்லவேலு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தேனி: தேனியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் மாநில தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்ட செயலாளர் காசிவிஸ்வநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலகுழு உறுப்பினர் திருமலை கொழுந்து, செயற்குழு உறுப்பினர்கள் தங்கம், பரமேஸ்வரன் பெத்தாட்சி ஆசாத், செல்லன் ஆண்டிபட்டி ஒன்றிய செயலாளர் பிச்சைமணி, நகர செயலாளர் முனீஸ்வரன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் : திண்டுக்கல் ஆட்சியர் அலுவலகம் முன்பு




நடை பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய சங்க மாவட்டத் தலைவர் என்.சின்னச்சாமி தலைமை தாங்கினார். எல். அரவிந்தன், எம். சுப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் மற்றும் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.ராஜாமணி, மாவட்டப் பொருளாளர் கே.ராஜாங்கம், பி. வெள்ளைச்சாமி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருப்பரங்குன்றம்: திருப்பரங்குன்றம், அவனியாபுரம் மற்றும் சுற் றுப்புற பகுதிகளில் மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் மார்ச் 24,25,26 கவன ஈர்ப்பு பிரச்சார ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏ.ஐ.கே.எஸ் விவசாய சங்கம் பி.மகாமுனி தலைமை வகித்தார். விவசாய சங்கம் எஸ்.பிச்சை முன்னிலை வகித்தார். தமிழ்நாடு விவசாய சங்கம் மாநில செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி உரையாற்றினார், சி.பி.ஐ மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் பி.காளிதாஸ், மதுரை மாவட்ட செயலாளர் ஜி.சந்தனம் மற்றும் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பி.எஸ்.
# ஓய்வூதியதாரர்களி
# குறித்த கோரிக்கை

## நாடாளுமன்றத்தில் கே.சுப்

நாடாளுமன்ற மக்களவையில் கே. சுப்பராயன் பேசியதாவது:

01.01.2017 முதல் நிலுவையில் உள்ள ஓய்வூதிய தொகையை உயர்த்தி வழங்குமாறு சுமார் 2,50,000 பி.எஸ்.என்.எல் பணி ஓய்வு பெற்ற ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஓய்வூதிய உயர்வை பி.எஸ்.என்.எல் நிறுவன ஊழியர்களின் 3வது ஊதிய உயர்வுடன் இணைத்துப் பார்க்கும் பொருத்தமற்ற நிலைப்பாட்டை தொலைதொடர்புத்துறை மேற்கொள்வதாகக் கூறப்படுகிறது; ஓய்வூதியதாரர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்க மறுக்கிறது.

**பி.எஸ்.என்.எல் ஊழியர்களின் ஊதிய உயர்வு அந்நிறு வனத்தின் நிதி ஆதாரத்தைச் சார்ந்த விஷயமாகும். ஆனால், பி.எஸ்.என்.எல் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டிய பொறுப்பு இந்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. எனவே, இது தொடர்பான தொலைதொடர்புத் துறையின் நிலைப்பாடு முற்றிலும் தவறானது ஆகும்.**

மத்திய குடிமைப் பணிகள் (ஓய்வூதியம்) விதிகளின்படி, விதி 37ஏ ஓய்வூதியம் வழங்குவது பற்றித் துல்லியமாக வரையறை செய்துள்ளது. பி.எஸ்.என்.எல் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியது இந்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று தொலைத்தொடர்புத் துறையின் 20.07.2016 அன்று வெளியிடப்பட்ட ஆணை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

மத்திய அரசாங்கம் ஓய்வூதியதாரர்கள் 7வது மத்திய ஊதியக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் 01.01.2016 முதல் ஓய்வூதிய உயர்வைப் பெற்றுள்ளார்கள். எனவே, பி.எஸ்.என்.எல் ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிய உயர்வு குறித்த கோரிக்கை ஏற்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**ஒன்றிய அரசாங்கம் மக்களுக்கான அரசாங்கம் அல்ல; கார்ப்பரேட்டுகளுக்கான அரசாங்கம்!**

தேசிய விமான நிறுவனமற்ற ஒரு தேசமாக இந்தியா இருக்கிறது. இந்தப் பெருமை மோடி அரசாங்கத்தையே சாரும். ஆனால், மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடியின் பிரத்தியேக பயன்பாட்டிற்காக ஒரு விமானம் மிகச்சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு 4,632 கோடி ரூபாய்க்கு அமெரிக்காவிலிருந்து வாங்கப்பட்டுள்ளது.

உக்ரைனில் சிக்கிக் கொண்ட இந்திய மாணவர்கள், பயணிகள் விமானச் சேவை இல்லாத காரணத்தால் சரக்குப் போக்குவரத்திற்கான விமானங்கள் மூலமாக இந்தியா விற்குத் திரும்பினர். ஜவஹர்லால் நேரு தலைமையிலான அப்போதைய ஒன்றிய அரசாங்கம் டாடாவிடம் இருந்து ஏர் இந்தியா நிறுவனத்தை ஏற்றுக்கொண்டது. ஆனால், மோடி அரசாங்கமோ, அதே ஏர் இந்தியா நிறுவனத்தை டாடாவிடம் விற்றுவிட்டது. இதன் மூலம், டாடா நிறுவனம் பல நூறு கோடி ரூபாய்க்கான பலனைப் பெற்றது.

ஏர் இந்தியா நிறுவனத்தை மீண்டும் லாபத்தில் இயங்கச் செய்திட அரசாங்கம் செயல்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக, மோடி அரசாங்கம் பொதுத்துறையின் லாபத்தை எடுத்து தனியார் நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட்டுகளுக்குத் தாரை வார்த்தது. இது மக்களுக்கான அரசாங்கம் அல்ல; கார்ப்பரேட்டுகளுக்கான அரசாங்கம்!

இந்தியாவை வகுப்புவாத பிளவுகள் பீடித்து வருகின்றன. இந்தியாவை இருள் சூழ்ந்துள்ளது. மக்கள் விரைவில் விழிப்படைவார்கள்; ஒளி பிறக்கும் என்று நான் நம்புகிறேன்.

**திருப்பூர் இரயில் நிலையத்தில் எவ்வித மேம்பாடும் தென்படவில்லை**

நாடு முழுவதிலும் எண்ணற்ற ரயில்வே நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு உள்ளன. பயணிகளுக்கு ஏராளமான புதிய வசதிகள் செய்து தரப்படுகின்றன. ஆனால், ஆயிரக் கணக்கான பயணிகள் பயன்படுத்தும் திருப்பூர் இரயில் நிலையத்தில் எவ்வித மேம்பாடும் தென்படவில்லை. போதிய அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில், திருப்பூர் இரயில் நிலையத்திற்கு வரும் பயணிகள் மிகுந்த சிரமத் திற்கு உள்ளாகிறார்கள். லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் தொழில் நகரமான திருப்பூரில் தற்போது ஒரு பெரிய இரயில் நிலையம் வேண்டும்.

வளர்ந்து வரும் ஜவுளி மற்றும் ஆடைகள் ஏற்றுமதி தொழில்கள் காரணமாக கடந்த சில ஆண்டுகளில் திருப்பூர் நகரின் மக்கள் தொகையும் அதிகரித்துள்ளது.

பலமாநிலங்களில்இருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை தேடி திருப்பூர் நகரத்திற்கு புலம் பெயர்ந்து வருகிறார்கள். நல்ல குடிநீர், உணவு, கழிப்பிடம் மற்றும் இதர அடிப்படை வசதிகள் இல்லாத சூழலில் திருப்பூர் இரயில் நிலையம் பயணிகள் நெரிசல் மிகுந்த இடமாகவே உள்ளது. எனவே, திருப்பூர் ரயில் நிலையத்தில் பின்வரும் மேம்பாட்டுப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

1. நடைமேடையை சென்றடைவதற்கான இரண்டாவது நுழைவாயிலை வளைவு வடிவத்தில் அமைத்திட வேண்டும். கிழக்குப் பகுதியில் உள்ள நிலம் மற்றும் சிதலமடைந்த குடியிருப்புகளை உரிய முறையில் பயன்படுத்தி, சாலையை விரிவுபடுத்த வேண்டும்; கார் நிறுத்துமிடம் உள்ளிட்ட இதர வசதிகளை உருவாக்கிட வேண்டும்.

2. இரயில் நிலையத்தின் கிழக்குப் பக்கத்தில் இயங்கிவரும் சரக்கு கிடங்கை நிலையத்தில் இருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கூலிப்பாளையத்திற்கு மாற்றிவிடலாம். தற்போது இயங்கிவரும் கிடங்குப் பகுதியில் கூடுதலாக புதிய கட்டடங்களை அமைக்கலாம். இதன் மூலம் இரயில் நிலையம் தாராள இடவசதி கொண்டதாக அமையும். அங்கே உள்ள இருப்புப் பாதைகளைப் பயணிகள் இரயில்கள் நிறுத்துவதற்குப் பயன்படுத்த முடியும்; இதர விரைவு இரயில்கள் செல்வதற்கான பாதையும் இடர்பாடுகள் இன்றி அமையும்.

3. இரயில் நிலையத்தை வந்தடைவதற்கான சாலைகள் பழுதடைந்து குண்டும், குழியுமாக உள்ளன. தேங்கி நிற்கும் தண்ணீர் காரணமாக விபத்துகளும் நிகழ்கின்றன. எனவே, இரயில் நிலையத்தின் இருபுறங்களிலும் புதிய சாலைகள் அமைக்கப்பட வேண்டும். நடைமேடை கூரைகளில் விரிசலும் ஓட்டைகளும் இருப்பதால் மழைக் காலங்களில் பயணிகள் பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள். எனவே, நடைமேடைக்கு மேற்புறத்தில் புதிய கூரைகள் அமைக்கப்பட வேண்டும்.

4. நடைமேடைகளின் இருபுறங்களிலும் உணவகங்கள் அமைக்கப்பட வேண்டும். குளிர்பானங்கள் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான கடைகள் அமைக்கப்பட வேண்டும். இந்த கடைகள் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 18 மணி நேரம் திறந்திருக்க வேண்டும்.

5. திருப்பூர் மாநகராட்சி வழங்கும் குடிநீர் போதுமானதாக இல்லை. எனவே, பயணிகள் சுகாதாரமற்ற தண்ணீரைக் குடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள்; துர்நாற்றம்மிக்க கழிப்பறைகளை அவர்கள் பயன்படுத்த வேண்டியுள்ளது. போதுமான இருக்கை வசதிகள் இல்லாததால், நடைமேடையின் தரைகளில் பயணிகள் உட்கார வேண்டிய நிலை இருந்து வருகிறது.

6. பயணிகள் தூங்குவதற்கான அறை மற்றும் முக்கிய நபர்கள் ஓய்வெடுப்பதற்கான அறை அமைக்கப்பட வேண்டும். இரயில் நிலைய கட்டடத்தின் மாடியில் பயணிகள் தூங்குவதற்கான அறை கட்டப்படலாம்.

7. திருப்பூர் இரயில் நிலையத்தில் இருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் கூலிப்பாளையம் இரயில் நிலையம் அமைந்துள்ளது. அங்கிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் ஊத்துக்குளி இரயில்



# நாகப்
# விமா
# அமை

## நாடாளுமன்றத்தில் எம்.

நாடாளுமன்ற மக்களவையில் நடைபெற்ற விமான போக்குவரத்துதுறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் எம்.செல்வராசு பேசியதாவது:

தமிழ்மொழி, பண்பாடு மற்றும் தமிழ்நாடு ஆகியவை உலகம் பின்பற்றத்தக்க ஒளிரும் எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

உக்ரைன் நாட்டில் சிக்கிக்கொண்ட இந்திய மாணவர்கள், தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று குரல் எழுப்பிய போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க.ஸ்டாலின், அதற்கென 24 மணி நேரமும் தொடர்ந்து இயங்கும் ஒரு சிறப்பு ஏற்பாட்டை அமைத்தார். இந்திய மாணவர்களைப் பாதுகாப்பாக மீட்க வேண்டும் என்று வலியுறுத்தி ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் கடிதம் எழுதினார்.

'ஆபரேஷன் கங்கா' மூலமாக நமது மாணவர்களை ஒன்றிய அரசு மீட்டது. எனினும் விமான போக்குவரத்துச் சேவையில் இந்திய அரசாங்கத்திற்குச் சொந்தமாகத் தற்போது ஒரு விமானம் கூட இல்லை. ஏர் இந்தியா நிறுவனத்தை அரசாங்கம் தனியாருக்கு விற்று விட்டது. இந்த அரசாங்கம் சிவில் விமானப் போக்குவரத்து துறையில் தனியாருக்குச் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கிறது. அரசாங்கத்தின் இந்தத் தனியார்மயமாக்கல் நடவடிக்கையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

முன்பு, ஆப்கானிஸ்தானில் சிக்கிக்கொண்ட இந்தியர்கள் பாதுகாப்பாக நாடு திரும்ப உதவி கோரிய போது, ஏர் இந்தியா விமானங்கள் மூலமாக அவர்கள் மீட்கப்பட்டனர். பல்வேறு இக்கட்டான சூழல்களில், மீட்பு பணிகளை மேற்கொள்ள, இந்திய அரசாங்கத்திற்கு ஒரு நிறுவனம் தேவைப்படுகிறது.

பெங்களூரில் உள்ள ஏரோநாட்டிக்கல் இன்ஸ்டிட்யூட்டில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து வருகிறார்கள். இந்த நிறுவனத்தில் படிக்கும் மாணவர்களுக்கு தனி யார் கம்பெனிகளில் வேலைவாய்ப்பு உள்ளதா? என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும். இது போன்ற வேலை வாய்ப்புகளில் சமூக நீதிக் கொள்கை பின்பற்றப்படுகிறதா? என்பதையும் இந்த அவையில் தெரிவிக்க வேண்டும்.

திருச்சி விமான நிலையத்தில் ஒரு பன்னாட்டு முனையம் உள்ளது. திருச்சியிலிருந்து சிங்கப்பூருக்கும், துபாய்க்கும் நேரடி விமானச் சேவைகள் இருந்தாலும் திருச்சியிலிருந்து டெல்லிக்கு நேரடி விமானச் சேவை இல்லை. பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய விமானப் போக்குவரத்து துறை அமைச்சரை நேரில் சந்தித்து, திருச்சியிலிருந்து டெல்லிக்கு நேரடி விமான சேவையை இயக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆனால், இந்தக் கோரிக்கை கிடப்பில் போடப்பட்டுள்ளது. இது குறித்து, நான் விமான போக்குவரத்து துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளேன்.


எனது நாகப்பட்டினம் தொகுதிக்கு உட்பட்ட திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம் ஒன்று உள்ளது. ஓ.என்.ஜி.சி, சி.பி.சி.எல். நிறுவனங்கள் மற்றும் கப்பற்படை தளம் ஒன்றும் எனது தொகுதியில் உள்ளன. இவற்றைச் சார்ந்தவர்கள் அனைவரும் விமான சேவையைப் பெற்றிட சென்னை அல்லது திருச்சிக்கு செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, நாகப்பட்டினத்தில் விமான நிலையம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நான் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்து இருக்கிறேன். இது குறித்து பலமுறை கடிதம் எழுதியிருக்கிறேன். நாகப்பட்டினத்தில் விமான நிலையம் அமைத்திட அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

கடலோரப் பகுதிகளின் மேம்பாடு மற்றும் அப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களும் பயனடைய, புதுச்சேரி விமான நிலையத்தின் விரிவாக்கம் அவசியமாகிறது. சென்னையில் உள்ள இரண்டாவது விமான முனையத்தைச் செயல்பாட்டிற்கு கொண்டு வர போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

**நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்த வேண்டும்**


துறைமுகங்கள், கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத்துறைக்கு 2021–22 நிதி ஆண்டின் பட்ஜெட் மதிப்பீட்டின்படி 1,702.53 கோடி ரூபாய் அமைச்சகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 2021–22 நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி 1,585.37 கோடி ரூபாய் ஆகும். 2022–23 ஆம் ஆண்டின் பட்ஜெட் மதிப்பீட்டின்படி 1709.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பட்ஜெட் மதிப்பீட்டின்படி நிதி ஒதுக்கீட்டைப் பொருத்தவரையில் 0.42% மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது.

சிறிய துறைமுகங்களின் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நாட்டின் கப்பல் சரக்கு போக்குவரத்தில் 39% போக்குவரத்தைச் சிறிய துறைமுகங்கள் மேற்கொண்டு வருகின்றன. வரவிருக்கும் ஆண்டுகளில் கப்பல் சரக்கு போக்குவரத்து சிறிய துறைமுகங்களில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சரக்குப் போக்குவரத்து அதிகரிப்பால் ஏற்படும் நெரிசல், சரக்குகளைக் கையாளும் இயந்திரங்களின்



**சமூகத்தில் பெரிய அளவில் பெண்கள் உற்பத்தியில் பங்கு கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்போதுதான், வீட்டுவேலைகள் வெகுவாக குறையும்போதுதான் பெண்கள் விடுதலையை நோக்கி முன்னேற முடியும்.**

**– எங்கெல்ஸ்**



# ...என்.எல். ...ின் ஓய்வூதிய உயர்வு ...க ஏற்கப்பட வேண்டும்

## ...பராயன் எம்.பி. கோரிக்கை

நிலையம் அமைந்துள்ளது. வருங்காலத்தில் ஒரு மிகப்பெரிய அதிநவீன ரயில் நிலையத்தை அமைத்திடப் போதுமான இடவசதி இவ்விரண்டு இடங்களிலும் இருக்கிறது. சென்னை மற்றும் கோவைக்கு திருப்பூரில் இருந்து நேரடி இரயில்களை இயக்குவதற்கு இது போன்ற ஒரு அதிநவீன இரயில் நிலையம் அவசியமாகும்.

8. ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து போகும் திருப்பூர் போன்ற இரயில் நிலையத்தில், சில நொடிகள் மட்டுமே இரயில்கள் நிற்கின்றன. கூட்ட நெரிசல் காரணமாக ஏராளமானோர் இரயிலில் ஏறமுடியாமல் போய்விடுகிறது. எனவே, இரயில்களை கூடுதல் நேரம் நிறுத்த வேண்டும்.

9. மிகக் குறுகலாக உள்ள நடைமேடைகளை உடனடியாக அகலப்படுத்த வேண்டும்; அவற்றின் உயரமும் அதிகரிக்கப்பட வேண்டும். பயண முன்பதிவு அலுவலகத்தைக் கூடுதல் பணியாளர்களோடு விரிவுபடுத்த வேண்டும்.

10. இரயில் நிலையத்தை நவீனமயமாக்கும் வைஃபை, உயிரி கழிப்பறை மற்றும் மருத்துவ வசதிகள் எதுவும் இதுவரை திருப்பூர் இரயில் நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

11. இரயில் பெட்டி எண்களைக் காட்சிப்படுத்தும் மின்னணு குறியீடுகள் நடைமேடைகளில் நிறுவப்படவில்லை. இது குறித்து முன்பு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான கருவிகள் மற்றும் பொருட்களும் ரயில் நிலையத்திற்கு அனுப்பப்பட்டன. ஆனால், அவை அனைத்தும் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

12. கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் சேலம் பகுதியை உள்ளடக்கிய மண்டலம் தொழில்துறையில் கேந்திரமாக இருப்பதால் தமிழகத்தின் தென் மாவட்டங்களைச் சார்ந்த மக்கள் தொழில் மற்றும் வணிக நிமித்தமாக மேற்சொன்ன பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் இரயில் பயணம் செய்வதையே விரும்புகிறார்கள். எனவே, திருப்பூர் மற்றும் ஈரோடு வழியாக கோவையில் இருந்து ராமேஸ்வரத்திற்கு வாரம் ஒருமுறை இயக்கப்படும் இரயிலை தினமும் இயக்க வேண்டும்.

கோவையில் இருந்து நாகர்கோவில் செல்லும் வழித்தடத்தில் மேலும் ஒரு இரயில் கூடுதலாக இயக்கப்படவேண்டும். தற்போது உள்ள இரயிலில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட வேண்டும். கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு, கோவையில் இருந்து சேலத்திற்கு திருப்பூர் மற்றும் ஈரோடு வழியாக இயக்கப்பட்ட பயணிகள் ரயில் நிறுத்தப்பட்டது. இந்தப் பயணிகள் இரயில் உடனடியாக மீண்டும் இயக்கப்பட வேண்டும்.

13. கொரோனா பெருந்தொற்று காரணமாக நிறுத்தப்பட்ட இரயில் சேவைகள் அனைத்தும் உடனடியாக மீண்டும் இயக்கப்பட வேண்டும்.

14. திருப்பூர் இரயில் நிலையம் வழியாகச் செல்லும் அனைத்து ரயில்களும் இரண்டு நிமிடங்களுக்கு திருப்பூர் இரயில் நிலையத்தில் கட்டாயம் நிறுத்தப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்ட விஷயங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, திருப்பூர் இரயில் நிலையத்தை மேலும் மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

**தோப்பூர் – மேட்டூர் – பவானி சாலை வழித்தடத்தை தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்திடுக**

பெங்களூரு நகரத்தைச் சென்றடைவதற்கான தேசிய நெடுஞ்சாலை என்.எச்.544 மேற்கு தமிழகத்தின் நகர்ப்புற பகுதிகளான கோவை, பொள்ளாச்சி, திருப்பூர், ஈரோடு, பவானி, சேலம் ஆகிய பகுதிகள் வழியாக அமைந்துள்ளது. இந்த நெடுஞ்சாலை வழித்தடத்தில் அமைந்துள்ள தோப்பூரை, சேலம் வழியாகப் போய் சேருவதைக் காட்டிலும் பவானியில் இருந்து மேட்டூர் பகுதி வழியாகச் சென்றடையும் போது 25 கிலோமீட்டர் பயணத் தொலைவு குறைகிறது. பயண நேரம் குறைவதைக் கருத்தில் கொண்டு ஓட்டுநர்கள் இந்த வழித்தடத்தில் பயணிப்பதையே விரும்புகிறார்கள். இதன் காரணமாக, கடந்த சில ஆண்டுகளாக இந்த மாநில நெடுஞ்சாலையில் வாகன போக்குவரத்து மிகவும் அதிகரித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன், 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுடன் கலந்து ஆலோசித்து இந்தப் பயண வழித்தடத்தை தேசிய நெடுஞ்சாலைத்துறை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வாகனப் போக்குவரத்தைச் சமாளித்திட 7 மீட்டர் அகலம் கொண்ட சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் திட்டமும் அப்போது இருந்தது. தேசிய நெடுஞ்சாலைத்துறையில் இருந்து எந்தப் பதிலும் வராததால், இந்தத் திட்ட முன்மொழிவு கிடப்பில் போடப்பட்டது; மேற்படி சாலை வழித்தடம் மீண்டும் மாநில நெடுஞ்சாலைத்துறை கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. தற்போதும் இந்த வழித்தடம் மாநில அரசு நிர்வாகத்தின் கீழ் தான் உள்ளது.

எனவே, தோப்பூர்–மேட்டூர்பவானி சாலை வழித்தடத்தை தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்திட உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

சிறிய மேம்பாலங்கள் இல்லாத காரணத்தால் என்.எச். 544 ல் விபத்துகள் தொடர்கதையாகி உள்ளன. விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்த்திட மேம்பாலங்கள் கட்டப்பட வேண்டும் என்று அப்பகுதியைச் சார்ந்த மக்கள் போராட்ட இயக்கங்களை நடத்தி வருகிறார்கள். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சகத்தில் இருந்து பதில் எதுவும் இல்லை. எனவே,

1. பெருந்துறை – கவுண்டபாடி குறுக்கு பகுதி 78/400 மேம்பாலம்

2. பெருந்துறை – பெத்தம்பாளையம்– கவுண்டபாடி பகுதி 79/400 மேம்பாலம்

3. பெருந்துறை – கோம்பை குறுக்குப் பகுதி 80/800 மேம்பாலம்

4. கொளத்துப்பாளையம் – விஜயமங்கலம் குறுக்கு பகுதியில் 89/100 மேம்பாலம்

ஆகிய மேம்பால திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் சுமார் 48 சுங்கச்சாவடிகள் உள்ளன. இவற்றில் சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்தச் சுங்கச் சாவடிகள் அனைத்தும் ஒப்பந்த அடிப்படையில் 18 முதல் 30 ஆண்டுகளுக்கு பெருநிறுவனங்களிடம் வழங்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் சட்டப்படியாக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பலன்கள் எதையும் ஒப்பந்த தாரர்கள் வழங்குவதில்லை. தொழிலாளர்களுக்கு சீரான ஊதியம் வழங்கப்படுவதில்லை. ஒரே மாதிரியான வேலைக்கு சமமான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**ரிலையன்ஸ், எஸ்.கே.எம். தனியார் நிறுவனம், ரேஸ் ப்ராஜக்ட் மற்றும் திருச்சி மாவட்டம் சமயபுரத்தில் உள்ள ஒப்பந்ததாரர் உள்ளிட்ட பல ஒப்பந்ததாரர்கள் ஆறு முதல் பத்து ஆண்டுகள் தொடர்ந்து வேலை பார்த்து வரும் பல தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க மறுப்பது சட்ட விரோ தமானது ஆகும்.**

ஒன்றிய அரசு இந்த விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு தொழிலாளர் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு காண உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். வேலை மறுக்கப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் பணியமர்த்தப்படுவதையும் அவர்களுக்கு சட்டப்படியான உரிமைகள் மீண்டும் வழங்கப்படுவதையும் ஒன்றிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கே.சுப்பராயன் பேசினார்.

# ...பட்டினத்தில் ...ன நிலையம் ...த்திடுக!

## ...செல்வராசு எம்.பி. பேச்சு

குறைபாடுகள் மற்றும் போதாமை நிர்வாக செயல்திறனற்ற நிலை ஆகியவை பெரும் கவலையளிப்பவைகளாக உள்ளன.

துறைமுகத்தில் போக்குவரத்து நெரிசல் காரணமாக ஏற்றுமதியாளர்கள் எண்ணற்ற இடர்ப்பாடுகளை எதிர் கொண்டார்கள். மூலப்பொருட்கள் இறக்குமதியில் ஏற்பட்ட காலதாமதம் உற்பத்தியைப் பாதித்தது. அதன் விளைவாக, ஏற்றுமதி பெருக்கமும் தடைபட்டது. நெரிசலற்ற சூழலைத் துறைமுகங்களில் ஏற்படுத்த அரசாங்கம் போதிய கவனம் செலுத்தவில்லை.

இந்தியாவின் கடல்வழி வணிகம் அனைத்தும் சிங்கப்பூர், இலங்கை மற்றும் மலேசியாவில் உள்ள துறைமுகங்கள் மூலமாகவே நடைபெறுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்காக, இந்திய அரசாங்கம் பெரும் நிதியைச் செலவழிக்கிறது. **Trans-Shipment**துறைமுகம் இல்லாத காரணத்தால் இந்த நிலை ஏற்படுவதோடு, அரசாங்கம் பெரும் வருவாய் இழப்பையும் சந்திக்கிறது. கடல்சார் நடவடிக்கைகள் காரணமாக உண்டாகும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் களைந்திட அரசாங்கம் தவறிவிட்டது.

கப்பல் உடைக்கும் தொழில் கடல் மாசுபாட்டிற்கு வித்திடுகிறது. உலகின் மிகப்பெரிய கப்பல் உடைக்கும் தளம் இந்தியாவில் உள்ளது. எனினும், சரியான முறைப்படுத்துதல் மற்றும் கொள்கைத் திட்டங்கள் இல்லாத காரணத்தால் இந்தத் தொழில் சுற்றுச்சூழலைப் பாதிப்பதாக மாறியுள்ளது.

எனது தொகுதியான நாகப்பட்டினம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு கடற்கரை பகுதி என்பதோடு அதில் ஒரு துறைமுகமும் உள்ளது. இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பும், அதற்குப் பின்பும் கூட இந்தத் துறைமுகம் மூலமாகப் பல்வேறு இடங்களுக்குப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் இயக்கப்பட்டு வந்தன. ஆனால்,

**தற்போது அந்தச் சேவை செயல்பாட்டில் இல்லை. இந்தப் பிரச்சனையை நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற போது, நாகப்பட்டினம் துறைமுகம் ஒரு சிறிய துறைமுகம் என்று தகவல் தெரிவிக்கப்பட்டது. பொது மக்களும், வணிகர்களும், அரசாங்கமும் பயனுற, சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்தை ஈர்க்கும் வண்ணம், நாகப் பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்த வேண்டும் என்று நான் இந்தத் தருணத்தில் அரசாங்கத்தை மீண்டும் ஒருமுறை வலி யுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.**

**கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு மாதாந்திர அடிப்படையில் நிதியுதவி அளித்திடுக**


கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் வணிகம் நமது பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்குகிறது. உள்நாட்டு சந்தைகளில் இப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதுடன் மட்டுமின்றி பெரும்பாலான இப்பொருட்கள் அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கைத்தறித் தொழில் ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை அளித்து வருவது அனைவருக்கும் தெரிந்த விஷயம் ஆகும். வேளாண் துறைக்கு அடுத்த இடத்தில் கைத்தறித் துறை இருக்கிறது.

பெரும்பான்மையான நெசவாளர்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, சிறுபான்மை மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்தவர்கள் ஆவர். 2020 ஆம் ஆண்டிலிருந்து இவர்களுக்குத் தொழில் சார்ந்த பணிகள் எதுவும் கிடைக்காததால் பெருந்தொற்று காலத்தில் கடும் பாதிப்பிற்கு உள்ளானார்கள். எனினும், கைத்தறி பொருட்களுக்கான தேவை கடந்த ஆண்டைக் காட்டிலும் 12.66% அதிகரித்துள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு, நெசவாளர்களையும், பாரம்பரியத் தொழில்களான கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தியைப் பாதுகாத்திட அரசாங்கம் உடனடியாக அனைத்து உதவிகளையும் செய்திட வேண்டும்.


கைத்தறி நெசவாளர்கள் பயனுற வேண்டும் என்பதற்காக முத்ரா, பிரதமரின் ஜீவன் ஜோதி பீம யோஜனா, பிரதமரின் சுரக்ஷா பீம யோஜனா, மகாத்மா காந்தி பீம யோஜனா உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. ஆனால், பெருந்தொற்று காலத்தில், நெசவாளர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது.

எனவே, அரசாங்கம் உடனடியாக கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு மாதாந்திர அடிப்படையில் நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எம்.செல்வராசு பேசினார்.



**தன்னை சூழ்ந்துள்ள புறநிலை, இயற்கை பற்றியும், தனது சொந்த இயல்பு பற்றியும் அறிவாற்றலுக்கு முன்பு உள்ள தவறான பழைய கருத்துக்களிலிருந்து மிகவும் தொன்மையான காலங்களில் சமயம் தோன்றியது. – மார்க்ஸ்**



# மாவீரன் பகத்சிங்

## 91ஆம் ஆண்டு நினைவு தினம்







# இளைஞர் பெருமன்றம் சார்பில் “இளைஞர் எழுச்சி தினம்”









**இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடிய காரணத்திற்காக பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தால் தூக்கிலிட்டு கொலைசெய்யப்பட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் மாவீரன் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் 91ஆம் ஆண்டு நினைவு தினமான மார்ச்23ந்தேதி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் “இளைஞர் எழுச்சி தினம்“ ஆக தமிழ்நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.**

இதனையொட்டி தமிழ்நாடு முழுவதும் கருத்தரங்குகள், இரத்ததான முகாம்கள், கொடியேற்று விழாக்கள் விளையாட்டு போட்டிகள் உறுதியேற்பு உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டன.

வடசென்னை மாவட்டம் ஆர்.கே.நகரில் இளைஞர் பெரு மன்றம் ஆர்.எஸ்.ஆர்.எம். மகப்பேறு மருத்துவமனையுடன் இணைந்து நடத்திய இரத்ததானமுகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு ரத்ததானம் செய்தனர்.

முகாமினை ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர். ஜெ.ஜெ. எபிநேசர் தொடங்கி வைத்தார்.

மாநிலத்தலைவர் த.கு.வெங்கடேசன் சென்னை மாநகராட்சி 42வது வார்டு கவுன்சிலர் ரேணுகா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஆர்.கே.நகர் 47வது வட்டத்தில் அம்பேத்கர் நகரில் புதிய கிளை தொடக்கவிழா எழுச்சியோடு நடைபெற்றது.

ஆர்.கே.நகர் 38வது வட்ட சேகுவேரா கிளை சார்பில் விளை யாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

வடசென்னை,பெரம்பூர், வியாசர்பாடி சி கல்யாணபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளைஞர் பெருமன்றம் சார்பில் பகத்சிங் மற்றும் தா.பாண்டியன் அவர்களின் நினைவு நாளையொட்டி கால் பந்து போட்டி சிறப்பாக நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

மத்திய சென்னை மாவட்டம் அம்பத்தூரில் பகத்சிங் படத்திறப்புவிழா நடைபெற்றது. நீர்மோர் பந்தல் அமைக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் வில்லிவாக்கம், சோழவரம், கவரைப் பேட்டை ஆகிய இடங்களில் பகத்சிங் படத்திறப்பு நடை பெற்றது.மாவட்டசெயலாளர் பி.வி.செந்தில் மாநிலத்தலைவர் த.கு.வெங்கடேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம் பஞ்சத்திருத்தியில் பகத்சிங் சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு நடை பெற்றது. இதில் தேசியக்குழு உறுப்பினர் எம்.பார்த்தீபன் மாநிலத் துணைத் தலைவர்.மோ.வெங்கடேசன் முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் ஜி.ஜெகதீசன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

மதுராந்தகத்தில் உறுதியேற்பு நிகழ்வு நடைபெற்றது. மாவட்டதலைவர் சேகுவேராதாஸ் கலந்து கொண்டார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மாவட்டசெயலாளர் சர்தார் தலைமையில் உறுதிமொழி ஏற்கப்பட்டது.மாவட்ட துணைச்செயலாளர் யுவராஜ் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் உறுதிமொழி ஏற்கப்பட்டது. மாவட்டசெயலாளர் ஜி.மணிகண்டன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் பகத்சிங் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதுச்சேரி மாநிலசெயலாளர் இரா.அந்தோணி மாவட்டதலைவர் எஸ்.விஜய் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்டம் மாதனூரில் பகத்சிங் படத்திறப்பு விழா மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது. மாவட்டசெயலாளர் முரளி உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் 6 இடங்களில் பகத்சிங் படத்திற்கு அஞ்சலி செலுத்தி உறுதி மொழி ஏற்கப்பட்டது. மாவட்டசெயலாளர் எஸ்.ஆதில், மாவட்டத்தலைவர் யோகி நாராயணா, நகரசெயலாளர் நூர்முகம்மது உள்ளிட்ட நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

தேன்கனிக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்வுகளில் ஏராள மான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற இரத்ததான முகாமில் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இரத்ததானம் செய்தனர். மாவட்ட செயலாளர். இரா.ரமேஷ், மாவட்டத்தலைவர் கே.பி.வி. ராஜேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் அஞ்சலி செலுத் தப்பட்டது. மாவட்டதலைவர் கே.கணேஷ்குமார் கலந்துகொண்டார்.

திருச்செங்கோடு நகரில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்வில், நகரசெயலாளர் மோகன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு வடக்கு பவானியில் கருத்தரங்கம் நகரசெயலாளர் தாமோதரன் தலைமையில் நடைபெற்றது. மார்க்சிய சிந்தனையாளர் தா.சந்திரன் கருத்துரையாற்றினார். இதில் மாவட்டசெயலாளர் எம்.ஆர்.சுரேஷ்குமார் உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டத்தில் 4 இடங்களில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்கும் நிகழ்வுகளில் மாவட்டசெயலாளர் தெய்வசிகாமணி மாவட்ட தலைவர் சதாம் உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண் டனர்.

திருப்பூரில் மாநகரில் முத்துப்பாண்டி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள்கலந்து கொண்டனர்.

கோவை மாவட்டத்தில் பத்து மையங்ககளில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்கும் நிகழ்வுகளில் மாவட்டசெயலாளர் வே.வசந்தகுமார். மாநிலக்குழு உறுப்பினர்கள் ஜீவானந்தம், மணிகண்டன் உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி தேவராயம் பாளையத்தில் பகத்சிங் படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கரூர் வேலாயுதம் பாளையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் மாநிலசெயலாளர் க.பாரதி மாவட்ட செயலாளர் எம்.லஷ்மிகாந்தன் மாவட்டத்தலைவர் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். வேலாயுதம் பாளையம் ஒன்றியத்திற்கு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

திருச்சி மாநகரில் இரத்ததான முகாம் நடைபெற்றது. மாநகராட்சி கவுன்சிலர் தோழர் க.சுரேஷ் தொடங்கி வைத்தார். மேலும் 3 இடங் களில் பகத்சிங் படத்திற்கு அஞ்சலி செலுத்தி உறுதிமொழி ஏற்கப் பட்டது. மாவட்டசெயலாளர் எம்.செல்வக்குமார் உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் ஒன்றியத்தில் பகத்சிங் படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. மாவட்டசெயலாளர் வினோத் கலந்து கொண்டார்.

மதுரை மாநகரில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு மற்றும் தெரு முனைக்கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பழனிமுருகன் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்ற மாநிலசெயலாளர் சீ.தினேஷ் சிறப்புரையாற்றினார்.

மதுரை புறநகரில் இளைஞர் பெருமன்றம் மற்றும் மாணவர் பெரு மன்றம் சார்பில் இரத்ததானமுகாம் நடைபெற்றது. மாவட்டசெயலாளர் கே.கிருஷ்பாக்கியம் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் சீ.தினேஷ் உள்பட ஏராளமான இளைஞர்களும் மாணவர்களும் இரத்ததானம் செய்தனர்.

தேனி மாவட்டத்தில் 8மையங்களில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்கும் நிகழ்வுகளில் மாநிலத்துணைச்செயலாளர் இரா. தமிழ்பெருமாள் மாவட்டத்துணைச்செயலாளர் சரவணபுதியவன் உள்ளிட்டு ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

விருதுநகர் ராஜபாளையத்தில் உறுதிமொழி ஏற்கும் நிகழ்வில் மாவட்டசெயலாளர் கணேசமூர்த்தி உள்ளிட்டு ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடியில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் மாவட்ட செயலாளர் பெ.சந்தனசேகர் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 2 மையங்களில் நடைபெற்ற உறுதி மொழி ஏற்பு நிகழ்வுகளில் மாவட்டத்தலைவர் முத்துக் கிருஷ்ணன், செயலாளர் சுரேஷ், மாநிலக்குழு உறுப்பினர் பாலன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில் இளைஞர் பெருமன்றம் சார்பில் ஜீவா நினைவிடத்தில் பகத்சிங் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டு தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. மாவட்டபொருப்பாளர்கள் சுப்ரமணியம், சஜீஸ், பூதப் பாண்டி பேரூராட்சிதுணைத்தலைவர் அணில்குமார் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 4 மையங்களில் உறுதிமொழி ஏற்பு நிகழ்வு சுப்ரமணியபுரத்தில் பொதுக்கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது. மாநிலத்துணைத்தலைவர் கு.ராஜேந்திரன், தேசியக்குழு உறுப்பினர் பவிதாரணி உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்டத்தில் உறுதிமொழி ஏற்பு நிகழ்வுக்கு மாவட்ட செயலாளர் வி.கார்த்திகேசன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் இரத்ததான முகாம் மாவட்ட செயலாளர் வி.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. மேலும் 3 மையங்களில் உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் திருவாரூரில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்கும் நிகழ்வில் மாவட்டசெயலாளர் துரை.அருள்ராஜன், மாவட்டத்தலைவர் சு.பாலசுப்ரமணியன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் திருத்துறைப்பூண்டி ஒன்றிய, நகர, குழு சார்பில்.மாவீரன்பகத்சிங் நினைவு நாளை முன்னிட்டு கட்டிமேடு கடைத் தெருவில் அமைந்துள்ள சிலைக்கு ஒன்றிய தலைவர்.ஜெ.கணேஷ் அவர்கள் தலைமையில் மாலை வைத்து வீரவணக்கம் செலுத்தினர்.

ஒன்றிய செயலாளர் ஜீ.சரவணன், நகர தலைவர் ஷேக்தாவூது நகர செயலாளர் சி.கார்த்தி, மாணவர் பெருமன்ற மாவட்ட தலைவர் ஜெ.பி.வீரபாண்டியன், கட்சி நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.ஜெயபால்,கிளை செயலாளர் டி,மதியழகன். மற்றும் ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணம் மற்றும் அம்மாபேட்டை பகுதிகளில் பகத்சிங் படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்டத்தலைவர் இளங்கேஸ் மாவட்டசெயலாளர் திவான் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

தஞ்சை தெற்கு மாவட்டத்தில் கருத்தரங்கம் சிறப்பாக நடை பெற்றது. மாவட்டத் தலைவர் சுதந்திரபாரதி தலைமைதாங்கினார். மாவட்டசெயலாளர் காரல் மார்க்ஸ் உள்ளிட்ட ஏராளமான இளை ஞர்கள் கலந்து கொண்டனர். மேலும் 2 மையங்களில் உறுதிமொழி ஏற்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்வில் மாவட்டசெயலாளர், மாவட்டதலைவர் கார்த்தி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

இந்த இளைஞர் எழுச்சி தின நிகழ்வு இளைஞர் பெருமன்ற தோழர்களுக்கு புதிய உற்சாகத்தை கொடுத்துள்ளது.

செய்தி: **தோழர் க.பாரதி**

## தொழிலாளி, விவசாயி, ஒடுக்கப்பட்ட மக்களின்

# பரிபூரண விடுதலையே நமது லட்சியம்!

### கே.சுப்பராயன் எம்பி பேச்சு

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் தாலுகா மேற்கு ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநாடு தளவாய்புரத்தில் நடைபெற்றது. வரதராசன்,அய்யணன், ரங்கம்மாள் ஆகியோர் தலைமைக் குழுவாக செயல்பட்டார்கள். வீராச்சாமி கட்சி கொடியை ஏற்றி வைத்தார். மாநில நிர்வாககுழு உறுப்பினர தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார் .

மாநாட்டை நிறைவு செய்து மாநில துணை செயலாளர் கே.சுப்பராயன் எம்பி பேசியதாவது, விருதுநகர் இளம்பெண் பாலியல் பிரச்சினை தமிழ்நாட்டின் மனசாட்சியையே தட்டி எழுப்பி உள்ளது. அரசு உடனே தலையிட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதிகபட்ச தண்டனை கிடைக்கவும் யாரும் தப்பி விடக்கூடாது என முதல்வர் உத்தரவிட்டு உள்ளார்.

ஆனால் இதைவிட கொடுமையான பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமைக்கு பாஜக எவ்வித ஆர்பாட்டமும் நடத்தவில்லை. பாஜக அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்க்கின்ற , மதவாத சக்திகளை தமிழகத்தில் நுழைய விடாமல் தடுக்கின்ற ஒரே காரணத்திற்காக திமுக அரசு மீது களங்கத்தை ஏற்படுத்த அண்ணாமலை பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்.

பாஜக அரசின் கொள்கையால் வரலாறு காணாத விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது. நேரு பிரதமராக இருந்தபோது நாடாளுமன்ற கூட்டத்தை தவறவிட்டதில்லை. ஆனால் மோடி நாடாளுமன்றத்திற்கு வருவதே இல்லை. அரசின் சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்று பணமாக்குவதிலேயே குறியாக உள்ளனர்.

கல்வி கடன் கட்ட முடியாமல் மதுரை மாணவர் லெனின் தூக்கிட்டு இறந்தார். அதை ரத்து செய்வதற்கு பதில் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு 6லட்சம் கோடி ரூபாயை ரத்து செய்துள்ளார்.

மக்களின் பரிபூரண விடுதலைதான் நம் லட்சியம். அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, சமுதாய சமத்துவ விடுதலைக்காக போராடுவோம். மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். ஜனநாயக புரட்சி வெற்றி பெற்றால்தான் சோசலிச புரட்சி வெற்றிபெறும். அதற்கான வேலையில் லெனின் வகுத்து தந்த ஸ்தாபன முறைப்படி செயலாற்றுவோம். இவ்வாறு கே.சுப்பராயன் எம்பி பேசினார். மாநாட்டை வாழ்த்தி மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ். எம்பி ,மாநில நிர்வாககுழு உறுப்பினர் வி.அழகிசாமி எக்ஸ். எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் வி.நடராஜன், முத்துமாரி,நடராஜன் ஆகியோர் பேசினர். செயலாளராக எஸ்.கணேசமூர்த்தி, துணைச் செயலாளராக லி.பகத்சிங், பொருளாளராக கே.இராஜா ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

சேத்தூர் புறவழிச்சாலை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், நெசவு, கைத்தறி தொழிலை பாதுகாத்திட வேண்டும், 100நாள் வேலையை 200நாளாக்கி கூலியை500 ரூபாயாக உயர்த்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### ப.பா.மோகனுக்கு பாராட்டு விழா

கோகுல்ராஜ் சாதி ஆணவக் கொலை வழக்கில் அரசு சிறப்பு வழக்கறிஞராக ஆஜராகி மிகச் சிறந்த தீர்ப்பினை பெற்று தந்ததற்காக மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகனுக்கு பவானி ஏஐஓய்எப் சார்பில் பவானியில் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு ஏஐஓய்எப் நகரச் செயலாளர் தாமோதரன் தலைமை வகித்தார். பச்சமுத்து முன்னிலை வகித்தார். நிகழ்வில் சிபிஐ ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் மாதேஸ்வரன், பவானி நகர செயலாளர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் கோபால், ஏஐடியுசி சந்திரசேகர், ஓய்வு பெற்ற சார்பு நீதிபதி ராஜீ, சிறுபான்மை மக்கள் நலக்குழு மாநில செயலாளர் மாரிமுத்து, ஏஐஓய்எப் மாவட்ட செயலாளர் சுரேஷ்குமார், தூய்மை காவலர் சங்க ஒன்றிய செயலாளர் கண்ணன், குருப்பநாயக்கன்பாளைய பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் முருகானந்தம் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

## பாஜக தலைவரின் அநாகரிக அரசியல்

# அருவருக்கத்தக்கது

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி குற்றச்சாட்டு

தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் உயர் அதிகாரிகளுடன் அரசு முறைப் பயணமாக துபாய் சென்றுள்ளார்.

துபாயில் நடைபெறும் எக்ஸ்போ 2022 கண்காட்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பல்துறை அரங்குகளை திறந்து வைக்கவும், ஐக்கிய அமீரக அரபு நாடுகளில் உள்ள பெரும் முதலீட்டாளர்களை நேரில் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு வந்து, தொழில்களில் முதலீடு செய்ய அழைக்கவும் முதலமைச்சர் நான்கு நாள் பயணம் மேற்கொண்டுள்ளார். முதலமைச்சரின் பயணம் எந்தவித ஒளிவு மறைவும் இல்லாத வெளிப்படையானது. தமிழ்நாடு அரசால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த உண்மைகளை எல்லாம் மறைத்து விட்டு பாஜக தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை "ரூ5000 கோடி மர்மப் பயணம்" "முதலமைச்சர் துபாய் பயண மர்மம்" என்றெல்லாம் அடிப்படையில்லாத, ஆதாரமற்ற புகார்களை பொதுவெளியில் பேசி வருவது அருவெறுப்புத் தரும் அநாகரிக அரசியலாகும். இதுபோன்ற மலிவான செயலில் ஈடுபடுவதை பாஜக தலைவர் நிறுத்திக் கொள்ள வேண்டும். முதலமைச்சரின் அரசு முறைப் பயணத்தை கொச்சைப்படுத்தும் அண்ணாமலையின் இழி செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கண்டிக்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## கைத்தறி நெசவாளர்களின்

## கோரிக்கைகளை வலியுறுத்தி

# ஏஐடியுசி சார்பில் ஆர்ப்பாட்டம்!

நெசவுத் தொழிலை கடுமையாகப் பாதிக்கும் நூல்விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும், 28 ஆண்டுகளாக மாற்றி அமைக்கப்படாமல் உள்ள கைத்தறி நெசவாளர்களின் அடிப்படை ஊதியத்தை உயர்த்தி நிர்ணயிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐடியுசி பவானி வட்டார கைத்தறி ஜமக்காள நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பவானி, அந்தியூர்மேட்டூர் பிரிவில் சங்கத் தலைவர் பி.எம்.கந்தசாமி தலைமை யில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, சங்கச் செயலாளர் வ.சித்தையன், துணைத் தலைவர் ஐ.ராசம்மாள், உதவிச் செயலாளர் பி.ஆர்.அல்லிமுத்து ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் பி.எஸ்.பூபதி, மாவட்ட துணைச் செயலாளர் எம்.பாபு, சங்கப் பொருளாளர் என்.கோவிந்தன், சங்க துணைச் செயலாளர் எஸ்.பி.எம்.சுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில், தமிழ்நாடு முதலமைச்சருக்கு பவானி வட்டாட்சியர் ஜி.முத்துகிருஷ்ணன் மூலம் கோரிக்கை மனு சமர்பிக்கப்பட்டது.

## மாவீரன் பகத்சிங் நினைவு தினத்தில்

# மாணவர் பெருமன்ற உறுப்பினர் சேர்ப்பு இயக்கம்





மாவீரர்கள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் நினைவு தினத்தை முன்னிட்டு அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.

மதுரையில் அரசுப் பள்ளி மாணவர்களிடத்தில் நடைபெற்ற உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தில் மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் ரா.விக்ரம், மாநகர் மாவட்டச் செயலாளர் கே.சேதுபாண்டி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கோவை மாவட்டம் தேவாங்கர் அரசு உதவி பெறும் பள்ளியில் உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் நடைபெற்றது. மாநில தலைவர் மௌ.குணசேகர், மாவட்ட துணைச் செயலாளர் மு.பிரசாந்த், மாவட்டப் பொருளாளர் கிருஷ்ண கேசவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆலத்தம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தில் மாணவர் பெருமன்ற மாவட்டத் தலைவர் ஜெ.பி.வீரபாண்டியன், பிவிசி கீர்த்தி, திருத்துறைப்பூண்டி கல்லூரி நிர்வாகிகள் குணால், சிசுபாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மன்னார்குடியில் ஒன்றிய நிர்வாகி சந்துரு தலைமையில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது.

சேலம் மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஜாரி கொண்டலாம்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கெஜல்நாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, பி.நாட்டாமங்கலம் அரசுப் பள்ளி ஆகிய இடங்களில் மாணவர் பெருமன்ற உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பா.தினேஷ் கலந்துகொண்டார்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டம் கூட லூர் மேல்நிலைப் பள்ளியில் உறுப்பினர் பதிவு நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் ஆ.பிரகாஷ், மாவட்ட துணைச் செயலாளர் கார்த்திக், சதீஷ்குமார் ரஞ்சித்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியம் சொக்கநாதன்பட்டி பள்ளியில் மாணவர் பெருமன்ற உறுப்பினர் சேர்ப்பு இயக்கமும், பள்ளி அருகில் பகத்சிங் படத்திற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் விஜய் கலந்துகொண்டார்.

திருச்சி மாநகர் மாவட்டம், பிஷப் பள்ளியிலும், ஜே.ஜே. கல்லூரியிலும் உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் நடைபெற்றது.

மாநகர் மாவட்டச் செயலாளர் க.இப்ராஹிம், மேற்கு பகுதி குழு தலைவர் ரகுராமன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் பொறையார் தரங்கை பேராயர் மாணிக்கம் லூத்தரன் கல்லூரியில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் மு.க.பகத்சிங், கல்லூரியின் பொறுப்பாளர்கள் சிரஞ்சீவி, எட்வின், வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடசென்னை வியாசர்பாடியில் அரசுப் பள்ளியில் உறுப்பினர் சேர்ப்பியக்கம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் அன்பரசு, நிர்வாகிகள் தணிகைவாசன், விக்னேஷ், சதீஷ்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தேனி மாவட்டம் சின்னமனூர் ஓடைப்பட்டி சேர்ந்தா அரசு மேல்நிலைப் பள்ளியில் உறுப்பினர் பதிவியக்கம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் செ.ஆனந்த், கபூர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம் வெங்கலம் அரசுப் பள்ளியில் நடைபெற்ற உறுப்பினர் பதிவு இயக்கத்தில் மாவட்டச் செயலாளர் இரா. அபிஷேக்குமார், கௌதம், சஞ்சய், க.கோபி, ந.கோபாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 65. இச்சித்து முந்துதல்

**பத்துக்கு மத்தியில்பண் பற்றுப் புகைப்பதாம்**
**இச்சித்து முந்து வது.**

பலர்கூடி இருக்கின்ற இடத்தில், புகைபிடித்தல் எவ்வளவு பண்பற்ற செயலோ, அதைப்போன்றதே பலர் கூடி இருக்கும் இடத்தில் மிகவும் தெரிந்தது போல தற்பெருமையுடன் முந்திக் கொண்டு பேசுவதாகும். (எடுத்துக்காட்டு உவமையணி)

**பேணிப் பிழைத்துப் பெருநிதி சேர்ப்பவர்**
**ஏதின் இழிந்தார் அவர்.**

தவறுகளையே கைக்கொண்டு, பொருள்சேர்த்து, அதனைப் பேணிப்பாதுகாப்பவர் எதிலும் இழிந்தவராவர். காரணங்களை ஆய்ந்தால் பொருள் சேர்த்த வகையில் அவர் இழிந்தவர். (ஏதில்–காரணம் ஆய்தல், ஏதின்–எதனிலும்)

## வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

துடிப்பாற்றல் மிக்க இளம் தோழர்களுக்கு பொறுப்பளித்து மூத்த தோழர்கள் தங்கள் தோளில் சுமந்துள்ள சுமையை இளம் தோழர்களுக்கு வழங்கிட வேண்டும் என்று மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் சுட்டிக்காட்டியிருப்பது சிறப்பு.

– **த.மோகன்**, முத்துப்பேட்டை

**ஆசிரியர் ஜனசக்தி,**

கட்சியின் செயல்பாடு தலைமையிலிருந்து வெகுமக்களை நோக்கி இருக்கிறது. நமக்கானவற்றை தலைமை பார்த்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை கட்சி உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்படுகிறது. கட்சிக்கும் மக்களுக்குமான இடைவெளி அதிகரிக்கும்போது மக்கள் வேறு இயக்கத்தை தேடுகிறார்கள் என்று நூற்றாண்டு சோசலிசம் என்ற கட்டுரையில் கர்னேக்கர் கூறியுள்ளது மிகவும் பொருத்தமானது.

**மு.கதிர்வேலு**, சேலம் – 2

**ஆசிரியர் ஜனசக்தி,**


நேட்டோ விரிவாக்கம் கூடாது. இராணுவ படைக்குவிப்பு கூடாது. உக்ரைன் மீது போர் கூடாது. ரஷ்யா மீதும் போர் கூடாது. போரற்ற பொற்காலம் பிறக்கட்டும். பூ மண்டலத்தின் வருங் காலம் அமைதி தவழட்டும் என்று அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் அறை கூவலை உலகம் உற்று நோக்குகிறது.

-**ப.சந்திரன்**, நெய்வேலி

**ஆசிரியர் ஜனசக்தி,**

மனம் (உணர்வு) என்பது இயற்கை, சமூகம் ஆகியவற்றிலிருந்து பிரதிபலிக்கிறது. இந்த உண்மையை விமர்சனம் செய்யும் நோக்கில் மேலை மார்க்சியம் உருவானது. இந்த மேலை மார்க்சியம் லெனினியத்திலிருந்து முற்றாக விலகுகிறது என்று தோதாத்ரி தனது கட்டுரையில் தெளிவுபடுத்துகிறார்.

-**சு.மாரிமுத்து**, காஞ்சிபுரம்



## தோழர் இரணவீறு இல்ல திருமண விழாவில்

# சி.எஸ்.எஸ். கட்டிட நிதி ரூ.50 ஆயிரம்!

தென்காசி மாவட்டம் சிவகிரியில் முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் தோழர் இரணவீறு அவர்களின் இல்ல திருமண விழா நடைபெற்றது. திருமண விழாவில் தென்காசி மாவட்ட செயலாளர் இசக்கித்துரை வரவேற்புரை ஆற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டு மணமக்கள் எஸ்.வீரக்குமார் எம்.காயத்ரி ஆகியோரை வாழ்த்திப் பேசினார். மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் தி.ராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகர்சாமி எக்ஸ் எம்பி, எஸ்.காசிவிஸ்வநாதன்(நெல்லை மாவட்ட செயலாளர்), விருதுநகர் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, வி.பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, ராஜபாளையம் நகர செயலாளர் ரவி, விருதுநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிக்குமார், தென்காசி ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, நிர்வாக குழு உறுப்பினர் சிங்காரவேலு, சிவகிரி நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், வாசு ஒன்றிய செயலாளர் வேலு, ராயகிரி நகர செயலாளர் சமுத்திரம், ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா. சமுத்திரக்கனி, மாதர் சங்க செயலாளர் கந்தம்மாள், வாசு ஒன்றிய துணைச் செயலாளர் முருகன் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

மணமக்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் ஸ்டாலின் சுப்புலட்சுமி ஆகியோர் சி.எஸ்.எஸ் கட்டிட நிதியாக ரூபாய் ஐம்பதாயிரத்தை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசனிடம் வழங்கினர்.

# மாணவர் பெருமன்றம் திருச்சி மாநகர் மாவட்ட பேரவை

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் திருச்சி மாநகர் மாவட்ட பேரவை கூட்டம் திருச்சி மெடிக்கல் கல்லூரி எதிரே உள்ள ப.மாணிக்கம் இல்லத்தில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் எம் செல்வகுமார் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் சிறப்புரையாற்றினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் திராவிடமணி, எம்.செல்வராஜ், அண்ணாதுரை, மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் தினேஷ், இளைஞர் மன்றத்தின் மாவட்ட தலைவர் முருகேசன், விஷ்வா, சத்தியா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் இப்ராஹிம் வேலை அறிக்கையை சமர்ப்பித்தார். இதைத் தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டத்தலைவராக என்.எஸ். பாட்ஷா, மாவட்ட செயலாளர் க.இப்ராஹிம், மாவட்ட பொருளாளர் கௌதம், மாவட்ட துணைத்தலைவர் ரகுராமன், அஜித், மாவட்ட துணைச்செயலாளர் சுந்தரலிங்கம், கார்த்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வர வேண்டும், தமிழ்நாடு அரசின் நீட் விலக்கு மசோதாவிற்கு இந்திய குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தஞ்சை திலகர் திடல் சந்தைக்கு அடிப்படை வசதிகள் தேவை

## ● மேயரிடம் ஏஐடியூசி கோரிக்கை

கடந்த 18 ஆண்டுகளாக செயல்பட்டுவருகின்ற திலகர் திடல் காய்கறி சந்தைக்கு மின் வசதி, கழிவறை வசதி, குடிநீர் வசதி ஏற்படுத்த ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் மாநகர மேயரிடம் கோரிக்கை தஞ்சை மாநகர மேயர் சண். ராமநாதன் மற்றும் துணை மேயர் அஞ்சுகம் பூபதி ஆகியோரை ஏஐடியூசி தொழிற்சங்க சார்பில் சந்தித்து, தஞ்சாவூர் திலகர் திடல் காய்கறி சந்தையில் மின் வசதி, கழிவறை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விண்ணப்பம் அளிக்கப்பட்டது. மாநகர மேயர் மற்றும் துணை மேயர் ஒரு மாதத்திற்குள் கோரிக்கை நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தனர்.

ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் மாவட்ட தலைவர் மற்றும் திலகர் திடல் மார்கெட் சங்கத் தலைவர் வெ.சேவையா மாவட்ட துணை செயலாளர் துரை. மதிவாணன் மார்க்கெட் சங்க நிர்வாகிகள் பாலமுருகன், ஜி.சி. ரவி,சுடலைமுத்து,ஜெயலெட்சுமி, பாபாயி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



>> 15ம் பக்கத் தொடர்ச்சி

பி.லிங்கம் எக்ஸ் எம்பி, கணேசமூர்த்தி, இராஜா, லி.பகத்சிங், சாத்தூரில எஸ்.பழனிக்குமார், சாமி நாதன், ஜான்ராஜா, விருதுநகரில் பாலமுருகன், செல்வம், முத்து குமார், சக்கணன், சிவகாசியில் க.சமுத்திரம், ஜீவா, கலைவாசன்,

இராஜபாளையத்தில் வி.இரவி, விஜயன், சத்திரப்பட்டியில் முத்துமாரி, இராமச்சந்திரன், மோகன், திருவில்லிபுத்தூரில் பலவேசம், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, மூர்த்தி, ஆலங்குளத்தில் நடராஜன், ஜெயபிரகாஷ், பிரணவமனி, அருப்புக்கோட்டையில் முனிசாமி, இளங்கோ, இ.ரெட்டியபட்டியில் நீதிராஜன், தங்கராஜ், திருச்சுழியில் பெரியண்ணன், சுரேஷ், காரியாபட்டியில் ரவி உள்ளிட்டோர் தலைமையில் மறியல் நடைபெற்றது. மாவட்டம் முழுவதும் 3000க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அதில்1250 பேர் பெண்கள்.

**மணப்பாறை:** மணப்பாறை பேருந்துநிலையம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலை ஆட்டோ சங்க வளாகத்தில் அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ நகர செயலாளர் ஜனசக்தி உசேன், சிபிஎம் வட்ட செயலாளர் கோபாலகிருஷ்ணன், திமுக தொழிற்சங்க பேக்குவரத்து கழக செயலாளர் சங்கர்கணேஷ், வி.சி.க. நகர தலைவர் ஆனந்தன் ஆகியோர் தலைமை வகித்தனர். ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட துணைச் செயலாளர் சுப்பிரமணி, சி.ஐ.டி.யூ முருகேசன் ,அந்தோணிசாமி ஆகியோர் ஆர்ப்பாட்ட உரை நிகழ்த்தினர்.

**மதுராந்தகம்:** மதுராந்தகத்தில் நடைபெற்ற சாலை மறியலுக்கு ஏஐடியூசி கே.வி.சேகுவேராதாஸ். சிஐடியூ எம்.மாசிலாமணி ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் காந்திரோடு தேரடியில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கே.ஏ.இளங்கோவன் எல்.பி.எஃப்., ஏ.மூர்த்தி ஏஐடியூசி, டி.ஸ்ரீதர் சி. ஐ.டி.யு., இராம நீராலன் ஐ.என்.டி.யூ.சி., எச். ஆபத் சகாயம் எச்.எம். எஸ்., தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சிபிஐ வெங்கடேசன், எ.பிரகாசம் ஏஐடியூசி டாஸ்மாக் பணியாளர் சங்கம், டி.என். ஆனந்தன் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மறியலில் ஈடுபட்டனர்.

**வேலூர்:** வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு நகரப்பேருந்து நிலையத்தில் மறியல் போராட்டம் நடைபெற்றது. சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் பி.ஆர்.சுப்பிரமணி, குடியாத்தம் ஒன்றிய செயலாளர் துரை. செல்வம், த.ஆனந்தன், ஒன்றிய துணை செயலாளர், ஜனசக்தி ஜெயராமன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் நா.சே. தலித்பாஸ்கர் உள்ளிட்ட ஏராளமானோர் மறியலில் கலந்து கொண்டனர். திருப்பத்தூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

**ஆண்டிபட்டி**

ஆண்டிபட்டியில் இந்தியன் வங்கி முன் ஏஐடியூசி, சிஐடியூ சார்பில் மறியல் போராட்டம் நடைபெற்றது. கைத்தறி சங்கத்தின் மாவட்ட தலைவர் பிச்சைமணி தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்ட செயற்குழு உறுப்பினர் பரமேஸ்வரன் துவக்கி வைத்தார். ஏஐடியூசி மாவட்டக்குழு உறுப்பினர் வேலுச்சாமி, நகர செயலாளர் முனீஸ்வரன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் பெருசு, ஜனசக்தி பிரபாகரன் உட்பட 500 க்கும் மேற்பட்டோர் மறியலில் பங்கேற்றனர்.

**தருமபுரி:** தருமபுரியில் அனைத்து தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு வி.தொ.ச. தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் தலைமை தாங்கினார். வி.தொ.ச. மாவட்ட தலைவர் ஜி.மாதையன், துணை தலைவர்கள் ஜி.ராஜகோபால், என்.முருகேசன் துணை செயலாளர் ஜி.பச்சாகவுன்டர் மற்றும் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள், மாவட்டக்குழு உறுப்பினர்கள் மறியலில் ஈடுபட்டு கைதாகினர்.

**நாங்குநேரி:** நாங்குநேரியில் ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போராட்டம் த.வி.ச. மாவட்டத் தலைவர் கிருஷ்ணன் எக்ஸ்.எம்எல்ஏ, சிஐடியு மாவட்ட துணைச் செயலாளர் பீர் முகமதுஷா மற்றும் கட்டுமானச் சங்க மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

த.வி.ச. மாநில துணைத்தலைவர் பெரும்படையார், தாலுகா செயலாளர் முருகன் மாவட்ட குழு உறுப்பினர் லெனின் முருகனாந்தம், அங்கன்வாடி பணியாளர்கள் சார்பில் களக்காடு வட்டார தலைவர் கல்யாணி, நாங்குநேரி தலைவர் மஞ்சுளா உள்பட பலர் பங்கேற்றனர்.

**கன்னியாகுமரி :** குமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம் அருகில் உள்ள இந்தியன் வங்கி எதிரே நடைபெற்ற மறியல் போராட்டத்தை முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ்ராஜன் துவக்கி வைத்தார். சிபிஎம் மாவட்ட செயலாளர் செல்லச்சாமி, சிஐடியு மாவட்ட செயலாளர் தங்க மோகன் வாழ்த்துரை வழங்கினர். சிபிஐ மாவட்ட பொருளாளர் சுபாஷ் சந்திரபோஸ், மாநகரச்செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, எல். நீலகண்டன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு பேசினர்.

**மயிலாடுதுறை :** வி.ச., வி.தொ.ச. சார்பில் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியத்தில் சிபிஐ மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன், ஒன்றிய செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தலைமையில் சாலை மறியல் நடைபெற்றது. முருகேசன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சீர்காழி ஒன்றியத்தில் எம்.செல்லப்பன் தலைமையிலும், வரதராஜன், நீதி சோழன், கலியமூர்த்தி, ராமச்சந்திரன் முன்னிலையிலும் சாலை மறியல் நடைபெற்றது.

கொள்ளிடம் ஒன்றியத்தில் பெ.வீரராஜ், கே. எஸ்.சிவராமன், கஜேந்திரன், தனசேகரன் தலைமையில், ஜெய்சக்திவேல், கலியமூர்த்தி, சிவமணி, மூவேந்தன் முன்னிலையில் சாலை மறியல் நடைபெற்றது.

**மதுரை திருநகர்:** மதுரை திருநகர் ஹார்விபட்டி பேருந்து நிலையத்தில் சாலை மறியல் நடைபெற்றது. சிபிஎம் சி.ராமகிருஷ்ணன், ஏஐடியூசி பா.காளிதாஸ் எச்.எம்.எஸ். கே.ஏ.ராமச்சந்திரன், த.வி.ச. என்.பழனிச்சாமி, வி.தொ.ச. சொ.பாண்டியன் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் 200 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

**தென்காசி :** தென்காசி மாவட்டத்தில் 11 மையங்களில் போராட்டம் நடைபெற்றது. இதில் தென்காசி 148, செங்கோட்டை 310, ராயகிரி 90, சிவகிரி 120, புளியங்குடி 113, கடையம் 155, பாவூர்சத்திரம் 225, ஆலங்குளம் 235, சங்கரன்கோவில் 200, திருவெங்கடம் 96, கடையநல்லூர் 38 என மொத்தம் 1730 தோழர்கள் மறியலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டனர்.

ராயகிரியில் பெட்ரோல் டீசல் விலையை கட்டுப்படுத்தாத ஒன்றிய மோடி அரசை கண்டிக்கும் விதமாக மார்ச் 28ஆம் தேதி நடைபெற்ற முழு அடைப்பு போராட்டத்தில் ஏஐடியூசி கே.டி.கே தங்கமணி ஆட்டோ சங்கத்தினர் ஆட்டோவை கயிறு கட்டி இழுத்துவந்து நூதன முறையில் போராட்டம் நடத்தினர்.

**பரமக்குடி :** பரமக்குடியில் ஏஐடியூசி மாவட்ட தலைவர் எஸ். பி.ராதா தலைமையில் சாலை மறியல் நடைபெற்றது. ஏஐடியுசி கைத்தறி சங்க மாவட்ட செயலாளர் என்.எஸ். பெருமாள், சிஐடியு தி.ராஜா, ஐ.என்.டி.யூ. சி.சார்பில் நாகராஜன், எல்.பி.எப். த.முத்து, மதிமுக இரா.செல்வக்குமார், எச்.எம்.எஸ். எஸ்.ஐ.ஏ. ஹாரிஸ், வைகைப் பாசனம் சார்பில் மதுரை வீரன் ஆகியோர் முன்னிலையில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

**உளுந்தூர்பேட்டை:** கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை உழவர் சந்தையில் பேரணியை விதொச மாவட்ட செயலாளர் எம்.ஜெய்சங்கர் துவக்கி வைத்தார், கோரிக்கை விளக்கி ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட செயலாளர் எம் வெங்கடேசன், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் எம். கலியபெருமாள், க.காரல்மார்க்ஸ் மாநில பொதுச் செயலாளர் (சுங்கச்சாவடி) ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க பி.ஆர்.நந்தகோபாலகிருஷ்ணன் உள்பட 150க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சியில் அனைத்து தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் ஏஐடியூசி, எல்.பி.எப்., சி.ஐ.டி.யூ., டபிள்யூ.பி.டி.யூ.சி. உள்ளிட்ட சங்கங்களின் நிர்வாகிகள் பங்கேற்றனர். தேன்கனிக்கோட்டையில் கன்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஏஐடியூசி, எல்.பி.எப்., சி.ஐ.டி.யூ., டபிள்யூ.பி.டி.யூ.சி. உள்ளிட்ட சங்கங்களின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**திருச்சி புறநகர்:** மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள காமராஜர் சிலை அருகில் நடைபெற்ற மறியல் போராட் டத்திற்கு, சிபிஐ திருச்சி புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித், சிபிஎம் புறநகர் மாவட்ட செயலாளர் ஜெயசீலன், மதிமுக தெற்கு மாவட்ட செயலாளர் தமிழ் மாணிக்கம், திமுக தொழிற்சங்க கிளை தலைவர் ராஜேந்திரன், வி.சி.க. நகர தலைவர் ஆனந்தன், ஐ.என்.டி.யூ.சி. தலைவர் ராஜேந்திரன் ஆகியோர் தலைமை வகித்தனர். ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட துணைச் செயலாளர் சுப்பிரமணி, நல்லுசாமி, கண்ணன், சிபிஐ நகர செயலாளர் ஜனசக்தி உசேன், வையம்பட்டி ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம் சக்தி(எ) பழனிச்சாமி முன்னிலை வகித்தனர். இதில் 280க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகரில் மறியல் நடைபெற்றது. மறியலுக்கு எல்பிஎப் தலைவர் நாகமாணிக்கம் தலைமைவகித்தார். ஏஐடியூசி மாநில குழு உறுப்பினர் வி.சௌந்தரராஜன், ஏஐடியூசி உடுமலைப்பேட்டை பொருளாளர் சுப்பிரமணியம், மோட்டார் சங்கம் செல்வராஜ், மில்சங்கம் சுகுமார், தங்கவேல், அமைப்புசார சங்கம் முருகன் மற்றும் சிஐடியூ ஜெகதீசன் உள்ளிட்ட 320 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**மதுரை:** மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற மறியலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், மதுரை மாவட்ட ஏஐடியூசி செயலாளர் எம்.நந்தாசிங், ஏஐடியூசி கட்டட சங்கத்தின் இரா.முருகன், இருளாண்டி, அலெக்ஸ், நாராயணன், ஆட்டோ சங்கத்தின் சித்திக், தாமஸ், மதுரை மாவட்ட பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கத்தின் விளாங்குடி மணி, இஸ்கப் பா.சுமதி, மற்றும் ஏராளமானோர் பங்கேற்றனர்.

மதுரை திருமங்கலத்தில் உள்ள ரயில் கேட் பகுதியில் எஸ்.கே.எம். சார்பில் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. மதுரை மாவட்ட செயலாளர் ஜி.சந்தானம் தலைமை தாங்கினார்.

**தஞ்சை:** தஞ்சை ரயிலடி முன்பு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், சிஐடியு மாநில செயலாளர் சி.ஜெயபால், எல்பி எஃப் மாவட்ட நிர்வாகி பாஸ்டின், ஐஎன்டியுசி மாவட்ட செயலாளர் என்.மோகன்ராஜ், ஏஐசிசிடியூ மாவட்ட செயலாளர் கே ராஜன் ஆகியோர் தலைமை வகித்தனர். 500க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேறனர்.

ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பாக தஞ்சை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.வி.கண்ணன், ஏஐடி யூசி நிர்வாகிகள் க.அன்பழகன், வெ.சேவையா, தி.கோவிந்தராஜன், துரை. மதிவாணன், பி.அப்பாத்துரை, பி.செல்வம் , பொன்.தங்கவேலு பி.சக்திவேல், எஸ்.பாலசுப்பிரமணியன், எஸ்.தாமரைச்செல்வன், மாதர் சங்க மாவட்ட நிர்வாகிகள் தமிழ்ச்செல்வி, மாலதி, செல்வேந்திரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**அரியலூர்:** அரியலூரில் அண்ணாசிலை அருகில் ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் த. தண்டபாணி, தொ.மு.ச மாவட்ட தலைவர் ஆர்.மகேந்திரன், சிஐடியு மாவட்ட செயலாளர் பி.துரைசாமி, ஐஎன்டியுசி மாவட்ட தலைவர் டி.விஜயகுமார், எச்.எம்.எஸ் மாவட்ட செயலாளர் எஸ்.ராமசாமி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**சோமரசம்பேட்டை:** ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் மணிகண்டம் ஒன்றிய குழு சார்பில் சோமரசம்பேட்டை ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில் இருந்து தமிழ்நாடு மாநில குழு உறுப்பினர் எம்.ஆர்.முருகன் தலைமையில் மத்திய அரசுக்கு

>> தொடர்ச்சி 13ம் பக்கம்

>> 12ம் பக்கத் தொடர்ச்சி

எதிரான கோஷங்கள் எழுப்பி ஊர்வலமாக சென்று சோமரசம்பேட்டை பெரியார் சிலை அருகில் 300க்கும் மேற்பட்டோர் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

போராட்டத்தை துவக்கி வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் உரையாற்றினார். போராட்டத்தில் சங்க மாவட்ட செயலாளர் சி.செல்வக்குமார், நிர்வாகக் குழு உறுப்பினர் ஏ.அண்ணாதுரை ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருவண்ணாமலை :** திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அஞ்சல்அலுவலகம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் ஏ.ரகமத்துல்லா தலைமை தாங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் வி. முத்தையன், எம்.பிரியா, கே.வேலியம்மாள், ஏ. சந்திரா, வி. முனியம்மாள், பி. ஆயிஷா – ஆர். விஜயா கண்டன உரையாற்றினர். இதில் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**ஈரோடு:** பெருந்துறை பெருந்துறையில் பழைய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு ஐஎன்டியுசி மாவட்ட துணைத் தலைவர் என்.சுப்பிரமணி தலைமை வகித்தார். பேரணியை திமுக பெருந்துறை தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பி.சாமி துவக்கி வைத்துப் பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.திருநாவுக்கரசு, மதிமுக பொறுப்பாளர் வி.எம்.கந்தசாமி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, எல்பிஎப் பொறுப்பாளர் சி.மனோகரன், சிஐடியு மாவட்ட உதவிச் செயலாளர் கே.இரவி, டிடிஎஸ்எப் மாவட்ட தலைவர் ஆர்.கலைமுருகன், ஏஐடியுசி சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ்.பொன்னுசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் துணைத் தலைவர் சி.எம்.துளசிமணி, தற்சார்பு விவசாயிகள் சங்கத் தலைவர் கி.வே.பொன்னையன், புரட்சிகர விவசாயிகள் விவசாயத் தொழிலாளர் முன்னணி பொறுப்பாளர் ஏ.செல்வராஜ் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

**ஈரோடு:** ஈரோட்டில் வீரப்பன் சத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு எல்பிஎப் மாவட்டப் பொருளாளர் செ.தங்கமுத்து தலைமை வகித்தார். இதில் ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, ஐஎன்டியுசி கே.ஆர்.தங்கராஜ், எல்பிஎப் சே.கோபால், எச்எம்எஸ் பி.சண்முகம், சிஐடியு என்.முருகையா, எல்டியுசி ஏ.கோவிந்தராஜ், டிடிஎஸ்எப் கே.குணசேகரன் ஆகியோர் உரையாற்றினர்.

**சென்னிமலை:** சென்னிமலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தற்சார்பு விவசாயிகள் சங்கத் தலைவர் கி.வே.பொன்னையன் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ்.பொன்னுசாமி, எல்பிஎப் சி.மனோகரன், எல்பிஎப் கைத்தறி நெசவாளர்கள் சங்கம் கே.எஸ்.பி.ராஜேந்திரன், சிஐடியு கே.ரவி, ஐஎன்டியுசி என்.சுப்பிரமணி, எம்எல்எப் ஓ.கே.எம்.சேகர், டிடிஎஸ்எப் ஏ.பெரியசாமி, பு.வி மற்றும் வி.தொ.மு ஏ.செல்வராஜ் ஆகியோர் உரையாற்றினர். திமுக ஒன்றியச் செயலாளர் ஆர்.பிரபு, சிபிஐ ஒன்றியச் செயலாளர் மா.நாகப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மு.பாரதி நன்றி கூறினார். ஏஐடியுசி விசைத்தறி சங்க கே.எம்.ஜெயபாரதி உட்பட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

**திருவண்ணாமலை:** திருவண்ணாமலையில் நடைபெற்ற பொது வேலைநிறுத்த மறியல் போராட்டத்திற்கு எல்.பி.எப். சங்க மண்டலச் செயலாளர் க.சௌந்தர்ராஜன் தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்ட செயலாளர் வே. முத்தையன், வி.தொ.ச. மாவட்டச் செயலாளர் இரா.தங்கராஜ், ஆர்.செல்வராஜு, எம்.ஆரோக்கியசாமி, சிஐடியு சார்பில் காங்கேயன், ஆனந்தன், நாகராஜ், சேகர், மற்றும் அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

**திருவாரூர் :** திருவாரூர் பழைய பேருந்து நிலையம் அருகில் மத்திய தொழிற்சங்கங்களின் அகில இந்திய பொது வேலை நிறுத்தம் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் அனைத்து தொழிற்சங்கம் சார்பில் நடைபெற்றது. தமிழ்நாடு ஏஐடியுசி மீனவர் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மீனவர் தொழிலாளர்கள் பங்கு கொண்டனர்.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் அவர்களை நேரில் சந்தித்து தமிழ்நாடு ஏஐடியுசி மீனவர் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கோரிக்கை மனு வழங்கப்பட்டது. இதில் தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பி.சின்னதம்பி மற்றும் சங்க மாவட்ட நிர்வாகிகளான வி.அருள்ராஜ் . பி. நாகூரான், எம்.கலைவாணி, ஆர். பரமசிவம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கோவை மாநகராட்சி 48 வது வார்டு கவுன்சிலர் அலுவலகம் திறப்பு

கோயம்புத்தூர் மாநகராட்சி 48 வது வார்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்ட பிரபா ரவீந்திரன் வெற்றி பெற்றார்.

இந்த வார்டில் மக்கள் பணிகளை மேற்கொள்ள சித்தாபுதூர் வி. கே. கே. மேனன் ரோட்டில் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சிக்கு தி.மு.க.வின் கிளை செயலாளர் எம். சசிகுமார் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் சிபிஐ மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர். சுதர்சன், மத்திய மண்டல செயலாளர் கே. ரவீந்திரன், கிளை செயலாளர் ராஜேந்திரன், காங்கிரஸ் சர்க்கிள் தலைவர் சௌந்தரராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சிவகுமார், எம். டி. எம். கே. வாசுதேவன், தி.மு.க. ஜெ.பி. கதிரவன், மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன், என். காளிமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற ஓவியப் போட்டி

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை மாவட்ட 10 வது மாநாடு ஏப்ரல் 10 ல் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு கோவை மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி வெங்கிட்டாபுரம் பா. கமலநாதன் நினைவு மேனிலைப்பள்ளி வளாகத்தில் மார்ச் 25 ல் நடைபெற்றது.

105 மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். சுற்றுச்சூழல், இயற்கை, மதநல்லிணக்கம் ஆகிய தலைப்புகளில் மாணவர்கள் வரைந்த ஓவியங்களில் சிறந்த ஓவியங்கள் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் பாராட்டுச் சான்றிதழ் அப்போதே வழங்கப்பட்டன. பரிசு பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட மாநாட்டில் பரிசுகள் வழங்கப்படும்.

மேனாள் மாநகராட்சி உறுப்பினர் கே.புருசோத்தமன், இந்நாள் உறுப்பினர் மல்லிகா புருசோத்தமன், ஓவியர்கள் செல்வின், ஞானி, அசரப் அலி, பேரா.த.திலிப்குமார், மாணவர் பெருமன்றத்தின் மௌ.குணசேகர், கலை அஸ்வினி, பிரசாந்த், பூபேஷ் மன்றத் தோழர்கள், ப.பா.ரமணி, எல்.ஜான் ஆகியோர் போட்டி நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

# வி.தொ.ச. சார்பில் கோரிக்கை ஆர்ப்பாட்டம்




தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில், 100 நாள் வேலையை 200 நாட்களாக உயர்த்த வேண்டும், தினக்கூலியை ரூ.600 ஆக உயர்த்த வேண்டும், இந்த திட்டத்தை பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளிலும் விரிவுபடுத்த வேண்டும், ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டும், அரசு புறம்போக்கு இடங்களில் குடியிருப்போருக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும், 58 வயதான விவசாயத் தொழிலாளர்களுக்கு நிபந்தனையின்றி ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**மணப்பாறை:** மணப்பாறை தாலுகா வையம்பட்டி ஒன்றிய அலுவலகம் முன்பு தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் ஒன்றிய செயலாளர் ஜெயலெட்சுமி தலைமை வகித்தார். தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க கொடியை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழ் மாநில விவசாய சங்க பொதுச் செயலாளர் பெரிய சாமி ஏற்றி வைத்து உரை நிகழ்த்தினார். திருச்சி மாவட்ட செயலாளர் கணேசன், மாவட்ட தலைவர் சண்முகானந்தா, போக்குவரத்து கழகத்தினுடைய பொதுச் செயலாளர் சுப்பிரமணியன், சிபிஐ நகர செய லாளர் ஜனசக்தி உசேன், வையம்பட்டி ஒன்றிய துணை செயலாளர் ஸ்டீபன், சேகர், கட்டுமான சங்க மாவட்ட துணை செயலாளர் வீராச்சாமி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

**வேலூர்:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் வேலூர் மாவட்ட அமைப்பு சார்பில் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்க துணைத் தலைவர் ரோஸ் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர்கள் குடியாத்தம் துரை செல்வம், மாதனூர் குமார், பேர்ணாம்பட்டு பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் லதா எக்ஸ்.எம்.எல்.ஏ. கோரிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினார். சிபிஐ வேலூர் மாநகர செயலாளர் ஏழுமலை, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணி ,மாதர் சங்க மாவட்ட தலைவர் சரோஜா, முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ரெட்டிஅள்ளி கிராம மக்களுக்கு மனைவழங்கி, வீடுகள் கட்டித் தருக!

## ● தருமபுரி மாவட்ட சிபிஐ கோரிக்கை


இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்டக்குழு கூட்டம் மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில செயலாளர் இரா.முத்தரசன்,மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் ஜி.பழனிசாமி,ந.நஞ்சப்பன் ஆகியோர் கலந்து கொண்டு கட்சி செயல்பாடுகள்,இன்றைய அரசியல் நிலை குறித்து பேசினார்கள்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தருமபுரி வட்டம்,ஏ. ரெட்டிஅள்ளி கிராமத்தில் 1000க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த பட்டியலின மக்களுக்கு வீட்டுமனை ஒதுக்கப்பட்டு குடியிறுந்து வந்தனர்.கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு மாவட்ட நிர்வாகம் திடீரென பட்டாவை ரத்து செய்து வெளியேற்றப்பட்டனர். வெளியேற்றப்பட்ட மக்களுக்கு மீண்டும் வீட்டுமனை பட்டா வழங்கி வீடு கட்டி கொடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தருமபுரியில் சிப்காட் தொழிற்பேட்டை திட்டத்தை நடைமுறைபடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளதை விரைவாக நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒகேனக்கல் கூட்டு குடிநீர் முதல் திட்டம் முழுமையடையாத நிலையில் 2வது ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை விரைவாக தொடங்கி அனைத்து மக்களுக்கும் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.காவிரி உபரி நீர் திட்டத்தை தொடங்கி அனைத்து ஏரிகளிலும் நீர் நிரப்பி விவசாயத்தை மேம்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர் எஸ்.தேவராசன்,மாவட்ட துணை செயலாளர் எம்.கோபால், மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மாது, சி.விஸ்வநாதன், எம்.ஏ.காதர் மற்றும் மாவட்ட நிர்வாகக்குழு, மாவட்டக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.













## பெரியாரின் பேரன்பு

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள், பெண் அடிமைத்தனத்தை வேரோடு அகற்ற வேண்டும் என நினைத்தவர். மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு என முழங்கியவர். பெரியார் மனிதர்களின் மீது கொண்ட பேரன்பு தான் அவரது வாழ்க்கை போராட்டம் ஆகும்.

சமநீதி, சமத்துவம், சீர்திருத்தம்,பெண் விடுதலை எனும் நான்கு கோட்பாடு களை உயர்த்திப் பிடித்தவர் பெரியார். மூடநம்பிக்கையின் முனை முறித்து போட்ட கோடாரி பெரியார்.

'சிந்திப்பவன் மனிதன், சிந்திக்க மறுப்பவன் மதவாதி, சிந்திக்க பயப்படுபவன் கோழை' என்றவர் பெரியார். மனிதனின் சிந்தனையின் விளைவுதான் ஆரியப் பட்டாவும், ஆப்பிள் போனும். ரைட் சகோதரர்கள் சிந்தித்து இருக்காவிட்டால் ஆகாய விமானங்கள் நமக்கு கிடைத்திருக்குமா என்ற வினாவை நூலாசிரியர் எழுப்புகிறார்.



மனிதன் பிறக்கும்போது சுதந்திரமாய் பிறக்கிறான். பிறகு சமுதாயத்தில் ஒரு சாராருக்கு கைகட்டு, வாய்கட்டு போட்டு சுதந்திரமாக பேசுவதற்கு வாய்ப் பூட்டு போட்டு உள்ளனர் சிலர், அவர்கள்தான் உண்மையில் மைனாரிட்டி. மெஜாரிட்டி அடிமைகளாக வாழ நேர்ந்தது. ஏன் தன்மானம், சுயமரியாதை, ஏன்? எதற்கு என்ற கேள்வி கேட்க உரிமை மறுக்கப்பட்டது என்ற கேள்வியை மனிதர்களை எழுப்ப தூண்டினார். மெய் எது,பொய் எது என்று கேள்வி கேட்க சொன்னவர் பெரியார் .

'கல்வி இல்லாததால் அறிவை இழந்தோம்,அறிவில்லை வளர்ச்சி இல்லை, வளர்ச்சி இல்லை சொத்து இல்லை,சொத்து இல்லை சூத்திரர்கள் ஆனோம்' என்பதை எடுத்துரைத்தவர் பெரியார்.

மனிதன் முதலில் தன்னை நம்ப வேண்டும். மனிதனுக்கு வலதுகை இருக்கிறது, இடது கை இருக்கிறது. மூன்றாவது ஒரு கை கண்டிப்பாக வேண்டும் அது தன்னம்பிக்கை. இந்த தன்னம்பிக்கை வாழ்வில் சாதிக்க தூண்டும். கெடுதல் எண்ணங்களை அகற்றும்.நல்லெண்ணங்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும். தன்னம்பிக்கை விடுத்து சாமி சம்பிரதாயங்களில் நம்பிக்கை கொள்வதை மனிதர்கள் முற்றாக விட்டொழிக்க வேண்டும் என்பதை வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தியவர் தந்தை பெரியார்.

பெரியாரின் போராட்ட வாழ்க்கை என்பது மனிதர்கள் மீது கொண்ட பேரன்பினால் தான். இதை இந்நூலாசிரியர் ஞா.சிவகாமி பெரியாரின் பேரன்பு என்கிற இந்நூலில் குறித்துள்ளார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

**-இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : ஞா. சிவகாமி**
**வெளியீடு : ஏகம் பதிப்பகம், 3,பிள்ளையார் கோயில் தெரு, 2 ஆம் சந்து, முதல் மாடி,திருவல்லிக்கேணி, சென்னை–5**
**பக்கங்கள் : 96 விலை : ரூ.100**

# நூல் நயம்

## பகத்சிங் மற்றும் தோழர்கள்

இந்திய நாட்டின் அடிமை விலங்கு ஒடிக்க ஆர்த்தெழுந்த ஆயிரமாயிரம் இளைஞர்களில், ஒளிதரும் எரி நட்சத்திரமாக ஜொலிப்பவர்கள் பகத்சிங் மற்றும் அவரது தோழர்கள். இந்திய இளைஞர்களின் உள்ளத்தில் இவர்களது பெயர்களே எழுச்சியும் கிளர்ச்சியும் ஏற்படுத்தும். அந்த மகத்தான இளைஞர்களை நமக்கு அறிமுகப்படுத்தும் நூலே பகத்சிங் மற்றும் தோழர்கள் என்னும் இந்நூல்.

நாளை மலர இருக்கும் பொன்னுலகை காணுகிற பாக்கியம் இல்லாதிருந்தும். உவப் போடு தங்களுடைய இன்னுயிரை ஈந்தவர்கள் இவர்கள்.

இந்த மாவீரர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள். ஒருமுறை பகத்சிங்கும் சந்திர சேகர ஆசாத்தும் தமாஷாக பேசிக்கொண்டனர். ஆசாத் உடல் பருமன்மிக்கவர் அதை வைத்து பகத்சிங்.' பண்டிட்ஜி உங்களை தூக்கில் போட வேண்டுமானால் ஒரு கயிறு போதாது. இரண்டு கயிறுகள் தேவைப் படும்' என்று கூறினார்.உடனே, இடைமறித்த ஆசாத். பகத்சிங்கை பார்த்து.'தூக்குக்கயிறு எல்லாம் உனக்குத்தான். என்னை பொறுத்தவரை எனது விதி தீர்மானிக்கப்பட்டு விட்டது. எனக்காக துப்பாக்கி குண்டுகள் காத்திருக்கின்றன' என்று கூறினார். நாட்டுக்காக உயிரை இழப்பதற்கு கூட சித்தமாய் நின்ற இந்த மாவீரர்களின் துணிச்சலை எண்ணி நாம் பெருமைப்பட தானே வேண்டும்.



பகத்சிங், சிவவர்மா, ஜதின் தாஸ்,துர்கா தேவி, பகவதி சரண், பி.கே. தத், மகாவீர் சிங், யஷ்பால் சந்திரசேகர் ஆசாத், ராஜகுரு,சுகதேவ், தெகால்சிங்,தன்வந்திரி,விஜயகுமார் சின்கா போன்ற எண்ணற்ற வீர தியாகிகளை நமக்கு அறிமுகப் படுத்துகிறார் நூலாசிரியர்.

தேசத்தின் விடுதலைக்காக எத்தனை வீர சாகசங்கள், எத்தனை அர்ப் பணிப்பு மிக்க துணிச்சலான போராட்டங்கள், தலைமறைவு வாழ்க்கையின் துன்பம் துயரங்கள், காவல்துறை கண்காணிப்புகள், கெடுபிடிகள்,துரோகங்கள் இவை அனைத்தையும் தாங்கி தான் இந்த மகத்தான மனிதர்கள் விடுதலைப் போராட்டக் காலத்தில் வீரசமர் புரிந்தனர். ஆண் தோழர்களுக்கு இணையான பெண் தோழர்களின் வீரத்தையும் அர்ப்பணிப்பையும் எண்ணி நாம் மெய் சிலிர்த்துப் போகிறோம்.

ஊருக்கு உழைத்திடல் யோகம் என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க வாழ்ந்த அந்த மகத்தான மனிதர்களை நாம் அறிந்து கொள்வதற்கு இந்நூல் பெரிதும் உதவும். எஸ். ஏ. பெருமாள் எழுதிய பகத்சிங் மற்றும் தோழர்கள் எனும் இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்.

**- சமரன்**

**நூலாசிரியர் : எஸ்.ஏ. பெருமாள்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை–14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 172 விலை : ரூ.120**

**வாரம் தோறும் வெளிவரும்**
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்

### உழைக்கும் மக்களிடையே உருவாகும் முரண்பாடுகள்




# ஏகாதிபத்திய சக்திகளுக்கே சாதகமாகும்

### பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் இம்தாத் குவாசி எச்சரிக்கை



அரசியல் மற்றும் அரசின் செயல்பாடுகளில் இராணுவத் தளபதிகள் தலையீடு செய்கிற ஒரு நாட்டில், ஏகாதிபத்தியத்தின் பிடியில் கட்டுண்டு, நிலப்பிரபுத் துவ மரபுகளில் சிக்கிக் கொண் டிருக்கும் ஒரு நாட்டில் ஜன நாயகத்தை நிறுவுவது சாத்தி யமன்று என்று பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சின் பொதுச் செயலாளர் தோழர் இம்தாத் குவாசி கூறியுள்ளார்.

லாகூரில் நடைபெற்ற அக்கட்சியின் பஞ்சாப் மாகாணக்குழு கூட்டத்தில் அவர் பேசியதன் சுருக்கம் பின்வருமாறு:

பாகிஸ்தானில் ஆளும்கட்சிமற்றும்எதிர்க்கட்சிக்கிடையே தற்போது நடைபெற்று வரும் அதிகாரத்திற்கான போட்டியானது உண்மையில் ஏகாதிபத்திய முகாம்கள் மற்றும் அவற்றின் ஒதுக்கப்பட்ட படைத் தளபதிகளுக்கும் இடையே நடைபெறும் அதிகாரத்திற்கான போட்டியாகும்.

இம்ரான்கான் அரசாங்கத்தை நிறுவி தேசத்தின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து, சர்வதேச நிதியம் உள்ளிட்ட ஏகாதிபத்திய நிதி அமைப்புகளிடம் நாட்டை அடகு வைத்து, இரட்டை வேடம் பூண்ட சில குழுக்கள் இப்போது தங்களின் புதிய ஏகாதிபத்திய எஜமானர்களிடமிருந்து செல்வங்களைப் பெறுவதற்காக நாட்டை மற்றொரு நெருக்கடியில் ஆழ்த்துகிறார்கள்.

அதிகாரவெறி பிடித்த ராணுவத் தளபதிகளின் வியாபார மனப்பான்மை பாகிஸ்தானை அழித்து வருகிறது. ஏகாதிபத்திய நலன்கள் மற்றும் செயல் திட்டத்தை நடைமுறைப் படுத்துபவர்களாக ராணுவத் தளபதிகள் செயல்பட்டு வருகிறார்கள். ஆளும் வர்க்கக் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைமைகள் ஏகாதிபத்தியத்தின் கைப்பாவைகளாக உள்ள சூழலில் ராணுவத் தளபதிகள் ஏகாதிபத்திய நலன்களை நிறைவேற்றுபர்களாக உள்ளனர்.

இவர்களிடம் மக்கள் நலனுக்கான செயல்திட்டம் எதுவும் இல்லை. அனைத்து ஜனநாயக வழிமுறைளையும் தகர்த்தெறிந்துவிட்டு, தேசத்தின் மீது இம்ரான் அரசாங்கம் திணிக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தால் பணவீக்கம் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற தீவிரமான சூழலை மக்கள் எதிர்கொண்டு வருகிறார்கள். அரசாங்கத்தின் ஒவ்வொரு மோசமான நடவடிக்கைகளுக்கும் நாடாளுமன்ற ஒப்புதலைப் பெற எதிர்க்கட்சியும் உதவியது.

ஏகாதிபத்திய எஜமானர்களின் தந்திரம் தற்போது மாறியுள்ளதால், எதிர்க்கட்சி முழுபலத்தையும் திரட்டிப் போராடத் தயாராகி இருக்கிறது. இம்ரானும் அரசாங்கத்தின் அனைத்து தோல்விகளுக்கும் முழு பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார். மூன்று ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் அடக்குமுறைகளை எதிர்கொண்டு வருகிறார்கள்: தேசம் சீர்குலைந்து வருகிறது. எதிர்க்கட்சிக்கு மக்கள் ஆதரவு அவசியம் என்றபோதிலும், பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயல்திட்டம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால், அதிகாரத்திற்கான இந்த யுத்தத்தில் மக்கள் நலனுக்கான செயல்திட்டம் என்பது இல்லவே இல்லை.

ஆளும் வர்க்கம் மற்றும் அதன் குழுக்களுக்கிடையே நடைபெறும் இந்தப் போட்டியில், பாகிஸ்தானின் உழைக்கும் மக்கள் எந்த ஒரு குழுவுக்கும் வாழ்க, ஒழிக கோஷமிடுவதைத் தவிர்த்திட வேண்டும். உழைக்கும் மக்களிடையே உருவாகும் முரண்பாடுகளை ஏகாதிபத்திய சக்திகள் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும். எனவே, உழைக்கும் மக்கள் இந்த அதிகாரப் போட்டியில், உற்று நோக்கும் பார்வையாளர்களாக இருப்பதுடன் அடக்குமுறையாளர்களை எதிர்கொள்ள தங்களை அணிதிரட்டி சமுதாய மாற்றத்திற்கான போராட்டத்தைத் தொடங்கிட வேண்டும் என்று பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறது.

கட்சிகளும், ஆட்சிகளும் மறுவதால் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

இவ்வாறு பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பேசினார்.




## கல்வி எமது அடிப்படை உரிமை!

### தலீபான்களுக்கு எதிராக ஆப்கன் மாணவிகள் போர்க்குரல்

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூல் நகரில் கடந்த மார்ச் 23 அன்று திறக்கப்பட்ட பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் சில மணி நேரங்களுக்குள்ளாகவே மூடப்பட்டன. தலீபான்களின் இந்த முடிவுக்கு இதுவரை தெளிவான காரணம் எதுவும் கூறப்படவில்லை.

கல்வித்துறை அமைச்சகத்தின் இந்த முடிவு தங்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம் என்று மாணவிகள் கருத்து தெரிவித்துள்ளார்கள். மேலும், "பள்ளிகளைத் திறந்திடுவீர்! நீதி வழங்கிடுவீர்!" என்று முழக்கமிட்டவாறு காபூல் நகரின் சிட்டி சதுக்கத்தில் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"கல்வி எமது அடிப்படை உரிமை, அரசியல் விளையாட்டன்று" என்று எழுதப்பட்ட பதாகைகளை உயர்த்திப் பிடித்தவாறு அவர்கள் பேரணியாகச் சென்றனர்.

ஒவ்வொருவருக்கும் கல்வி பெறும் உரிமை இருக்கிறது என்று முஹமது நபி கூறியிருப்பதாகவும், தலீபான்கள் அந்த உரிமைகளைத் தங்களிடமிருந்து பறித்து விட்டார்கள் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மாணவி ஒருவர் கூறியுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபடும் ஆப்கன் பெண்களைத் தலீபான்கள் ஒடுக்கிவிட முடியாது என்று அவர்கள் உறுதிபடக் கூறுகிறார்கள்.

## உக்ரைன்: மரியுபோல் துறைமுக நகரின் முக்கியத்துவம்

ரஷ்ய படைகள் மரியுபோல் துறைமுக நகரத்தைச் சுற்றி வளைத்து விட்டன. அந்நகரப் பகுதியில் சுமார் 70 சதவீதம் ரஷ்ய படைகளின் கட்டுப்பாட்டில் வந்து விட்டது. நகரின் மையப் பகுதியில் கடும் இராணுவ மோதல் நடந்து வருகிறது.

மரியுபோல் துறைமுக நகரம் அசோவ் கடற்கரை பகுதியில் கிரிமிய தீபகற்பம் மற்றும் டானெட்ஸ்க், லுகான்ஸ்க் பகுதிகளுக்கு இடையில் அமைந்துள்ளது.

கடந்த பிப்.24 அன்று உக்ரைன் மீதான ரஷ்யப் போர் தொடங்கியது. பெலாரஸ் எல்லையிலிருந்து உக்ரைனின் வடக்குப் பகுதியின் மீதும், டான்பாஸ் பிரதேசத்திலிருந்து உக்ரைனின் கிழக்குப் பகுதியின் மீதும், கிரிமியாவிலிருந்து உக்ரைனின் தெற்கு பகுதியின் மீதும் ரஷ்யா அதன் ராணுவத் தாக்குதலைத் தொடர்ந்தது. இதுதான் ரஷ்ய ராணுவத்தின் மும்முனைத் தாக்குதல் வியூகம் ஆகும்.

போர் தொடங்கி ஒரு மாதம் முடிந்த நிலையில் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் ரஷ்ய ராணுவம் பெரிய அளவிற்கு முன்னேறிச் செல்ல முடியவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் பின்னணியில் உக்ரைனின் கிழக்கு பகுதியில் உள்ள துறைமுக நகரமான மரியுபோல் ரஷ்ய ராணுவத்தால் முற்றுகையிடப்பட்டது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

கேந்திரமான பகுதியாக மரியுபோல் நகரம் கருதப் படுவதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

1. இந்நகரம் சர்ச்சைக்குரிய பகுதியான டானெட்ஸ்க் குடியரசுப் பகுதியில் அமைந்துள்ளது.

2. இந்நகரில்தான் அசோவ் படைப்பிரிவின் தலைமையகம் இயங்கி வருகிறது.

3. டான்பாஸ் பகுதியில் இருந்து கிரிமியாவுக்கு ஒரு நில வழித் தொடர்பு ஏற்படுத்திட ரஷ்யா முயலும் பட்சத்தில், மரியுபோல் நகரின் புவிசார் அமைவிடம் முக்கியத்துவம் பெறுகிறது.

4. மரியுபோல் நகரைக் கைப்பற்றிய பிறகு கருங்கடல் கரையோரப் பகுதியின் சுமார் 80 சதவீதம் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடும்.

அசோவ் படைப்பிரிவு உள்ளிட்ட உக்ரைன் ராணுவம் பின்வாங்குவதால் மிக விரைவில் மரியுபோல் துறைமுக நகரம் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும் என்று போர் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் அமெரிக்க ஆய்வு நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# அனைத்து மத்திய தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில்

# மாபெரும் மறியல் போராட்டம்


தென்சென்னை


விருதுநகர்



திருத்துறைப்பூ


காஞ்சிபுரம்


மயிலடுதுறை


பரமக்குடி


திருப்பூர்


கிருஷ்ணகிரி

**பொதுத் துறையை தனியாருக்கு விற்பதை எதிர்த்தும், விலைவாசி, பெட்ரோல், டீசல், எரிவாயு விலை உயர்வை கண்டித்தும், அமைப்புசாரா நல வாரியங்களை சீர்குலைப்பது எதிர்த்தும், புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்ஷன் திட்டத்தை நடைமுறைப்படுத்திட கோரியும், தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்தியதை கைவிட கோரியும், மின்சார சட்டத் திருத்த மசோதா, மோட்டார் வாகன சட்டத் திருத்தத்தை ரத்து செய்திட கோரியும், விவசாய விளை பொருளுக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் செய்திட கோரியும், நூறுநாள் வேலைக்கான ஊதியத்தை ரூ.600 ஆக உயர்த்தி வழங்குவதுடன், நகராட்சி, பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்த வேண்டும் என கோரியும் அனைத்து மத்திய தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் மார்ச் 28, 29 ஆகிய தினங்களில் மாபெரும் நாடுதழுவிய போராட்டம் நடைபெற்றது.**

**மத்திய சென்னை:** மத்திய சென்னையில், அண்ணாசாலை தலைமை தபால் நிலையம் அருகில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் ஏஐடியூசி மாநிலப் பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தென் சென்னை:** தென்சென்னை மாவட்டம் சார்பாக சைதை பனகல் மாளிகை அருகில் சிஐடியூ பொன்முடி தலைமையிலும், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் சி.சீனிவாசன், மாவட்டத் தலைவர் ஆர்.அழகேசன் முன்னிலையிலும் நடைபெற்றது ! டாக்டர் ஏ.ஆர்.சாந்தி(ஏஐடியூசி) மற்றும் அங்கன்வாடி போன்ற அமைப்புகளின் தலைவர்கள் உரையாற்றினர். வி.கே.கோபாலன், ஏ. பாஸ்கர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**திருவாரூர் :** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் கோ. பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணை தலைவர் கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., திருத்துறைப்பூண்டி சட்ட பேரவை உறுப்பினர் க.மாரிமுத்து, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவரும் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளருமான அ.பாஸ்கர், த.வி.ச. மாவட்ட துணைசெயலாளர் கே.ஆர்.ஜோசப், சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சி.ஜோதிபாசு, சிஐடியூ நகர பொறுப்பாளர் எம்.பி.கே.பாண்டியன் ஆகியோர் தலைமை ஏற்று நடத்தினர்.

திருவாரூர் மாவட்டம் பேரளம் கடைவீதியில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் ஏஐடியுசி கு.ராஜா, எஸ்.செந்தில், ஆர்.கணேஷ், எப்.அல்போன்ஸ் சிஐடியூ வைத்தியநாதன், சங்கர், ராமமூர்த்தி தலைமையில் மறியலில் ஈடுபட்டனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டத்தில் அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் மறியல் நடைபெற்றது. வத்திராயிருப்பில் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, கோவிந்தன், மகாலிங்கம், சேத்தூரில்

தொடர்ச்சி 12ம் பக்கம் >>

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 02.04.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57







## வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு

# புரட்சிகர வாழ்த்துக்கள்!

**மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் இதர தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:**

இரண்டு நாள் அகில இந்திய பொது வேலைநிறுத்தத்தில், நூதனமான பல முறைகளில், பங்கேற்று வெற்றி பெறச் செய்த ஊரக மற்றும் நகர்ப்புற தொழிலாளர்கள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், தனியார், பொதுத்துறை, அரசு துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள் என்று அனைத்து துறைகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் இதர துறை சார்ந்த தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசாங்கம் மற்றும் பி.பி.சி.எல் ஊழியர்கள் வேலை நிறுத்தத்திற்கு தடை விதித்துள்ள கேரள உயர் நீதிமன்றத்தின் ஆணை, காவல்துறையின் அத்துமீறல், எஸ்மா சட்டம், அச்சுறுத்தல்கள் என்று எண்ணற்ற இடர்ப்பாடுகளைக் கடந்து 20 கோடிக்கும் அதிகமான உழைக்கும் மக்கள் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்று உள்ளனர்.

வங்கி மற்றும் காப்பீட்டுத் துறை ஊழியர்கள் இந்தியா முழுவதும் ஒரு இடத்தில் கூட அலுவலகத்திற்குச் செல்லாமல், பணிகளை முற்றிலுமாக ஸ்தம்பிக்கச் செய்து உள்ளார்கள். நிலக்கரி, ஸ்டீல், எண்ணெய், எரிவாயு, சிமெண்ட் மற்றும் தொலைத்தொடர்பு துறை ஊழியர்கள் 28 ஆம் தேதி காலையில் இருந்தே மாபெரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அனைத்து மாநிலங்களிலும் மின்துறை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மகாராஷ்டிர மாநிலத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மின்துறை ஊழியர்கள் மீது எஸ்மா பாய்ந்தது.

தூத்துக்குடி மற்றும் பாரதீப் துறைமுகங்களில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இரயில்வே மற்றும் பாதுகாப்புத்துறை தொழிலாளர்கள் நாடு முழுவதிலும் உள்ள 1000 க்கும் மேற்பட்ட இடங்களில் பெருந்திரள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி உள்ளனர்.

அங்கன்வாடி, வீட்டு வேலை, கட்டுமானம், பீடி மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றதுடன், நாடு முழுவதிலும் பல 100 இடங்களில் இரயில் மற்றும் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எஸ்மா சட்டத்தின் அச்சுறுத்தலைத் துச்சமெனத் தூக்கியெறிந்த அரியானா மாநில சாலை போக்குவரத்து தொழிலாளர்கள் 28 ஆம் தேதி அதிகாலையில் இருந்து போக்குவரத்து பணிமனைகளில் இரண்டு நாட்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அசாம், ஹிமாச்சலப் பிரதேசம், உத்தர காண்ட் மற்றும் ஜம்முகாஷ்மீரில் நடைபெற்று வரும் நீர் மின் திட்டப்பணி தொழிலாளர்களும் மாபெரும் வேலைநிறுத் தத்தில் ஈடுபட்டனர். மகாராஷ்டிரம், கர்நாடகம்,




தமிழ்நாடு, தெலங்கானா மற்றும் ஹரியானா மாநிலங்களில் உள்ள தனியார் துறையைச் சார்ந்த பன்னாட்டு நிறுவன ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றனர். தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி, ஆந்திர பிரதேசம், தெலங்கானா, திரிபுரா, அஸ்ஸாம், ஹரியானா மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில், இதர மாநிலங்களில் உள்ள பல மாவட்டங்களில் முழு அடைப்பு போராட்டம் போன்ற நிலையை இந்த வேலைநிறுத்தப் போராட்டம் ஏற்படுத்தியது.

கோவா, கர்நாடகம், மகாராஷ்டிரம், சத்தீஷ்கர், பஞ்சாப், பீகார், ராஜஸ்தான், மேற்கு வங்கம், மேகாலயா மற்றும் அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் வேலைநிறுத்தம் முழுவீச்சில் நடைபெற்றது. சிக்கிம் மாநில பாதுகாப்பு பணியாளர்களும் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றனர். தமிழ்நாட்டில் 300 க்கும் மேற்பட்ட இடங்களில் மத்திய அரசு அலுவலகங்கள் முன் அரசாங்க ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த முற்றுகைப் போராட்டத்தில் சுமார் 50,000 அரசாங்க ஊழியர்கள் பங்கேற்றனர். தபால்துறை, வருமான வரித்துறை, தணிக்கை துறை மற்றும் இதர துறைகளைச் சார்ந்த ஊழியர்களும் இப்போராட்டங்களில் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

மீன்பிடித் தொழிலாளர்கள் அதிகாலையிலிருந்தே கடலுக்குச் செல்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் முடிவின்படி தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்த விவசாயிகள், அவர்களின் 6 கோரிக்கைகளை வலியுறுத்தும் வண்ணம், ஊரகப் பகுதிகளில் பொது வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக மக்களை அணிதிரட்டினர். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுடன் இணைந்து விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் இரயில் மற்றும் சாலை மறியல் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடையே ஆங்காங்கே தொழிற்சங்கத் தலைவர்கள் கண்டன உரையாற்றினார்கள். இந்திய மற்றும் அயல்நாட்டு கார்ப்பரேட் நிறுவனங்கள் பயனடைவதற்காக மத்தியில் உள்ள பா.ஜ.க தலைமையிலான அரசாங்கம் உள் கட்டமைப்புகள் உள்ளிட்ட தேசிய சொத்துக்கள் மற்றும் தேசிய வளங்களை விற்றுவிட முயற்சிப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தொழிலாளர் சட்டங்களில் செய்யப்படும் மோசமான மாற் றங்கள், தொழிற்சங்கங்களை பலவீனப்படுத்துதல், வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை பறிப்பு ஆகியவற்றால் தேசிய வளங்களை உருவாக்கும் தொழிலாளி வர்க்கமானது, அதனைத் தற்காத்துக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது. தொழிலாளர் குரல் நெறிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் புள்ளிவிவரங்களின்படி, வேலையின்மை 12 சதவிகிதமாகவும், அதில் 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் மிக அதிகமாக உள்ளார்கள்.

ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி இரண்டு வாரங்களுக்குள்ளாகவே, பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை மீண்டும் உயர்த்தப்பட்டது. கார்ப்பரேட் நிறுவனங்களிடம் பொதுத்துறை நிறுவன கட்டமைப்புகளை ஏறக்குறைய இலவசமாகத் தாரை வார்த்திட தேசிய நிதிமயமாக்கல் திட்டம் துரிதப்படுத்தப்படுகிறது.

ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் மத்திய அரசாங்கத்திற்கு அளித்துள்ள ஊக்கம், மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் நிலங்களை விற்பதற்கான கொள்கையை வெளியிடச் செய்துள்ளது. தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கான வட்டி விகிதம் 8.5 சதவிகிதம் என்பதிலிருந்து 8.1 ஆக குறைக்கப்பட்டுள்ளது. வங்கிகள் தனியார்மயம் தீவிரப் படுத்தப்படுகிறது.

எல்.ஐ.சி நிறுவன பங்குகளும் கணிசமான அளவிற்கு விற்கப்பட உள்ளது.

டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தர் பகுதியில் மார்ச் 29 அன்று தொழிற்சங்கங்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் ஏ.ஐ.டி.யு.சி பொதுச் செயலாளர் தோழர் அமர்ஜீத் கவுர் உள்ளிட்ட தலைவர்கள் கண்டன உரை நிகழ்த்தினார்கள். மாநிலங்களவை உறுப்பினரான தோழர் பினாய் விஸ்வம் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் ஹன்னான் மொல்லா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

தேசத்தைப் பாழாக்கியதோடு மட்டுமின்றி, பல்வேறு சமய நம்பிக்கைகள், பண்பாடுகள் மற்றும் மொழிகளுடன் நல்லிணக்கத்தோடு வாழ்ந்து வரும் இந்திய மக்களைப் பிளவுபடுத்திட, அரசியலமைப்பு சட்ட விழுமியங்களை அழித்திட முயலும் மத்திய கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகத் தீவிரமான போராட்டங்களை நடத்திட தொழிலாளர்கள்விவசாயிகள் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவதே இன்றைய காலத்தின் கட்டாயம் என்று தொழிற்சங்கத் தலைவர்கள் முழங்கினர்.

இவ்வாறு கூட்டமைப்பு சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.







Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.